# பெரியார் தொலைநிலைக் கல்வி நிறுவனம்
# (PRIDE)

## பெரியார் பல்கலைக்கழகம்
**சேலம் – 636 011.**

## இளங்கலை ஜோதிடவியல்
## முதலாமாண்டு
## தாள் – 3 : பஞ்சாங்கம்

புத்தகம் எழுதியவர் :
**தி. வித்யாசாகரமூர்த்தி, M.A, M.Sc.**
ASTROLOGY
Jalakandapuram
Salem Dt.

**இளங்கலை ஜோதிடவியல்**

**முதலாமாண்டு**

**தாள் – 3 : பஞ்சாங்கம்**


| வரிசை எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| **கூறு – 1** | **பஞ்ச அங்கங்கள்** | |
| 1 | திதி | |
| 2 | நாள் (or) வாரம் | |
| 3 | நட்சத்திரம் | |
| 4 | யோகம் | |
| 5 | கரணம் | |
| **கூறு – 2** | **பஞ்சாங்க புத்தகங்கள்** | |
| 1 | படிக்கும் முறை | |
| 2 | நவநாயகர்கள், தியாஜ்ஜியம் | |
| 3 | ருதுகாலப்பலன்கள் | |
| 4 | பஞ்சபட்சி | |
| 5 | சகுணங்கள் | |
| **கூறு – 3** | **காலங்கள்** | |
| 1 | நல்ல நேரங்கள் | |
| 2 | ஆண்டுகள் | |
| 3 | அயனங்கள் | |
| 4 | ருதுக்கள் | |
| 5 | மாதங்கள் | |
| **கூறு – 4** | **திருமணப் பொருத்தம்** | |
| 1 | திருமண வகைகள் | |
| 2 | தசவித பொருத்தம் | |
| 3 | தோஷங்கள் | |
| 4 | திருமண பொருத்த விதி விளக்குகள் | |
| 5 | தற்கால திருமணப் பொருத்தம் | |
| **கூறு – 5** | **முகூர்த்தம்** | |
| 1 | முகூர்த்த விதிகள் | |
| 2 | தாராபலன்கள், சந்திராபலன்கள் | |
| 3 | லக்ன தேர்வுகள் | |
| 4 | சுப காரியங்கள் தேர்வு விதிமுறை | |

## இளங்கலை ஜோதிடவியல்

## முதலாமாண்டு

## தாள் – 3 : பஞ்சாங்கம்

பஞ்சாங்கம் என்றால் பஞ்ச + அங்கம் என்று பொருள். அதாவது ஜோதிடவியலின் அடிப்படை நூல்களில் இந்த கணித நூலும், மிகவும் முக்கியமானது ஆகும். முற்காலத்தில் 5 பெரும் பிரிவுகளை மட்டும் தன்னுள் கொண்டிருந்ததால் இதற்கு பஞ்சாங்கம் என பெயர் ஏற்படலாயிற்று. அதாவது, எந்த ஒரு காரியத்தை ஆரம்பிப்பதானாலும் அதற்கான முகூர்த்த நேரத்தை குறிக்க, நாள், நட்சத்திரம், திதி, கரணம், யோகம் ஆகிய ஐந்து அமைப்பையும் பார்த்து அதில் சுப தன்மையானவற்றை மிகுதியாக அமையும்படி முகூர்த்தம் அமைக்க பயன்பட்ட நூலே பஞ்சாங்கம் எனப்படும்.

தற்காலத்தில் பஞ்சாங்க நூல்களில் அனைத்து விதமான சின்ன சின்ன விசயங்களை உள்ளடக்கி உள்ளது. இதன் உதவியுடன்தான் தனி மனிதனுக்கு ஜாதகம் கணிக்கப்படுகிறது.

பஞ்சாங்கம் மூன்று வகைப்படும், அவை 1. வாக்கிய பஞ்சாங்கம், 2. திருக்கணித பஞ்சாங்கம், 3. எபிமெரிஸ் பஞ்சாங்கம் ஆகும்.

**வாக்கிய பஞ்சாங்கம்:–**

வாக்கிய பஞ்சாங்கம் என்பது பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் முனிவர்கள், ரிஷிகள், யோகிகள் ஆகியோர் தமது ஞான திருஷ்டியின் மூலம் பார்த்து அருளச் செய்த சுலோகங்கள் ஆகும். இதில் உள்ள கணித முறையை இன்றளவும் மாற்றாமல் கடைபிடித்து வருவது வாக்கிய முறையாகும். அதாவது, பூமி 23½ பாகை சாய்ந்த நிலையில் இருந்து அது தன்னை தானே சுற்றிக்கொண்டும் சூரியனையும் சுற்றி வருகிறது. இந்த 23½ பாகை சாய்மானத்தை அப்படியே கொண்டு கணிதம் செய்யும் முறை வாக்கிய பஞ்சாங்கம் எனப்படும்.

**திருக்கணித பஞ்சாங்கம்:–**

திருக் என்றால் பார்வை என்று பொருள் விஞ்ஞான வளர்ச்சி அதிகரிக்க துவங்கிய பின்னர், வானில் உள்ள கோள்கள், நட்சத்திரங்கள் போன்றவற்றை நாம் நவீன கருவிகள் மூலம் பார்த்து, பூமியின் சுழற்சி மற்றும் கோள்களின் அசைவுகளை கவனித்து, பூமியின் 23¼ பாகை சாய்வை நேர்நிலையில் நிறுத்தினால் ஏற்படும் கணித வித்யாசங்களை சரிசெய்து வெளியிடும் பஞ்சாங்கம் ஆகும். தற்காலத்தில் அதிக பயன்பாட்டில் உள்ளது இப்பஞ்சாங்கமே.

**எபிமெரிஸ் பஞ்சாங்கம்:–**

இந்திய அரசாங்கம் ISRO சார்பாக வெளியிடும் ராஷ்ட்ரிய பஞ்சாங்கமும், வெளிநாட்டவர்கள் பயன்படுத்தும் பஞ்சாங்கம் எபிமெரிஸ் ஆகும். இதில் டெபிள்

ஆப் பாபாஸ் சன் ரைசிங் (சூரிய உதயம்) சன் செட் (சூரிய அஸ்தமனம்) மூன் ரைசிங் (சந்திர உதயம்) மூன் செட் (சந்திர அஸ்தமனம்) போன்றவை கொடுக்கப்பட்டிருக்கும்.

## திதி

பஞ்சாங்கத்தின் இரண்டாவது அங்கம் திதி ஆகும். திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடைப்பட்ட தூரம் ஆகும். சூரியனும் சந்திரனும் முன் பின் 12 பாகைகளில் இணைந்து இருப்பது அமாவாசை திதி ஆகும். சூரியன் நிற்கும் பாகையிலிருந்து 174வது பாகைமுதல் 186வது பாகை வரையில் சந்திரன் நிற்பது பௌர்ணமி திதி ஆகும். சூரியன் – சந்திரன் இணைவிற்கு (அமாவாசைக்கு) பிறகு சூரியனிடமிருந்து சந்திரன் விலகிச் செல்லும் தூரத்தை அடிப்படையாகக் கொண்டு திதிகள் கணக்கிடப்படுகின்றன. ஒரு திதியின் அளவு 12 பாகையாகும். வான்மண்டலம் 360 பாகைகள் கொண்டது எனவே (360÷12) திதிகள் 30 ஆகும்.

திதிகளை இரண்டு வகைகளாக பிரிக்கலாம். அவை 1) சுக்ல பட்சம், 2) கிருஷ்ண பட்சம்.

சுக்ல என்னும் சமஸ்கிருத சொல்லுக்கு வெண்மை என்று பொருளாகும். அமாவாசைக்கு பிறகு சூரியனிடமிருந்து சந்திரன் விலகிச் செல்லச் செல்ல சந்திரனின் பிறை நாளுக்கு நாள் வளர்ந்து வெண்மையாக தெரியும் எனவே சுக்ல பட்சம் என்று கூறப்படுகிறது. இவ்வாறு வளர்ந்து வருவதால் வளர்பிறை என்றும் கூறப்படுகிறது. சுக்லபட்சம், வளர்பிறை, பூர்வபட்சம் இவை அனைத்தும் ஒரே பொருளை குறிக்கும்.

கிருஷ்ண என்ற சமஸ்கிருத சொல்லுக்கு கருமை என்று பொருளாகும். பௌர்ணமிக்கு பிறகு சந்திரன் சூரியனை நோக்கி வர வர, சந்திரனின் பிறை நாளுக்கு நாள் தேய்ந்து வரும், கருமையாக தெரியும். எனவே கிருஷ்ண பட்சம் என்று கூறப்படுகிறது. இவ்வாறு தேய்ந்து வருவதால் தேய்பிறை என்று கூறப்படுகிறது. கிருஷ்ணபட்சம், தேய்பிறை, அமர பட்சம் இவையனைத்தும் ஒரே பொருளை குறிக்கும்.

திதிகள் சுக்ல பட்சம், கிருஷ்ணபட்சம் என்று இரண்டு வகைகளாக பிரிக்கப்பட்டாலும் திதிகளின் பெயர்களும் அவற்றின் தேவதைகளும் ஒன்றே ஆகும். அவை பின்வருமாறு:

| **சுக்ல பட்ச திதிகள் தேவதைகள்** | | | **கிருஷ்ண பட்ச திதிகள் தேவதைகள்** | | |
|---|---|---|---|---|---|
| 1. | பிரதமை | அக்கினி | 1. | பிரதமை | அக்கினி |
| 2. | துவிதியை | துவஷ்டா | 2. | துவிதியை | துவஷ்டா |
| 3. | திரிதியை | கௌரி | 3. | திரிதியை | கௌரி |
| 4. | சதுர்த்தி | கணபதி | 4. | சதுர்த்தி | கணபதி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | பஞ்சமி | சர்ப்பம் | 5. | பஞ்சமி | சர்ப்பம் |
| 6. | சஷ்டி | குமாரன் | 6. | சஷ்டி | குமாரன் |
| 7. | சப்தமி | சூரியன் (ரவி) | 7. | சப்தமி | சூரியன் (ரவி) |
| 8. | அஷ்டமி | பரமேஸ்வரன் | 8. | அஷ்டமி | பரமேஸ்வரன் |
| 9. | நவமி | வசு | 9. | நவமி | வசு |
| 10. | தசமி | நாகம் | 10. | தசமி | நாகம் |
| 11. | ஏகாதசி | தர்மதேவதை | 11. | ஏகாதசி | தர்மதேவதை |
| 12. | துவாதசி | விஷ்ணு | 12. | துவாதசி | விஷ்ணு |
| 13. | திரயோதசி | காமன் | 13. | திரயோதசி | காமன் |
| 14. | சதுர்த்தசி | கலி | 14. | சதுர்த்தசி | கலி |
| 15. | பௌர்ணமி | சந்திரன் | 15. | அமாவாசை | பிதிருக்கள் |

திதிகளை நந்தா, பத்ரா, ஜெயா, ரிக்தா, பூரண என்று ஐந்து வகையாக பிரிக்கலாம். திதிகளின் பிரிவுகள் பின்வருமாறு.

| நந்தா | பத்ரா | ஜெயா | ரிக்தா | பூரண |
|---|---|---|---|---|
| பிரதமை | துவிதியை | திரிதியை | சதுர்த்தி | பஞ்சமி |
| சஷ்டி | சப்தமி | அஷ்டமி | நவமி | தசமி |
| ஏகாதசி | துவாததி | திரயோதசி | சதுர்த்தசி | பௌர்ணமி, அமாவாசை |

ஒருவரின் பிறந்த ஜாதகத்தில் சூரியன் நிற்கும் பாகையிலிருந்து 180 பாகைக்குள் சந்திரன் நின்றிருந்தால், வளர்பிறை எனவும் 180 பாகைக்கு அதிகமாக இருந்தால் தேய்பிறை எனவும் தெரிந்து கொள்ளலாம்.

**திதியில் பிறந்தவர்களின் தன்மை:**

1. **பிரதமை திதியில் பிறந்தவர்களின் தன்மை:** செல்வந்தர், புண்ணியச் செயல்களில் ஈடுபாடு மிக்கவர்.
2. **துவிதியை திதியில் பிறந்தவர்களின் தன்மை:** துக்கமற்றவர், கவிஞர், அழகன், காமம் மிகுந்தவர் கலகம் செய்வதில் ஈடுபாடுடையவர். நாற்கால் பிராணிகள் மற்றும் தானியங்கள் மிக்கவர்.
3. **திருதியை திதியில் பிறந்தவர்களின் தன்மை:** தவத்தில் ஈடுபாடுடையவர், செல்வந்தர், நற்செயல்கள் புரிபவர் அழகன், நல்ல அறிவாளி.
4. **சதுர்த்தி திதியில் பிறந்தவர்களின் தன்மை:** வருந்தத்தக்க செயல்கள் புரிபவர், நன்னடத்தையற்றவர், பழுதான நகங்களை உடையவர், மந்திர, தந்திரமறிந்தவர் மற்றும் முரடனும் ஆவார்.

5. **பஞ்சமி திதியில் பிறந்தவர்களின் தன்மை:** அழகானவர், கலைகளைக் கற்றவர், பொறுமை மிக்கவர், தன்னை நாடியவர்களிடத்து அன்புடையவர், கவிஞர் மற்றும் கருணையால் புகழ்பெற்ற வரலாறு உடையவர்.
6. **ஷஷ்டி திதியில் பிறந்தவர்களின் தன்மை:** பிறரால் வெல்ல முடியாதவர். உடல் வலிமையும் மனோ வலிமையும் மிக்கவர், புகழ், பெற்றவர் எளிதில் கோபம் கொள்பவர், மக்களுக்குத் தலைவர், முகம், தலை, உடலின் பின் பகுதியில் மச்சமுள்ளவர்.
7. **ஸப்தமி திதியில் பிறந்தவர்களின் தன்மை:** சிறந்த அறிவாளி, நற்குணம் மிக்கவர், பெரிய செல்வந்தர், கருத்தமேனி கொண்டவர், கலைகளில் சிறந்தவர், தலைவர் மற்றும் ஆக்கல், காத்தல், அழித்தலில் திறமையுள்ளவர்.
8. **அஷ்டமி திதியில் பிறந்தவர்கள்:** பிறருக்கு தீங்கிழைப்பதில் மகிழ்ச்சியடைபவர். நீசத்தனமான தொழில் புரிபவர், கபம் மிகுந்தவர், மனைவியுடன் கூடியவர்.
9. **நவமி திதியில் பிறந்தவர்கள்:** நாத்திகர், பயமற்றவர், புகழ்பெற்றவர், வஞ்சநெஞ்சம் கொண்டவர், சூரன், பண்டிதர், அதிக குழந்தைகளுடையவர் மற்றும் பிறரை தன் வயப்படுத்துவர்.
10. **தசமி திதியில் பிறந்தவர்கள்:** தருமவான், செல்வந்தர், எல்லாச் செல்வங்களும் நிறைந்தவர், மனைவி மக்கள், நண்பர்களுடன் கூடியவர், நீதிமான், அறிவாளி மற்றும் உண்மையே பேசுபவர்.
11. **ஏகாதசி திதியில் பிறந்தவர்கள்:** பெரியயோர்களிடத்தும் தேவதைகளிடத்தும் பக்தி செலுத்துபவர், எடுத்த செயலை முடிப்பதில் முயற்சியுடையவர், வெற்றி பெறுவதில் நாட்டமுடையவர்.
12. **துவாதசி திதியில் பிறந்தவர்கள்:** சுற்றத்துடன் கூடியவர், அழகுடையவர், சாந்தகுணம் உள்ளவர், செல்வந்தர், தைரியசாலி, தியாகி, வீரம், மிக்கவர், சுகவாசி மற்றும் கலைகளையறிந்தவர்.
13. **திரயோதசி திதியில் பிறந்தவர்கள்:** அழகன், வெற்றி கொள்பவர், வித்வான், பேராசை மிக்கவர், செல்வந்தர் சஞ்சல புத்தியுள்ள மைந்தனையுடையவர், நாட்டியத்தில் ரசனையுள்ளவர், நாற்கால் பிராணிகளாகிய செல்வம் மிக்கவர்.
14. **சதுர்த்தசி திதியில் பிறந்தவர்கள்:** கோபமுடையவர், மனோவசியமுடையவர், அறிவற்றவர், நாத்திகர், செல்வமுடையவர், பிறர் மனை நயப்பவர்.
15. **பௌர்ணமி திதியில் பிறந்தவர்கள்:** அழகிய உடலமைப்பு கொண்டவர், தேவர்களாலும், பெரியோர்களாலும் கொண்டாடப்படுபவர், போக பாக்கியங்களை அனுபவிப்பவர்.

16. **அமாவாசை திதியில் பிறந்தவர்கள்:** மிகவும் ரகசியவாதிகள், அவர்கள் செய்யும் காரியங்கள் மற்றும் நன்மை, தீமைகள், வெளி உலகிற்கு தெரியாமல் இருக்கும், சற்று மூர்க்க குணம் கொண்டவர்கள், அவர்கள் மனதை யாராலும் அறிய முடியாது.

**திதியில் செய்யத்தக்கவைகள்:**

1. **பிரதமை திதியில் செய்யத்தக்கவைகள்:** உலோகம், கருங்கல்கள், மரம் இவைகளில் சித்திர வேலைகள், பாய் முடைதல், சித்திரங்கள் வரைதல், போர்க் கருவிகள் செய்தல் முதலியன.
2. **துவிதியை திதியில் செய்யத்தக்கவைகள்:** புல்லால் செய்யக்கூடிய வேலைகள், திருமணம், யாத்திரை, தேவதைகளை பிரதிஷ்டை செய்தல், ஆபரணங்கள் செய்தல், வீடுகட்டுவது முதலியன.
3. **திருதியை திதியில் செய்யத்தக்கவைகள்:** சங்கீதம், இசைக் கருவிகள் மற்றும் ஓவியம் பயிலுதல், வீடு கட்டுதல், புதுமனை புகுதல் முதலியன.
4. **சதுர்த்தி திதியில் செய்யத்தக்கவைகள்:** எதிரிகளைக் கட்டுப்படுத்துவது, ஆயுதப்பயிற்சி விஷ பிரயோகம், எரியூட்டுதல் முதலியன, மங்களகாரியங்கள் செய்தால் ஒரு மாத காலத்தில் அழிவைக்காணும்.
5. **பஞ்சமி திதியில் செய்யத்தக்கவைகள்:** யாத்திரை, உபநயனம், திருமணம் தேவதைகளை பிரதிஷ்டை செய்தல் மற்றும் சாந்தி கருமங்கள், பஞ்சமியில் செய்யப்படும் எல்லாச் செயல்களும் வெகுகாலம் நிலைத்து நிற்கும்.
6. **ஷஷ்டி திதியில் செய்யத்தக்கவைகள்:** பிறரிடம் சேவகம் செய்தல், ஆபரணங்கள் செய்தல், பசுமாடு வாங்குதல், மனை வாங்குதல், மனை விற்றல் மற்றும் மருந்து தயாரித்தல்.
7. **ஸப்தமி திதியில் செய்யத்தக்கவைகள்:** மனைகட்டுதல், உபநயனம், திருமணம் தேவதைகளை பிரதிஷ்டை செய்தல், பயிரிடுதல், அணிகலன்கள் செய்தல், மற்றும் போரிடுதல்.
8. **அஷ்டமி திதியில் செய்யத்தக்கவைகள்:** போரிடுதல், தானியம் பயிரிடுதல், வாஸ்து காரியங்கள், சிற்ப வேலைகள், கோபத்தால் செய்யக்கூடியவைகள் எழுத்து வேலை, பெண்கள் சம்பந்தப்பட்ட செயல்கள், இரத்தினங்கள், ஆபரணங்கள் செய்தல் முதலியன.
9. **நவமி திதியில் செய்யத்தக்கவைகள்:** போரிடுதல், பகைவரை சிறையெடுத்தல் மற்றும் அழித்தல், நண்பர்களில் கருத்து வேறுபாடு உண்டு பண்ணுதல் முதலியன.

10. **தசமி திதியில் செய்யத்தக்கவைகள்:** உடலின் வலிமைக்கான செயல்கள், மங்களகரமான செயல்கள், பிரயாணம், புதுமனை புகுதல், குறிப்பிட்ட நபரைக் காணல் நீர் சம்பந்தமான செயல்கள் முதலியன.
11. **ஏகாதசி திதியில் செய்யத்தக்கவைகள்:** திருமணம் செய்தல், பயிரிடுதல், வாணிபம் செய்தல், உபவாசம் இருத்தல், அணிகலன்கள் செய்தல், சிற்ப வேலைகள் முதலியன.
12. **துவாதசி திதியில் செய்யத்தக்கவைகள்:** செல்வத்தைப் பெருக்குதல், தானியங்களைச் சேர்த்தல், தானியங்களை செலவழித்தல், தரும காரியங்களைச் செய்தல்.
13. **திரயோதசி திதியில் செய்யத்தக்கவைகள்:** நற்செயல்கள், சௌபாக்கியத்தை தரவல்ல செயல்கள், நாட்டியம் பயிலுதல், அணிகலன்கள் செய்தல் குதிரையேற்றம் பயிலல், கட்டுரை, கதை எழுதுதல் முதலியன.
14. **சதுர்த்தசி திதியில் செய்யத்தக்கவைகள்:** எண்ணைத் தேய்த்துக் குளித்தல், புலால் உண்ணுதல், பிரயாணம் செய்தல் உபநயனம் மற்றும் எவ்வித சுப காரியங்களும்.
15. **பௌர்ணமி திதியில் செய்யத்தக்கவைகள்:** வேள்விச் சடங்குகள், மங்களகரமான செயல்கள், உடல் வலிமை தரும் செயல்கள், போர் புரிவதற்கான செயல்கள், மனை சம்பந்தமான செயல்கள், திருமணம் மற்றும் சிற்பக் கலைகள், அணிகலன்கள் செய்தல் முதலியன.
16. **அமாவாசை திதியில் செய்யத்தக்கவைகள்:** பிதிருக்களுக்கு செய்ய வேண்டிய காரியங்களை மட்டும் செய்ய வேண்டும். வேறு எந்த சுபகாரியங்களையும் செய்யக்கூடாது.

**வாரம்**

பஞ்ச அங்கங்களின் ஒரு அங்கம் வாரம் அல்லது நாள் ஆகும். வாரம் என்றால் கிழமை என்று பொருளாகும். கிழமைகள் மொத்தம் ஏழு ஆகும். அதாவது உண்மை கோள்களான ஏழு கோள்களுக்கும் ஏழு நாட்கள் கொடுக்கப்பட்டுள்ளது. முறையே சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்ரன், சனி ஆகியோர்களுக்கு பின்வருமாறு கிழமைகள் கொடுத்து அதற்கு தேவதைகளும் குறிப்பிடப்பட்டுள்ளது.

| **அதிபதி** | **வாரம் (நாள்)** | **தேவதை** |
|---|---|---|
| சூரியன் | ஞாயிறு | சிவனின் அவதாரம் ருத்ரன் |
| திங்கள் | சந்திரன் | துர்க்கை |
| செவ்வாய் | செவ்வாய் | முருகன் அவதாரம் சண்முகன் |
| புதன் | புதன் | விஷ்ணு |

| | | |
|---|---|---|
| குரு | வியாழன் | பிரம்மா |
| சுக்ரன் | வெள்ளி | இந்திரன் |
| சனி | சனி | யமன் |

ஜோதிட சாஸ்திரப்படி ஒரு கிழமை அல்லது நாள் என்பது சூரிய உதயம் முதலே துவங்குகிறது.

**வாரத்தில் பிறந்தவர்களின் பொதுத் தன்மைகள்**

**1) ஞாயிற்றுக் கிழமை:** சூரர், வழுக்கை தலையர், போரில் வெல்பவர், மாநிறமானவர், பித்தக்கோளாறு உள்ளவர், கோபம் மிக்கவர் மற்றும் வள்ளல் தன்மை மிக்கவர்.

**2) திங்கள் கிழமை:** இனிமையாக பேசுபவர், உலகியல் நடைமுறை அறிந்தவர், அரசாங்க வேலை பார்ப்பவர், இன்பத்தையும், துன்பத்தையும் சமமாக கருதுபவர்.

**3) செவ்வாய் கிழமை:** வக்கிரமாக பேசுபவர், போரிடுவதில் விருப்பம் உடையவர், மந்திரியாகக் கூடியவர், விவசாயம் செய்பவர், கொடூர குணம் மிக்கவர்.

**4) புதன் கிழமை:** அழகான தோற்றம் உடையவர். மிருதுவாக பேசுபவர், செல்வந்தர், கலைஞர், வாணிபத்தில் தேர்ச்சி பெற்றவர், அறிவாளி, நற்குணங்கள் மிக்கவர்.

**5) வியாழக்கிழமை:** நன்கு கற்ற பண்டிதர், சிறந்த ஆசிரியர், செல்வந்தர், நற்குணம் மிக்கவர், மனதுக்கும் இன்பம் அளிக்கும் குணங்கள் நிறைந்தவர். மக்களால் விரும்பப்படுவர்,அரசாங்கத்தால் மதிக்கப்படுபவர்.

**6) வெள்ளிக்கிழமை:** சுருண்ட கேசங்களை உடையவர், சிறந்த மற்றும் வெண்மையான ஆடைகள் அணிவதில் விருப்பம் உடையவர், எல்லோரிடத்திலும் அன்பு கொண்டவர், நேர்மையாக நல்ல வழியில் செல்பவர்.

**7) சனிக்கிழமை:** இளமையிலேயே கிழவர் போல் தோற்றம் உடையவர், வலிமையற்ற உடலையுடையவர், ஆனால் பலம் மிக்கவர் போல் தோற்றம் கொண்டவர், தமாஸ குணம் கொண்டவர், கொடுமையான குணம் உடையவர்.

## வார நாட்களில் செய்யத்தக்கவை

1) **ஞாயிற்று கிழமையில் செய்யக்கத்தக்கவைகள்:** பட்டாபிஷேகம், மங்களகரமான காரியங்கள், சேவகம் செய்தல், மருந்து செய்தல், மருந்து உட்கொள்ளுதல், வாகனங்கள் வாங்குதல், வாகனங்களை சரி செய்தல், போர் புரிதல், தானியங்களை வாங்குதல், தானியங்களை சேமித்தல், தானியங்களை விற்றல், வீடு கட்டுதல் முதலியன.
2) **திங்கள் கிழமையில் செய்யத்தக்கவைகள்:** சங்கு, முத்து, நீர், வெள்ளி, மரம், கரும்பு இவைகள் தொடர்பான செயல்கள், பெண்களுடன் நட்பு கொள்ள, மலர்மாலை அணிதல், இசையை ரசித்தல், பானங்கள், பால் அருந்துதல், பயிரிடுதல் முதலியன.
3) **செவ்வாய் கிழமையில் செய்யத்தக்கவைகள்:** விஷம் மற்றும் நெருப்பு சம்பந்தப்பட்ட வேலைகள், திருடுதல், விரோதித்துக் கொள்ளுதல், போரிடுதல், தாதுப் பொருட்களை சேர்த்தல், சுரங்க வேலை, பவழம் சம்பந்தமான செயல்கள், ஆயுதங்கள் தயாரித்தல் முதலியன.
4) **புதன் கிழமையில் செய்யத்தக்கவைகள்:** கலைகள், சங்கீதம், நாட்டியம் போன்றவற்றை பயிலுதல், கட்டுரைகள் மற்றும் நூல்களை படைத்தல், விரோதிகளை எதிர்த்தல், போர் புரிதல் முதலியன.
5) **வியாழக் கிழமையில் செய்யத்தக்கவைகள்:** வேள்வி நடத்துதல், சாந்திகர்மாக்கள் செய்தல், மங்களகரமான காரியங்கள் செய்தல், பொன் ஆபரணங்கள் அணிதல், உடல் வலிமைதரும் செயல்கள் செய்தல், வாகனங்கள் வாங்குதல், மரங்கள், செடிகள், கொடிகள் போன்றவற்றை வளர்த்தல் முதலியன.
6) **வெள்ளிக்கிழமையில் செய்யத்தக்கவைகள்:** சங்கீதம், நாட்டியம் போன்றவை பயிலுதல், பொன் ஆபரணங்கள் மற்றும் தானியங்கள் வாங்குதல், பெண்கள் சம்பந்தமான செயல்கள் செய்தல் முதலியன.
7) **சனிக்கிழமை செய்யத்தக்கவைகள்:** இரும்பு, ஈயம், பித்தளை, கருங்கல், விஷம், சாராயம் சம்பந்தப்பட்ட செயல்கள், வீடு வாங்குதல், ஸ்திரமான காரியங்கள்.

## நட்சத்திரம்

பஞ்சாங்கத்தின் மூன்றாவது அங்கம் நட்சத்திரம் ஆகும். ஜோதிட சாஸ்திரத்தில் ஆரம்ப காலத்தில் நட்சத்திரங்கள் மொத்தம் 28 இருந்தன. பின்னர் கணித அமைப்புகளுக்கு சரிவராத காரணங்களால் 1 நட்சத்திரம் குறைக்கப்பட்டது. அந்த நட்சத்திரம் அபிஜித் ஆகும். இது வான் மண்டத்தில் 276° பாகை 40° கலை முதல் 280° பாகை 54 கலை 13 விகலை வரை இருந்ததாக கருதப்படுகிறது அதாவது தற்போது வழக்கத்தில் இருக்கும் 27 நட்சத்திரங்களில் இது 22வது நட்சத்திரமாகும். ஆனால் தற்கால ஜோதிடவியலில் இது வழக்கத்தில்

இல்லை. தற்போது 27 நட்சத்திரங்கள் மட்டுமே கடைபிடிக்கப்படுகிறது. 360 பாகைகள் கொண்ட இராசி மண்டலத்தில் ஒவ்வொரு நட்சத்திரமும் 13 பாகை 20 கலைகள் கொண்டதாகும். (360 ÷ 27 = 13° – 20') இருபத்தி ஏழு நட்சத்திரங்களும், அவற்றின் தேவதைகளும்

| எண் | நட்சத்திரங்கள் | தேவதைகள் | எண் | நட்சத்திரங்கள் | தேவதைகள் |
|---|---|---|---|---|---|
| 1. | அசுவினி | அசுவினி தேவர்கள் | 15. | சுவாதி | வாயு |
| 2. | பரணி | எமன் | 16. | விசாகம் | இந்திரன்,அக்னி |
| 3. | கிருத்திகை | அக்கினி | 17. | அனுஷம் | மித்திரன் |
| 4. | ரோகிணி | பிரம்மா | 18. | கேட்டை | இந்திரன் |
| 5. | மிருகசீரிடம் | சந்திரன் | 19. | மூலம் | நிருருதி |
| 6. | திருவாதிரை | ருத்திரன் | 20. | பூராடம் | அபஸ் |
| 7. | புனர்பூசம் | அதிதி | 21. | உத்திராடம் | விஸ்வதேவர் |
| 8. | பூசம் | பிரகஸ்பதி | 22. | திருவோணம் | விஷ்ணு |
| 9. | ஆயில்யம் | சர்ப்பம் | 23. | அவிட்டம் | வசுக்கள் |
| 10. | மகம் | பித்ருக்கள் | 24. | சதயம் | வருணன் |
| 11. | பூரம் | பகன் | 25. | பூரட்டாதி | அஜய்காபாதா |
| 12. | உத்திரம் | அர்யமான் | 26. | உத்திரட்டாதி | அஹிர்புதன்யா |
| 13. | அஸ்தம் | சவிதா | 27. | ரேவதி | பூஷா |
| 14. | சித்திரை | துவஷ்டா | | | |

இருபத்தி ஏழு நட்சத்திரங்களுக்கும் ஒன்பது கோள்கள் அதிபதியாகிறார்கள். நட்சத்திர அதிபதிகளும், அவற்றின் தசா வருடங்களும் பின்வருமாறு.

| நட்சத்திரங்கள் | | | அதிபதி | தசா வருடம் |
|---|---|---|---|---|
| அசுவினி | மகம் | மூலம் | கேது | 7 வருடங்கள் |
| பரணி | பூரம் | பூராடம் | சுக்ரன் | 20 வருடங்கள் |
| கிருத்திகை | உத்திரம் | உத்திராடம் | சூரியன் | 6 வருடங்கள் |
| ரோகிணி | ஹஸ்தம் | திருவோணம் | சந்திரன் | 10 வருடங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| மிருகசீரிடம் | சித்திரை | அவிட்டம் | செவ்வாய் | 7 வருடங்கள் |
| திருவாதிரை | சுவாதி | சதயம் | இராகு | 18 வருடங்கள் |
| புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி | குரு | 16 வருடங்கள் |
| பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி | சனி | 19 வருடங்கள் |
| ஆயில்யம் | கேட்டை | ரேவதி | புதன் | 17 வருடங்கள் |

ஒவ்வொரு நட்சத்திரமும் நான்கு பாதங்களாக பிரிக்கப்பட்டு உள்ளன. எனவே (27x4=)108 நட்சத்திர பாதங்கள் ஆகும். இந்த நூற்றி எட்டு நட்சத்திர பாதங்களும் பன்னிரெண்டு இராசிகளில் பிரித்து அமைக்கப்பட்டு உள்ளன. எனவே ஒவ்வொரு இராசியிலும் (108 ÷ 12 = 9) ஒன்பது நட்சத்திர பாதங்கள் அமைந்துள்ளன. 360 ÷ 108 = 3 – 20°, 1 நட்சத்திர பாதத்தின் அளவு ஆகும்.

**தலையற்ற, உடலற்ற, காலற்ற நட்சத்திரங்கள்:**

சூரியனின் நட்சத்திரங்களான கார்த்திகை–உத்திரம்–உத்திராடம் ஆகிய நட்சத்திரங்களின் முதல் பாதம் மட்டும் ஒரு இராசியிலும் மற்ற இரண்டு மூன்று, நான்கு பாதங்கள் அடுத்த இராசியிலும் அமைந்திருப்பதால் இவை தலையற்ற நட்சத்திரங்கள் என அழைக்கப்படுகின்றன.

செவ்வாயின் நட்சத்திரங்களான மிருகசீரிஷம்–சித்திரை–அவிட்டம் ஆகிய நட்சத்திரங்களின் முதல்பாதம் மற்றும் இரண்டாம் பாதம் ஒரு இராசியிலும் மூன்றாம் பாதம் மற்றும் நான்காம் பாதம் அடுத்த இராசியிலும் அமைந்திருப்பதால் இவை உடலற்ற நட்சத்திரங்கள் என அழைக்கப்படுகின்றன.

குருவின் நட்சத்திரங்களான புனர்பூசம்–விசாகம்–பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்களின் முதல் பாதம், இரண்டாம் பாதம் மற்றும் மூன்றாம் பாதம் ஒரு இராசியிலும் நான்காம் பாதம் அடுத்த இராசியிலும் அமைந்திருப்பதால் இவை காலற்ற நட்சத்திரங்கள் என அழைக்கப்படுகின்றன.

**நட்சத்திரங்களில் பிறந்தவர்களின் தன்மைகள்:**

1. **அசுவினி நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** நீண்ட ஆயுள் உடையவர், பருத்த மேனியன், அழகிய கண்கள், சிறந்த அழகன், கொடூரமான மனமுடையவர், நீண்ட முகமுடையவர் அலங்காரப்பிரியர், தீயோர் நட்பு கொண்டவர், உலோபி, பிடிவாத குணமுள்ளவர் சோம்பேறி, இடுப்பில் மச்சமுள்ளவர்.
2. **பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** அழகிய முகம் உடையவர், நீண்ட ஆயுள், நல்ல உணவு உட்கொள்ளுபவர், சாஸ்திரங்கள் அறிந்தவர், பெண்களிடத்தில் அன்புடையவர், தொப்புளில் மச்சம்

உடையவர், சிவந்த கண்கள் மற்றும் நீண்ட கேசத்தையுடையவர், கடுமையான தூக்கத்தையுடையவர்.

3. **கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** புகழ் பெற்றவர், அதிகமாக உண்பவர், பெண்களிடம் ஆசையுள்ளவர், தானே செல்வத்தை சேர்ப்பவர், துயரப்படுவர், வெண்மையான கேசங்களையுடையவர், இடது பக்கத்தில் மச்சமுடையவர்.

4. **ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** அழகானவர், சாமர்த்தியசாலி, கூர்மையான அறிவுடையவர், தானியங்களையுடையவர், விதவிதமான ஆடை அணிவதில் விருப்பம் உடையவர், கண்நோயுடையவர், மாமனுக்குப பகைவனாவார்.

5. **மிருகசீரிடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** எப்பொழுதும் உற்சாகமாக இருப்பவர், பாபச் செயல் செய்ய பயப்படுபவர், தாய் தந்தையிடம் பணிவு உள்ளவர், தன் விருப்பம் போல் நடப்பவர், நீண்ட ஆயுள் உடையவர், அழகிய தோற்றம் கொண்டவர், இனிமையாக பேசுபவர், சிறந்த அறிவு, புத்தி கூர்டை உடையவர், தர்மம் செய்வதில் ஆர்வமுடையவர்.

6. **திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** திறமைசாலி, சூரன், கொடியவர், துன்புறுத்துபவர், செய்நன்றி மறந்தவர், குறைவான விரோதிகளையுடையவர், நீண்ட ஆயுளுடையவர்.

7. **புனர்பூசம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** நீண்ட ஆயுளுடையவர், செல்வத்தை விரும்புகிறவர், கெட்டபுத்தி உள்ளவர், உயரமானவர், அமைதியான குணமுடையவர், மாமிசபிரியர், வயிற்றில் மச்சமுடையவர்.

8. **பூசம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** சிறந்த அறிவாளி, சீக்கிரத்தில் கோபம் அடைபவர், தைரியமுடையவர், உறவினர்களுக்கு உபகாரம் செய்பவர், இனிமையாக பேசுபவர், அகம்பாவமுடையவர், தனிமையில் நாட்டமுடையவர், கை, கால்களில் மச்சமுடையவர்.

9. **ஆயில்யம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** கொடியவர், தூரதேசத்தில் வசிப்பவர், உடலில் மச்சமுடையவர், மெதுவாக நடப்பவர், சுகபோகங்களில் ஆசையுடையவர்.

10. **மகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** சிறந்த அறிவாளி, தாய் தந்தையிடம் பக்தியுடையவர், நற்குணமுடையவர், நீண்ட ஆயுளுடையவர், உறவினர்களுக்கு உதவுபவர், தெளிவாக பேசுபவர், சின்னபுத்திடையவர், சிவந்த கண்களுடையவர், வயிற்றில் மச்சமுடையவர்.

11. **பூரம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** அழகானவர், அடக்கமுடையவர், இசையில் ஈடுபாடு உடையவர், மக்களால்

நேசிக்கப்படுபவர், தாயற்றவர், அழகிய ஆடைய ஆபரணமணிந்தவர், வேதம் ஒதுவதில் ஈடுபாடு உடையவர்.

12. **உத்திரம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** காவியங்கள் கற்றவர், சுயநலமிக்கவர், தருமம் அறிந்தவர், அழகிய தோற்றம் உடையவர், பெண்களிடம் நாட்டம் கொண்டவர், நோயாளி, உடம்பில் மச்சமுடையவர்.

13. **அஸ்தம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** பிரசித்தி பெற்றவர், கம்பீரதோற்றம் மற்றும் சொல்வன்மை மிக்கவர், சாமார்த்தியசாலி, செல்வந்தர், மனைவி சொற்படி நடப்பவர், பிறர் செயல்களை முடிப்பவர், அந்தணர்களையும் குருவையும் வணங்குபவர், பகைவர்களையழிப்பவர், பிறன்மனை நயப்பவர், உடம்பில் மச்சமுடையவர்.

14. **சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** செல்வத்தில் நாட்டம் மிக்கவர், சுகபோகங்களை அனுபவிப்பவர்.

15. **சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** நலமிக்கவர், அமைதியானவர், கொடையாளி, தைரியசாலி, உயரமான தோற்றம், அழகன், அழகிய கண்களுடையவர், மாறுபாடான நடத்தை உடையவர், ரோஷமுடையவர், செல்வத்தை நல்வழியில் செலவிடுபவர், உறவினர்களிடத்தில் அன்பைப் பொழிபவர், புன்னகை பூத்த முகத்தினர், மற்றும் நீண்ட ஆயுளையுடையவர்.

16. **விசாகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** நீண்ட ஆயுளையுடையவர், பணிவு உடையவர், சாமார்த்தியசாலி, உறவினர்களுக்கு உதவுபவர், நோயுடையவர், மனைவியிடம் அன்புடையவர், சிவந்த கண்கள் மற்றும் வயிற்றில் மச்சம் உடையவர்.

17. **அனுஷம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** மேதாவி, பசி மிக்கவர், நல்வழியில் செல்பவர், இன்பங்களை துய்ப்பவர், அருள் உடையவர், மன அமைதியுடையவர், வெளிநாட்டில் வசிப்பவர்.

18. **கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** கருநிறமுடையவர், கல்வி கற்றவர், பல பிள்ளைகளும், நண்பர்களும் உடையவர், உண்மை பேசுபவர், கோபமுடையவர், மனைவியிடம் ஆசையுடையவர், உடம்பில் மச்சம் உடையவர், அரசர்களால் மதிக்கத் தக்கவர், நயமாகப் பேசுபவர், நீண்ட ஆயுளை உடையவர்.

19. **மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** தருமத்தை உணர்ந்தவர், செல்வந்தர், மதிக்கத்தக்கவர், உறவினர்களிடம் அன்புடையவர், சிவந்த மேனியுடையவர், சபல சித்தமும் உடையவர், பணிவுடையவர்.

20. **பூராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** உயரமான மேனியுடையவர், மெல்லிய விரல்கள் உடையவர், அரசர்களால்

மதிக்கப்படுபவர், புகழ் பெற்றவர், பொருளைத்தானே சேர்ப்பவர், எப்பொழுதும் சிரித்தமுகத்துடன் இருப்பவர்.

21. **உத்திராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** எல்லாமறிந்தவர், சுகத்தை விரும்புபவர், நல்லொழுக்கமுடையவர், விரிந்த கண்களையுடையவர், நற்குணங்கள் கொண்டவர், தர்மசீலன், சூரன், நீண்ட ஆயுளையுடையவர்.

22. **திருவோணம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** கருத்த சரீரத்தை உடையவர், பலவித ஆடைகளை அணிய விருப்பமுடையவர், வாசனை பொருள்களில் விருப்பமுடையவர், தாராள மனமுடையவர், உறவினர்களிடம் அன்பு உடையவர், அழகன், அறிவாளி, மந்திரங்கள் அறிந்தவர்.

23. **அவிட்டம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** ஓரளவு சாஸ்திரம் அறிந்தவர், முயற்சி உடையவர், குண்டான உடலமைப்பு உடையவர், ஏழை, பொய் பேசுபவர், கருணையற்றவர், கெட்ட காரியத்தை செய்பவர், நாட்டியம், பாட்டு இதில் விருப்பம் உடையவர்.

24. **சதயம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** வழக்காடுவதில் சிறந்தவர், இரத்த சம்மந்தமான நோயுடையவர், யோக்கியன், நிலையற்ற மனமுடையவர், நன்கு பேசுபவர், நெஞ்சுரம் பெற்றவர், கர்வமுடையவர், பல குழந்தைகளையுடையவர்.

25. **பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** தாமரை கண்ணன், செல்வந்தர், தாராள மனமுடையவர், பெண்களிடம் நாட்டம் உடையவர், அலங்காரம் செய்து கொள்பவர், அதிக கோபமுடையவர், கழுத்தில் நோயுடையவர், நியாயப்படி நடப்பவர், புகழ் மிக்கவர், செல்வந்தர்.

26. **உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** நாட்டியம், சங்கீதம் இவைகளில் நாட்டமுடையவர், மனோவலிமை மிக்கவர், பகைவனை வெல்பவர், மக்களுக்கு பயத்தை அளிப்பவர், செல்வந்தர், தன் மனைவியை வெறுப்பவர், நீண்ட ஆயுளை உடையவர்.

27. **ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் தன்மை:** கோபமுடையவர், சுகபோகங்களை அனுபவிப்பவர், நீண்ட ஆயுளை உடையவர், பருத்தசரீரத்தை உடையவர், பொறாமை உடையவர், அன்னதானம் செய்பவர், தைரியசாலி, அயல்நாடு செல்பவர்.

**சுப காரியங்கள் செய்ய கூடாத நட்சத்திரங்கள்:**

ஆதிரை, பரணி, கார்த்திகை,
ஆயில்யம், முப்பூரங்கேட்டை
தீதுறு விசாகஞ் சோதி

சித்திரை மகமீ ராறும்
மாதனங் கொண்டார்தாரார்,
வழிநடைப்பட்டார் மீளார்
பாய்தனிந் படுத்தார் தேராற்
பாம்பின் வாய்த்தேரை தானே

இப்பாடலில் கூறப்பட்டுள்ள விளக்கம் யாதெனில் திருவாதிரை, பரணி, கிருத்திகை, ஆயில்யம் நட்சத்திரங்களும் முப்பூரங்களான பூரம், பூராடம், பூரட்டாதி நட்சத்திரங்களும் கேட்டை, விசாகம், சுவாதி, சித்திரை, மகம் ஆகிய ஈராறு நட்சத்திரங்களில். பொன், பொருள், பணம், கடனாக கொடுத்தால் அது திரும்ப வராது என்றும், இப்பணிரண்டு நட்சத்திர நாட்களில் வெகு தூரபயணம் சென்றவர் திரும்பவரமாட்டார் என்றும் இந்த நட்சத்திரங்கள் நடப்பில் இருக்கும் போது நோய்வாய்பட்டு படுக்கையில் விழுந்தவர் குணமடையமாட்டார்கள் என்று பொருள்படும்படி இப்பாடல் உள்ளது. இருப்பினும் இது தற்கால நடைமுறைக்கு ஒத்துவருவது இல்லை எனவே இதற்கு மாறாக மேற்கூரிய பணிரெண்டு நட்சத்திரங்களில் எந்தவித சுப காரியங்களும் செய்துவது இல்லை.

**நட்சத்திரங்களில் செய்யத்தக்கவைகள் :**

1. **அசுவதி நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** யானையேற்றம், குதிரையேற்றம், வாகனபயிற்சி செய்தல், தேவதைகளை பிரதிஷ்டை செய்தல், யாத்திரை செல்லுதல், பட்டாபிஷேகம் செய்தல், யாக தீட்சை பெறுதல், உபநயனம் மற்றும் சாந்தி கருமங்கள்.
2. **பரணி நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** எதிரியைத் தாக்குதல், விஷம், நெருப்பு, மற்றும் ஆயுதங்கள் சம்பந்தமான செயல்கள், சண்டையிடுதல், முற்றுகையிடுதல், திருடுவது, சூதாடுவது, மந்திரம், வசியம் மற்றும் ஏவல், பில்லி சூனியம் செய்தல் மற்றும் கன்னிகைகள் சம்பந்தமான செயல்கள்.
3. **கார்த்திகை நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** அக்னி காரியங்கள், ஓமம் வளர்த்தல் யாகதீட்சை பெறுதல், பொன்னாபரணம் செய்தல், மந்திர சித்திபெறுதல், மருந்துகள் செய்தல் முதலியன.
4. **ரோகிணி நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** பட்டாபிஷேகம் செய்தல், புதுமனை புகுதல், பட்டணப் பிரவேசம், ஹோமம், சாந்தி கருமங்கள், திருமணம் செய்தல், நெல், கரும்பு பயிரிடுதல் மரம் நடுதல் புதிய ஆடை ஆபரணம் அணிதல் முதலியன.
5. **மிருகசீர்ஷம் நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** மங்களகரமான காரியம், தவம், யாகவிரதம், பயிரிடுதல், புதுமனை புகுதல், யாத்திரை, முடி

திருத்திக் கொள்ளல், பட்டாபிஷேகம் செய்தல், பித்ருக்களை பூஜித்தல் முதலியன.

6. **திருவாதிரை நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** பகைவர்களை கொல்லுதல், காட்டுத்தீயினால் பொசுக்குதல், துஷ்டனை அழித்தல், தூது செல்லுதல், பூட்டிய வீட்டை திறத்தல், முதலியன செய்தல்.

7. **புனர்பூசம் நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** வளைகாப்பு, சீமந்தம், முடிதிருத்துதல், உபநயனம், வேதசாஸ்திரம் கற்றல், தொட்டிலிடுதல், புதுபடுக்கையில் படுப்பது, புதிய ஆபரணம் அணிவது முதலியன.

8. **பூசம் நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** தேவதைகளுக்கு பூஜை செய்தல், அரசனைக் காண்பது, சாந்தி காரியம் செய்தல், பட்டாபிஷேகம் செய்தல், சித்திரம் வரைதல், புதிய ஆடை, ஆபரணமணிதல், மருந்து தயாரித்தல்.

9. **ஆயில்யம் நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** மந்திர பிரயோகம், பில்லி சூனியம், ஏவல் முதலியன செய்தல், நெருப்பால் பொசுக்குதல், ஆயுதப் பயிற்சி, உடல் பயிற்சி, மற்றும் விஷ ஆயுதம் செய்தல்.

10. **மகம் நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** அக்னி காரியம், மந்திரப் பிரயோகம், நீத்தார் கடன், சூதாட்டம், சுரங்கவேலைகள், சாராயம் தயாரித்தல் மற்றும் போர் புரிதல்.

11. **பூரம் நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** பட்டணப் பிரவேசம், விஷப் பிரயோகம், நகரத்தை தகர்ப்பது, மந்தரவாதம் செய்தல், மருந்து தயாரித்தல்.

12. **உத்திரம் நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** கிணறு, குளம், ஏரி வெட்டுதல் அரண்மனை, நகரம், தேவாலயம் அமைத்தல், புதிய ஆபரணங்கள் பூணுவது, சிம்மாசனமேறுதல், மங்கள ஸ்நானம் செய்தல், திருமணம், பட்டாபிஷேகம் செய்தல், பயிரிடுதல் முதலியன.

13. **அஸ்தம் நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** பாணிக்கிரஹணம் செய்தல், மங்களகரமான செயல்கள், யாத்திரை போதல், பட்டாபிஷேகம் செய்தல், அரண்மனை, தேவாலயங்கள் அமைத்தல், புதிய ஆடைகள் அணிதல், பயிரிடுதல் முதலியன.

14. **சித்திரை நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** புதிய ஆடை அணிகலன்கள் அணிவது, ஓவியங்கள் வரைதல், முத்துங்ககள் வாங்குதல், காது குத்திக் கொள்ளுதல், பவழங்கள் அணிவது, உபநயனம் செய்வது, முடிதிருத்திக் கொள்ளுதல், இசை மற்றும் நாட்டியப் பயிற்சி பெறுதல்.

15. **சுவாதி நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** பயிரிடுதல், வீடு, அரண்மனை, தேவாலயங்கள் கட்டுவது, ஊஞ்சலாடுவது, வாகன பயிற்சி,

கனரக வாகனம் ஓட்டுதல், சொகுசு வாகனப்பயிற்சி, திருமணம், புதிய அணிகலன்களை அணிந்து கொள்ளல், கல்வி பயிலத் துவங்குதல் முதலியன.

16. **விசாகம் நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** பொன், மணி இவைகளான அணிகலன்களை அணிதல், யாகம், செய்தல், உபவாசம் இருத்தல், விரதம் இருத்தல், குரு பூஜை மற்றும் பிதுர் பூஜை செய்தல்.

17. **அனுஷம் நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** ஓவியம் வரைதல், பொன் மணிகளை சோதித்தல், இரு சக்கர வாகனம், நான்கு சக்கர வாகனம் இவைகளில் சவாரி செய்தல், கண்ணுக்கு மை செய்தல், மருந்து உண்பது, யாத்திரை போதல்.

18. **கேட்டை நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** பகைவனை அழித்தல், ஆயுதங்கள் செய்தல், சிற்ப வேலை செய்தல், ராஜ நீதி கற்றல், பிறர் சொத்தை கொள்ளை அடித்தல்.

19. **மூலம் நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** செடி, கொடி, மரங்கள், கரும்பு, நெல், உளுந்து பயிரிடுதல், மந்திர வித்தை கற்றல், மருந்துண்பது, ஆகம சாஸ்திரங்களை கற்றல், மணப்பெண்ணை நிச்சயம் செய்தல்.

20. **பூராடம் நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** குளம், குட்டை, கிணறு, ஏரி, ஓடை முதலியன வெட்டுதல், முத்து, பவளம், மணி முதலியவைகளை சேகரித்தல், வீட்டுக் கதவுக்கு தாழ்ப்பாள் போடுதல், ஆயுதங்களுக்கு சாணை பிடித்தல் முதலியன.

21. **உத்திராடம் நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** அழகான வீடு கட்டுதல், தேவதைகளை பிரதிஷ்டை செய்தல், சாந்தி தரும் காரியம் செய்தல், உற்சவங்கள் செய்தல், அலங்காரம், அபிஷேகம் செய்தல், புதிய ஆடை அணிகலன்கள் செய்தல், அணிதல், சுப காரியங்கள் செய்தல் முதலியன.

22. **திருவோணம் நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** ஹோமம், யாகங்கள், கல்வி பயிலத் துவங்குதல், முடிதிருத்துதல், உபநயனம், சாந்தி முகூர்த்தம், காது குத்துதல், பிரயாணம், மற்றும் தேவதைகளைப் பிரதிஷ்டை செய்தல்.

23. **அவிட்டம் நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** கல்வி பயில ஆரம்பித்தல், உபநயனம், மைகள், மருந்துகள் தயாரித்தல், வெண்குடை, படுக்கை, இருக்கை முதலியன வாங்க, யாகம் செய்தல், தோஷ பரிஹாரம் செய்தல். **24. சதயம் நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** குளம் வெட்டுதல், பூந்தோட்டம் வளர்த்தல், பயிரிடுதல், முத்து, பவளம், மணி சேகரித்தல், விலங்குகளின் நோய் தீர்த்தல், ஜபம், ஹோமம், செய்தல்.

**25.** **பூரட்டாதி நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** யானைகளை பிடித்தல், வேதாளங்களை வசியம் செய்தல், தாது வாதம் செய்தல், சூதாடுதல், ஆகாயத்தில் செல்லுதல், சாஸ்திரங்களை பயிலுதல், கல்பங்களில் கூறியதைச் செய்தல்.

**26.** **உத்திரட்டாதி நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** திருமணம், யாகம், பட்டாபிஷேகம் செய்தல், புதிய ஆடை, அணிகலன் அணிதல்.

**27.** **ரேவதி நட்சத்திரத்தில் செய்யத்தக்கவைகள்:** உபநயனம், முடிதிருத்துதல், திருமணம், புதுமனை புகுதல், வாகன பயிற்சி மற்றும் எல்லா சுபகாரியங்களும் செய்தல்.

## 4. யோகம்

பஞ்சாங்கத்தின் நான்காவது அங்கம் யோகம் ஆகும். யோகம் என்ற சமஸ்கிருத சொல்லுக்கு சேர்க்கை என்று பொருள். வான் மண்டலத்தில் சூரியன் செல்லும் தூரத்தையும், சந்திரன் செல்லும் தூரத்தையும் கூட்டினால் யோகம் கிடைக்கும். ஒரு யோகத்தின் அளவு 13 பாகை 20 கலை ஆகும். யோகங்கள் மொத்தம் இருபத்தி ஏழு ஆகும். யோகங்களும் அவற்றின் அதி தேவதைகளும்.

| யோகங்கள் | அதிதேவதை |
|---|---|
| விஷ்கம்பம் | யமன் |
| ப்ரீதி | விஷ்ணு |
| ஆயுஷ்மான் | சந்திரன் |
| சௌபாக்கியம் | பிரம்மா |
| சோபனம் | பிரகஸ்பதி |
| அதிகண்டம் | சந்திரன் |
| சுகர்மம் | இந்திரன் |
| திருதி | ஜல தேவதை |
| சூலம் | சர்ப்பம் |
| கண்டம் | அக்னி |
| விருத்தி | சூரியன் |
| துருவம் | பூமி |
| வ்யாகாதம் | வாயு |
| ஹர்ஷணம் | பகன் |
| வஜ்ரம் | வருணன் |
| சித்தி | கணேசன் |
| வ்யதீபாதம் | ருத்திரன் |
| வரியான் | குபேரன் |
| பரிகம் | விஸ்வகர்மா |
| சிவம் | மித்திரன் |
| சித்தம் | முருகன் |
| சாத்தியம் | சாவித்திரி |
| சுபம் | லட்சுமி |
| சுக்கிலம் | பார்வதி |
| பிராம்ஹம் | அசுவினி தேவர்கள் |
| ஐந்திரம் | பித்ருக்கள் |
| வைதிருதி | அதிதி |

**யோகங்களில் பிறந்தவர்களின் தன்மைகள்:**

**1. விஷ்கம்பம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** பகைவரை வெல்பவர், அங்கங்களில் ஓரளவு கூன் காணப்படும். காமவேட்கை மிக்கவர், தன் விருப்பப்படி நடப்பவர், நாற்கால் பிராணிகள் மிக்கவர், வாகனம் கொண்டவர்.

**2. ப்ரீதி யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** அனைவருக்கும் விருப்பமானவர், அனைவரிடமும் இனிமையாகப் பேசுபவர், பிறன்மனை நோக்குதலில் நாட்டம் மிக்கவர், ஆசானிடத்தும் தேவதைகளிடத்தும் பக்தியுள்ளவர்.

**3. ஆயுஷ்மான் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** நீளமான நாக்குடையவர், அகன்ற கண்களையுடையவர், புகழ்பெற்றவர், அறிஞர், சுகமாக வாழ விரும்புபவர் எல்லாச் செல்வங்களும் நிறைந்தவர்.

**4. சௌபாக்கியம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** உடலில் மீன், சங்கு போன்ற மச்சங்களையுடையவர், வெண்மையாகப் பழகுபவர், காமவேட்கை மிக்கவர், செல்வந்தர், அயல் நாடுகளுக்குச் செல்பவர்.

**5. சோபனம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** அதிக சுகங்களை கொண்டவர், சிறந்த உணவுகளை உண்பவர், செல்வந்தர், மிக மெதுவாக செயல்கள் புரிபவர், வெகு விரைவில் கோபமடைபவர் உறுதியான உடல் அமைப்பு கொண்டவர்.

**6. அதிகண்டம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** கலைகளைக் கற்றவர், அழகிய அங்கங்கள் பெற்றவர், பகையுணர்வு மிக்கவர், காமவேட்கை மிக்கவர், மானவுணர்ச்சி மிக்கவர்.

**7. சுகர்மம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** நற்குணங்கள் மிக்கவர், நன்னடத்தை உள்ளவர். சிறந்த உணவை உண்பவர், மனைவி, மக்கள் நிறைந்தவர், புண்ணிய செயல்களில் ஆர்வம் மிக்கவர்.

**8. திருதி யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** அழகானவர்கள், சிறந்த சொல்வன்மையும், அறிவாற்றலும் மிக்கவர், செல்வந்தர், நற்குணங்கள் மிக்கவர் மற்றும் காமவேட்கை மிக்கவர்.

**9. சூலம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** கோபமுடையவர், அழகன், கலகம் செய்பவர், செவிடர், காம வேட்கை மிக்கவர், செல்வந்தர், மானமுடையவர் மற்றும் உறுதியான உடலமைப்பு பெற்றவர்.

**10. கண்டம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** வெகுநேரம் உண்பவர், வருங்காலத்தைப் பற்றிய அறிவு உடையவர், தோல் வியாதி உள்ளவர், கருத்தமேனியர், சுகவாசி, பழுடைந்த நகமுடையவர், வேதங்களை அறிந்தவர் மற்றும் செல்வந்தர்.

**11. விருத்தி யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** எல்லா செல்வங்களும் நிறைந்தவர், அறிஞன் மனைவி மக்கள் நிறைந்தவர், சுப, வாத, பித்த தோஷமுடையவர் மற்றும் சிறந்த வேலைக்காரர்களுடையவர்.

**12. துருவம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** நடுத்தர உடலமைப்பு உள்ளவர், முயற்சியுடையவர், சொல்வன்மை மிக்கவர், சிலேத்தும சரீரமுடையவர், பொறுமைசாலி, தரித்திரம் மற்றும் மானமுடையவர்.

**13. வியாகாதம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** விரைவில் கோபப்படுபவர், மக்களால் மதிக்கப்படுபவர், பிரபு, உறுதி மிக்கவர், மனைவி மக்களுடன் கூடியவர் மற்றும் நற்குணங்கள் மிக்கவர்.

**14. ஹர்ஷணம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** பிறன் மனை நயப்பவர், அழகிய மேனியர், கப சரீரம் உடையபவர், கோள் சொல்பவர், மேன்மையானவர், இங்கிதம் அறிந்தவர் மற்றும் செல்வந்தர்.

**15.வஜ்ரம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** கடினமான சுபாவமுடையவர், பெண்களிடம் நாட்டம் மிக்கவர், அழகன், தாமரை மலரையொத்த கண்களையுடையவர், வெற்றி கொள்ள இயலாதவர், பித்தநோய் உள்ளவர் மற்றும் செல்வந்தனாவார்.

**16. சித்தி யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** நினைத்ததை முடிப்பவர், அழகிய உடலமைப்பு கொண்டவர், வெற்றி பெறுபவர், உறுதியானவர், செல்வந்தர், அறிவாளி மற்றும் மக்கட்செல்வம் நிறைந்தவர்.

**17. வியதீபாதம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** வெற்றி கொள்பவர், பெண்கள் போல சுபாவமுடையவர், பெருமுயச்சியுள்ளவர், உடலழகு மிக்கவர் சீதநோயுள்ளவர் மற்றும் குளிர்பிரதேசத்தில் வசிக்க விரும்புபவர்.

**18. வரியான் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** தன் குலத்தையே வெறுத்துத் தூற்றுபவர், மானமுடையவர், பிறர் பொருளைக் கை கொள்ள விரும்புவர், பித்த நோய் உள்ளவர், செல்வந்தர் மற்றும் மனைவி மக்கள் சுகம் மிக்கவர்.

**19. பரிகம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** சுதந்திரத்தை விரும்புபவர், பிறரிடத்து விரோதம் கொள்பவர், செயல்களில் இடையூறு செய்பவர், சொல் தவறுபவர், செல்வந்தர் மற்றும் அயோக்கியர்.

**20. சிவம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** சாந்தகுணம் உள்ளவர், கபடமற்ற மனதுடையவர், அறிஞர், தேவதைகளையும் பெரியோர்களையும் வணங்குபவர், செல்வந்தர் மற்றும் எல்லா வேலைக்காரர்களும் வாய்க்கப் பெற்றவர்.

**21. சித்தம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** புகழ் பெற்றவர், நிர்மலமான மனதையுடையவர், புகழையும், தருமத்தையும் குறிக்கோளாகக் கொண்டவர், பித்தம் நிறைந்தவர், அறிவாளி, செல்வந்தர் மற்றும் நன்கு உண்பவர்.

**22. சாத்தியம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** பருத்த கன்னங்கள் உடையவர், கோள் சொல்லும் தன்மை உடையவர், மந்திரங்களை அறிந்தவர், தேவதைகளிடத்து பக்தி கொண்டவர், தானியங்கள் நிறைந்தவர் மற்றும் அறிஞர்.

**23. சுபம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** மனதை ஈர்ப்பவர், தருமவான், பண்டிதர், பெண்களால் விரும்பத்தக்கவர், வரும் பொருள் உரைக்கும் தன்மையர், சிலேத்தும நோயுள்ளவர் மற்றும் தனம், தானியம் மிக்கவர்.

**24. சுக்கிலம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** காமவேட்கை மிக்கவர், அறிஞர், பிறருக்குக் கெடுதல் புரிபவர், பிடிவாதமுள்ளவர், திடசித்தமற்றவர், தார்மீக குணமுடையவர் மற்றும் செல்வந்தருமாவார்.

**25. பிரம்ஹம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** பெண்களைப் போல நடந்து கொள்பவர், அறிஞர், சுயநலம் மிக்கவர், பகுத்தறிவு உள்ளவர், மனதை ஈர்க்கும் தோற்றமுடையவர் மற்றும் செல்வந்தர்.

**26. ஐந்திரம் யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** பிறர்க்கு உதவுபவர், வருங்காலத்தை உணர்ந்தவர், சிறந்த அறிவாளி, விரைவில் கோபம் கொள்பவர், வாத நோயுள்ளவர் மற்றும் செல்வம் படைத்தவர்.

**27. வைதிருதி யோகத்தில் பிறந்தவர்களின் தன்மை:** நீர் நிறைந்த உடலமைப்பு, புத்தி, சாமர்த்தியமற்றவர், பொன் அணிகலன்களை அணிந்தவர், கபம் மிக்கவர், உண்மை உரைப்பவர், செல்வந்தர் மற்றும் தாராளமாக தான தருமம் செய்பவர்.

**யோகங்களில் செய்யத்தக்கவைகள் :**

1. **விஷ்கம்பம் யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** முடிதிருத்திக் கொள்ளுதல், விதை விதைத்தல், பெண்களிடம் கூடுதல், பற்களைச் சரிசெய்தல், மரவேலைகள் செய்தல் மற்றும் பகைவர்களை விரட்டுதல் முதலியன.
2. **ப்ரீதி யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** நட்புக் கொள்ளல், வாசனை திரவியங்கள் பூசிக் கொள்ளுதல், அணிகலன்களை அணிந்து கொள்ளுதல், செல்வம் சேர்ப்பது, அரசர்களைக் காண்பது, உற்சாகம் தரும் செயல்களைப் புரிவது முதலியன.
3. **ஆயுஷ்மான் யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எல்லாச் சுபகாரியங்களையும் செய்யலாம், குறிப்பாக விதை விதைத்தல், புத்தாடை உடுத்துதல் மற்றும் திருமணம் செய்தல் முதலியன.
4. **சௌபாக்கியம் யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எல்லா நற்செயல்களுக்கும் ஏற்றது, புத்தாடை, அணிகலன்கள், அணிந்து கொள்ளல், வாசனைத் திரவியங்கள் தயாரித்தல், தேவதைகளை பூஜித்தல் மற்றும் யாகம் செய்தல் முதலியன.

5. **சோபனம் யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எல்லா நற்செயல்களுக்கும் ஏற்றது. பூமி வாங்குதல், திருமணம் செய்தல், தானம் செய்தல், ஆபரணங்கள் அணிதல், மற்றும் பட்டாபிஷேகம் முதலியன.

6. **அதிகண்டம் யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** போர் புரிதல், தண்டனை கொடுத்தல், கொலை புரிதல், பில்லி சூனியம் செய்தல் மற்றும் தீயிடுதல் முதலியன.

7. **சுகர்ம யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எல்லா நற்செயல்களுக்கும் ஏற்றது. ஓவியம் வரைதல், வீடுகட்டுதல், திருமணம் செய்தல், பூமி வாங்குதல் மற்றும் பட்டாபிஷேகம் செய்தல் முதலியன.

8. **திருதி யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எல்லா நற்செயல்களுக்கும் ஏற்றது, மதில் கட்டுதல், தோரண வாயில் நாட்டுதல், தேவாலயம் அமைத்தல், வீடு முதலியவைகள் கட்டுதல், காப்பு கட்டுதல் முதலியன.

9. **சூலம் யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எந்த நற்செயலுக்கும் ஏற்றதல்ல

10. **கண்டம் யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எந்த நற்செயலுக்கும் ஏற்றதல்ல

11. **விருத்தி யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எல்லா நற்செயல்களும் செய்யலாம், விதை விதைத்தல், செல்வம், தானியம் சேர்த்தல், திருமணம் செய்தல், காப்பு கட்டுதல், குளம் வெட்டுதல் முதலியன.

12. **துருவம் யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எல்லா நற்செயல்களும் செய்யலாம். குளம் வெட்டுதல், புத்தாடை, அணிகலன்கள் அணிதல், கல்வைத்த அணிகலன்களை செய்து அணிதல் வீடுகட்டுதல் மற்றும் அணை கட்டுதல் முதலியன.

13. **வியாகாதம் யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எந்த நற்செயலுக்கும் ஏற்றதல்ல

14. **ஹர்ஷணம் யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எல்லா நற்செயல்களுக்கு ஏற்றது. வானத்தில் பிரயாணம், விமானத்தில் பிரயாணம், தேரில் செல்லுதல், திருமணம் செய்தல், பட்டாபிஷேகம் செய்தல் மற்றும் அஸ்த்திரங்களை பயிலுதல் முதலியன.

15. **வஜ்ரம் யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எந்த நற்செயலுக்கும் ஏற்றதல்ல.

16. **சித்தி யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எல்லா நற்செயல்களும் செய்யலாம், கல்வி, பயிலுதல், திருமணம் செய்தல், காப்பு கட்டுதல், யாகதீட்சை பெறுதல் முதலியன.

17. **வியதீபாதம் யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** அடிமை வேலை செய்தல், பொன்நகை செய்தல், தானம் செய்தல், தீர்த்த யாத்திரை போதல்,

எதிரிகளுக்குள் பகையுண்டு பண்ணுதல் மற்றும் விஷ பிரயோகம் முதலியன.

18. **வரியான் யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எல்லா நற்செயல்களுக்கும் ஏற்றது, முத்து, இரத்தினம், பொன், ஆடை, அணிகலன்கள் மற்றும் வளையல் அணிதல் முதலியன.

19. **பரிகம் யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** விஷ பிரயோகம், விவாதம், போர் முயற்சி, கெட்ட செயல்கள், பகை உண்டு பண்ணுதல், இருப்பிடத்தினின்று விரட்டுதல் முதலியன.

20. **சிவம் யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எல்லா நற்செயல்களும் செய்யலாம். உபநயனம் ஆடை, அணிகலன்கள் அணிதல், திருமணம் செய்தல் மற்றும் யாத்திரை செல்லுதல் முதலியன.

21. **சித்தம் யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எல்லா நற்செயல்களுக்கும் ஏற்றது, வீடு கட்டுதல், உபநயனம், திருமணம் செய்தல், அரச பட்டாபிஷேகம் மற்றும் தேவதைகளை பிரதிஷ்டை செய்தல் முதலியன.

22. **சாத்திய யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எல்லா நற்செயல்களுக்கும் ஏற்றது, குருவான தேவதை, பிரதிஷ்டை, தேவதைகளை பிரதிஷ்டை செய்தல் பூசை செய்தல், யாத்திரை செய்தல் மற்றும் யாகம் புரிதல் முதலியன.

23. **சுபம் யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எல்லா நற்செயல்களுக்கும் ஏற்றது, பிரம்மவித்தை, உற்சாகமளிக்கும் செயல்கள், விதைத்தல், செல்வம் சேர்த்தல், தானியம் சேர்த்தல், அணிகலன்கள் சேர்த்தல், மற்றும் இவைகளுக்கான முயற்சிகள் செய்தல் முதலியன.

24. **சுக்கில யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எல்லா நற்செயல்களுக்கும் ஏற்றது, பூச்சு பூசுதல், அலங்காரம் செய்தல், அரச தரிசனம், கன்னிகாதானம் மற்றும் விசேஷ உத்ஸவங்கள்.

25. **பிரம்ஹ யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** முடிதிருத்துதல், உபநயனம், சாந்தி கருமங்கள், உடல் வலிமைக்கான செயல்கள், பயிரிடுதல், கல்வி கற்றல், அணைகட்டுதல் மற்றும் எல்லா சுபகாரியங்களும் செய்யலாம்.

26. **ஐந்திரம் யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எல்லா நற்செயல்களுக்கும் ஏற்றது. கன்னிகாதானம், வாகனயேற்றம், பெண் பார்த்தல், வைரநகை அணிதல், கலைகளை கற்பது மற்றும் இரசித்தல் முதலியன.

27. **வைதிருதி யோகத்தில் செய்யத்தக்கவைகள்:** எதிரிகளை அழித்தல், விஷமிடுவது, பகையுணர்ச்சி தோற்றுவித்தல், தீயிடுவது மற்றும் கொடூரமான செயல்கள் செய்தல் முதலியன.

## 5. கரணம்

பஞ்சாங்கத்தில் ஐந்தாவது அங்கம் கரணம் ஆகும். கரணம் என்பது திதியில் பாதி ஆகும். அதாவது ஒரு திதிக்கு இரண்டு கரணங்கள் ஆகும். ஒரு கரணத்தின் அளவு 6 பாகை ஆகும். கரணங்கள் மொத்தம் பனினொன்று ஆகும்.

**கரணங்களும் அவற்றின் தேவதைகளும் பின்வருமாறு :**

| எண் | கரணங்கள் | தேவதைகள் |
|---|---|---|
| 1. | பலம் | இந்திரன் |
| 2. | பாலவம் | நான்முகன் |
| 3. | கௌலவம் | மித்திரன் |
| 4. | தைதுலை | பித்ருக்கள் |
| 5. | கரசை | பூமி |
| 6. | வணிசை | ஸ்ரீதேவி |
| 7. | பத்திரை | யமன் |
| 8. | சகுனி | விஷ்ணு |
| 9. | சதுஷ்பாதம் | மணிபத்ரன் |
| 10. | நாகவம் | ஸர்பம் |
| 11. | கிம்ஸ்துக்னம் | வாயு |
| கரணங்கள் சர கரணங்கள், ஸ்திர கரணங்கள் என இரண்டு வகையாக பிரிக்கலாம். | | |

| சர கரணங்கள் | | ஸ்திர கரணங்கள் | |
|---|---|---|---|
| 1. | பவம் | 8. | சகுனி |
| 2. | பாலவம் | 9. | சதுஷ்பாதம் |
| 3. | கௌலவம் | 10. | நாகலம் |
| 4. | தைதுலை | 11. | கிம்ஸ்துக்னம் |
| 5. | கரஜை | | |
| 6. | வணிஜை | | |
| 7. | பத்திரை | | |

சர கரணங்கள் என்பது தொடர்ந்து சுழற்சி முறையில் மாறி மாறி வரக்கூடியவை. அதாவது பவம், பாலவம், கௌலவம், தைகலை, கரஜை, வணிஜை, பத்திரை வரை தொடர்ந்து வந்து மீண்டும் பவம் முதல் துவங்கி பத்திரை வரை தொடர்ந்து வரும்.

ஸ்திர கரணங்கள் அமாவாசையை ஒட்டிய நாட்களில் மட்டுமே நடப்பில் இருக்கும். அதாவது கிருஷ்ணபட்ச சதுர்த்தசி திதியின் இரண்டாவதாக சகுனி கரணமும், அமாவாசை திதி அன்று சதுஷ்பாதம், நாகவம், கரணங்களும், பிரதமை திதியின் முதல் கரணம் கிம்ஸ்துக்னம் கரணம் ஆகவும் நடப்பில் இருக்கும்.

**திதிகளில் கரணங்களின் அமைப்பு:**

| திதிகள் | | முதல் கரணம் | இரண்டாம் கரணம் |
|---|---|---|---|
| வளர்பிறை | பிரதமை | கிம்ஸ்துக்கினம் | பவம் |
| | துவிதியை | பாலவம் | கௌலவம் |
| | திரிதியை | தைதுலை | கரசை |
| | சதுர்த்தி | வணிசை | பத்திரை |
| | பஞ்சமி | பவம் | பாலவம் |
| | சஷ்டி | கௌலவம் | தைதுலை |
| | சப்தமி | கரசை | வணிசை |
| | அஷ்டமி | பத்திரை | பவம் |
| | நவமி | பாலவம் | கௌலவம் |
| | தசமி | தைதுலை | கரசை |
| | ஏகாதசி | வணிசை | பத்திரை |
| | துவாதசி | பவம் | பாலவம் |
| | திரயோதசி | கௌலவம் | தைதுலை |
| | சதுர்த்தசி | கரசை | வணிசை |
| | பௌர்ணமி | பத்திரை | பவம் |
| தேய்பிறை | பிரதமை | பாலவம் | கௌலவம் |
| | துவிதியை | தைதுலை | கரசை |
| | திரிதியை | வணிசை | பத்திரை |
| | சதுர்த்தி | பவம் | பாலவம் |
| | பஞ்சமி | கௌலவம் | தைதுலை |
| | சஷ்டி | கரசை | வணிசை |

| | | |
|---|---|---|
| சப்தமி | பத்திரை | பவம் |
| அஷ்டமி | பாலவம் | கௌலவம் |
| நவமி | தைதுலை | கரசை |
| தசமி | வணிசை | பத்திரை |
| ஏகாதசி | பவம் | பாலவம் |
| துவாதசி | கௌலவம் | தைதுலை |
| திரயோதசி | கரசை | வணிசை |
| சதுர்த்தசி | பத்திரை | சகுனி |
| அமாவாசை | சதுஷ்பாதம் | நாகவம் |

**பதினோரு கரணங்களுக்கும் அவைகளின் விலங்குளும்**

| கரணங்கள் | | விலங்குகள் |
|---|---|---|
| 1. | பவம் | சிங்கம் |
| 2. | பாலவம் | புலி |
| 3. | கௌலவம் | பன்றி |
| 4. | தைதுலை | கழுதை |
| 5. | கரஜை | யானை |
| 6. | வணிஜை | எருது |
| 7. | பத்திரை | கோழி |
| 8. | சகுனி | கூகை |
| 9. | சதுஷ்பாதம் | நாய் |
| 10. | நாகவம் | குதிரை |
| 11. | கிம்ஸ்துக்கினம் | புழு |

**கரணங்களில் பிறந்தவர்களின் தன்மை:**

1) **பாவம் கரணத்தில் பிறந்தவர்களின் தன்மை :** புகழ்பெற்றவர், செல்வந்தர், ஆசாரம் உள்ளவர், மந்தசுபாவம் உள்ளவர், சுகவாசி, உறுதியானவர் அங்கங்கள் சரிவர அமையப் பெறாதவர்.

2) **பாலவம் கரணத்தில் பிறந்தவர்களின் தன்மை:** குழந்தைகளைப் போல் செய்கையுடையவர், புகழ் பெற்றவர், பூமி, செல்வம், ஆளடிமை மற்றும் நாற்கால் பிராணிகளையுடையவர், இழிவான செயல்கள் புரிபவர் மற்றும் முயற்சியுடையவர்.

3) **கௌலவம் கரணத்தில் பிறந்தவர்களின் தன்மை:** யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவற்றில் சிறந்தவர். நல்லொழுக்கம் மிக்கவர், பிரபு, தாய், தந்தையர் சொற்படி நடப்பவர் மற்றும் பாக்கியம் உடையவர்.

4) **தைதுலை கரணத்தில் பிறந்தவர்களின் தன்மை:** அழகிய உடலமைப்பு கொண்டவர், செல்வந்தர்களை அண்டியிருப்பவர், தருமவான், கெட்டவர், செயல்களில் நாட்டம் உடையவர், மென்மையாக பேசுபவர், இசைக்கலைஞர் மற்றும் சுகவாசி.

5) **கரஜை கரணத்தில் பிறந்தவர்களின் தன்மை:** தூரப்பார்வையுள்ளவர், புகழ் பெற்றவர், அச்சமற்றவர், அரசர்களுக்கு ஆலோசனை சொல்பவர், பகைவர்களை வெல்பவர், மற்றும் மக்கள் தலைவர்.

6) **வணிஜை கரணத்தில் பிறந்தவர்களின் தன்மை:** சாமார்த்தியசாலி, படிப்பாளி, கோபமே இல்லாதவர், மாறுதலாக செய்பவர், ரகசியமாகச் செயல்புரிபவர் மற்றும் செல்வந்தர்.

7) **பத்திரை கரணத்தில் பிறந்தவர்களின் தன்மை:** பாவச் செயல்கள் புரிபவர், பயமற்றவர் பொறாமை உடையவர், தோல்வியைத் தழுவுபவர், பேராசையுடையவர், சபலசித்தம் உடையவர் மற்றும் தனது இஷ்டப்படி நடக்க விரும்புபவர்.

8) **சகுனி கரணத்தில் பிறந்தவர்களின் தன்மை:** தீர்க்கமான நாசியை உடையவர், வருங்காலத்தையுணர்ந்தவர், தனது குலத்தை வெறுப்பவர், பிறருக்கு கெடுதல் செய்பவர், மெலிந்த உடலையுடையவர் மற்றும் எல்லா செல்வங்களும் நிறைந்தவர்.

9) **சதுஷ்பாதம் கரணத்தில் பிறந்தவர்களின் தன்மை:** திடபுத்தியற்றவர், குழம்பிய மனமுடையவர், அயோக்கியர், கொடூரமாக பேசுபவர், கெடுமனம் படைத்தவர், பலவித சிந்தைகளையுடையவர், நோயாளி மற்றும் அழகிய உடல் அமைப்பு கொண்டவர்.

10) **நாகவம் கரணத்தில் பிறந்தவர்களின் தன்மை:** வித்வான், நீண்டகாலப் பகையையுடையவர், வெகு விரைவில் கோபத்தின் வயப்படுபவர், செல்வந்தர், பொருத்தமற்ற அங்கங்களைக் கொண்டவர் நற்குணங்களுடன் கூடியவர், மானமுடையவன் மற்றும் குறைவாக உண்பவர்.

11) **கிம்ஸ்துக்னம் கரணத்தில் பிறந்தவர்களின் தன்மை:** நகைச்சுவை உணர்வு மிக்கவர் செயல்களைச் செய்து முடிப்பதை நன்கு அறிந்தவர், சூதாடி, தீரச் செயல்கள் புரிபவர், சுகத்தைத் துய்ப்பவர், வள்ளல் மற்றும் இன்பமாக வசிப்பவர்.

**கரணங்களில் செய்யத்தக்கவைகள் :**

1) **பவ கரணத்தில் செய்யத்தக்கவைகள்:** எல்லா செயல்களும் புரிய நல்ல கரணமாகும். ஆடைகள், தானியம், சுரங்கம் முதலியவை சம்பந்தப்பட்ட செயல்கள் மற்றும் வியாபாரிகளின் பிரயாணம் முதலியன.

2) **பாலவம் கரணத்தில் செய்யத்தக்கவைகள்:** மங்கள காரியங்கள், திருவிழாக்கள், பிரயாணம், வீடு சம்பந்தமான செயல்கள், பட்டாபிஷேகம் மற்றும் போர் புரிதல் முதலியன.

3) **கௌலவம் கரணத்தில் செய்யத்தக்கவைகள்:** ரதத்தைப் பயன்படுத்துதல், யானை மற்றும் குதிரையேற்றம், மங்களகரமான செயல்கள் புரிதல், நட்பு கொள்ளல், மந்திரம் கற்றுக் கொள்ளல், பட்டாபிஷேகம், யுத்தம் மற்றும் பிரயாணம் செய்தல் முதலியன.

4) **தைதுலை கரணத்தில் செய்யத்தக்கவைகள்:** சமாதானம் செய்தல், போருக்கான முயற்சி, போருக்காக புறப்படுதல், விலைக்கு வாங்குதல், விற்றல், குளம் மற்றும் கிணறு வெட்டுதல் முதலியன.

5) **கரஜை கரணத்தில் செய்யத்தக்கவைகள்:** பயிரிடுதல், திருமணம் செய்தல், பூமி வாங்குவது, வாஸ்து செய்தல் மற்றும் புதுமனை புகுவிழா செய்தல் முதலியன.

6) **வணிஜை கரணத்தில் செய்யத்தக்கவைகள்:** எல்லா நற்செயல்களும், மங்களகரமான செயல்களும், தாதுப்பொருட்கள் சம்பந்தமான செயல்கள் மற்றும் மூலப் பொருட்களால் செய்யத்தக்கவைகள் செய்தல் முதலியன.

7) **பத்திரை கரணத்தில் செய்யத்தக்கவைகள்:** கொல்லுதல், சிறையெடுப்பது, விளையாடுவது, ஆயுதங்களால் காயப்படுத்துவது, மந்திர உச்சாடனம் செய்தல், குதிரை, எருமை, காளை முதலியன சம்பந்தமான காரியங்கள் செய்தல், எல்லா அசுபகாரியங்களும் செய்யலாம்.

8) **சகுனி கரணத்தில் செய்யத்தக்கவைகள்:** சாந்தி கருமங்கள், புஷ்டிகரமான காரியங்கள், மந்திர உபதேசம் மருந்துகள் மற்றும் தேவதைகளை பூஜித்தல் முதலியன.

9) **சதுஷ்பாதம் கரணத்தில் செய்யத்தக்கவைகள்:** பசுக்கள் சம்பந்தமானவைகள் செய்தல், திருமணம் செய்தல், உணவிடுதல் மற்றும் தேவதைகளை திருப்திபடுத்தும் செயல்கள் முதலியன.

10) **நாகவம் கரணத்தில் செய்யத்தக்கவைகள்:** உக்கிரமான செயல்கள், பகைவர்களை ஒடுக்க மந்திரோச்சாடனம் செய்தல், வசியம் செய்தல், தண்டித்தல், வஞ்சித்தல் மற்றும் குருரமான செயல்கள் முதலியன.

11) **கிம்ஸ்துக்னம் கரணத்தில் செய்யத்தக்கவைகள்:** புது அரிசியில் சமைத்தல், புத்தாடை, அணிகலன்கள் அணிதல், பூமி வாங்குவது, சுப காரியங்கள் செய்தல் மற்றும் எல்லா மங்களகரமான செயல்கள் முதலியன.

**பார்வை நூல்கள் :**

ஆனந்த போதினி பஞ்சாங்கம், ராஷ்டிரிய பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம், பாம்பு பஞ்சாங்கம், டேபுள் ஆப் பாவாஸ், பெரிய வருசாதி நூல்

| | | |
|---|---|---|
| கால பிரகாசிகை | – | கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் |
| பஞ்சபட்சி சாஸ்திரம் | – | Dr. சுந்தரவரதராச்சாரியார் |
| தமிழ் சர்வ முகூர்த்த சிந்தாமணி | – | எஸ்.பி.சுப்பிரமணியன் |
| அனுபோக ஜாதக ரகசியம் | – | N. சுந்தர்ராஜன் |
| குமாரசாமியம் | – | வீரவநல்லூர் குமாரசுவாமி தேசிகர் |

குறிப்பு

## கூறு – 2

## பஞ்சாங்க புத்தகங்கள்

பஞ்சாங்கம் என்ற சொல் இரண்டு சொற்களின் கூட்டு ஆகும். அதாவது, பஞ்ச + அங்கம் = பஞ்சாங்கம். பஞ்ச என்றால் ஐந்து, அங்கம் என்றால் உறுப்பு என்று பொருளாகும். பஞ்சாங்கம் என்றால் ஐந்து அங்கங்களைக் கொண்டது என்று பொருளாகும். இந்த ஐந்து அங்கங்கள் முறையே வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய ஐந்து அங்கங்களாகும். இந்த ஐந்து அங்கங்களும் சூரியன் மற்றும் சந்திரனின் சலனத்தை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகிறது. இந்த ஐந்து அங்கங்களின் தொகுப்பே பஞ்சாங்கப் புத்தகம் ஆகும். பொதுவாக பஞ்சாங்கம் என்றே அழைக்கப்படுகிறது.

**பஞ்சாங்கத்தின் வகைகள்:**

பஞ்சாங்கங்கள் வாக்கியப் பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம், எபிமெரிஸ் பஞ்சாங்கம் என்ற மூன்று வகைப்படும்.

வாக்கியப் பஞ்சாங்கம் என்பது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் ரிஷிகளால் கணித்து சொல்லப்பட்ட வித்தியாசத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு கணிக்கப்படும் பஞ்சாங்கமாகும்.

எபிமெரிஸ் பஞ்சாங்கம் என்பது மேல்நாட்டு முறைப்படி கணிக்கப்படும் பஞ்சாங்கம் ஆகும்.

பஞ்சாங்கம் மனித வாழ்வில் முக்கியமான இடத்தை பெற்றுள்ளது. ஒவ்வொருவர் வீட்டிலும் மாட்டப்பட்டிருக்கும் தினசரி காலண்டர்கள் இந்த பஞ்சாங்கத்தின் உதவி கொண்டே தயாரிக்கப்படுகின்றன. எனவே இந்த காலண்டர்கள் சிறு பஞ்சாங்கம் என்று கூறலாம்.

பஞ்சாங்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்களை இந்த பாடத்தில் தெளிவாக அறிந்து கொள்ளலாம். மாணவர்களுக்கு தெளிவாக விளங்கும் பொருட்டு மன்மத வருஷத்திய பஞ்சாங்கத்தின் சில பக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**பஞ்சாங்கம் படிக்கும் முறை:**

உதாரணமாக கொடுக்கப்பட்ட பக்கத்தின் தலைப்புகளை சற்று கவனிக்கவும். தமிழ் மற்றும் மலையாள தேதிகள், ஆங்கில தேதி, வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம், நட்சத்திர தியாஜ்யம், நேத்திரம், ஜீவன், அமிர்தாதி யோகங்கள், ஆகியவை வரிசைக் கிரமமாக கொடுக்கப்பட்டுள்ளன. அடுத்த பக்கத்தில் தமிழ் தேதி, ராசி இருப்பு, அகஸ், விவாக சக்கரம், வார சூலை, யோகினி, திருக்கணித சிரார்த்த திதி, வாக்ய சிரார்த்ததிதி, விரதாதி முக்கிய விசேஷங்கள். என்று தலைப்புகள் வரிசைக் கிரமமாக கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை ஒவ்வொன்றாக பார்க்கலாம்.

சித்திரை ஏப்ரல் மே

| மன்மத ஸு - சித்திரை *மீ* கலியுகாதி 5117 சாலிவாகன 1937 ஆங்கிலம் (ஏப்-மே) 2015 | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தமிழ் மலையாளம் | ஆங்கிலம் | வாரம் | திதி | | | நக்ஷத்திரம் | | | யோகம் | | கரணம் | | நக்ஷத்திர தியாஜ்யம் | நேத்திரம் | ஜீவன் | அமிர்தாதி யோகங்கள் |
| | | | | நா.வி | ம. நி | | நா.வி | ம. நி | | நா.வி | | நா.வி | நா.வி | | | |
| 01 | 14 | செவ் | தச | 25 04 | 04 02மா | அவி | 52 14 | 02 54இ | சுப | 50 10 | பத் | 25 04 | 06 06 | 1 | ½ | சி52-14ம |
| 02 | 15 | புத | ஏகா | 18 04 | 01 14ப | சத | 46 47 | 12 43இ | சுப் | 41 20 | பால | 18 04 | 08 36 | 1 | ½ | சி46-47அ |
| 03 | 16 | வியா | துவா | 10 22 | 10 09கா | பூட் | 40 47 | 10 18இ | பிரா | 32 02 | தை | 10 22 | 01 11 | 0 | ½ | சி60 |
| 04 | 17 | வெ | திர<br>சசி | 02 16<br>54 04 | 06 54கா<br>03 37இ | உட் | 34 34 | 07 48இ | மஹே | 22 31 | வணி<br>பத் | 02 16<br>28 10 | 02 18 | 0 | ½ | சி60 |
| 05 | 18 | சனி | அமா ● | 46 10 | 12 27இ | ரேவ | 28 29 | 05 22மா | வை | 13 03 | சது | 20 05 | 01 32 | 0 | 0 | பி28-29சி |
| 06 | 19 | ஞா | பிர | 38 56 | 09 32இ | அசு | 22 57 | 03 09ப | விஷ்<br>ப்ரீதி | 03 55<br>55 25 | கிம்<br>பவ | 12 28<br>38 56 | 13 52<br>45 06 | 0 | 0 | சி22-57பி |
| 07 | 20 | திங் | துவி | 32 43 | 07 02இ | பர ★ | 18 19 | 01 17ப | ஆயு | 47 53 | பால | 05 41 | 46 39 | 0 | 0 | சி18-19ம |
| 08 | 21 | செவ் | திரு | 27 52 | 05 06மா | கிரு | 14 59 | 11 56ப | சௌ | 41 32 | தை | 00 06 | 53 50 | 0 | ½ | சி14-59அ |
| 09 | 22 | புத | சது | 24 42 | 03 49ப | ரோ | 13 15 | 11 14ப | சோ | 36 36 | பத் | 24 42 | 27 16 | 0 | ½ | சி60 |
| 10 | 23 | வியா | பஞ் | 23 26 | 03 18ப | மிரு | 13 21 | 11 16ப | அதி | 33 12 | பால | 23 26 | 35 04 | 1 | ½ | ம60 |
| 11 | 24 | வெ | சஷ் | 24 09 | 03 35ப | திரு | 15 24 | 12 05ப | சுகர் | 31 23 | தை | 24 09 | 47 22 | 1 | ½ | சி60 |
| 12 | 25 | சனி | சப் | 26 48 | 04 38மா | புனர் | 19 21 | 01 39ப | திருதி | 31 02 | வணி | 26 48 | 41 13 | 1 | ½ | சி60 |
| 13 | 26 | ஞா | அஷ் | 31 07 | 06 21மா | பூச | 24 57 | 03 53ப | சூல | 31 58 | பவ | 31 07 | ---- | 1 | ½ | சி60 |
| 14 | 27 | திங் | நவ | 36 43 | 08 35இ | ஆயி | 31 49 | 06 37மா | கண் | 33 52 | பால | 03 48 | 00 37 | 2 | ½ | சி31-49ம |
| 15 | 28 | செவ் | தச | 43 03 | 11 06இ | மக | 39 25 | 09 39இ | விரு | 36 21 | தை | 09 50 | 05 37 | 2 | ½ | சி60 |
| 16 | 29 | புத | ஏகா | 49 33 | 01 42இ | பூர | 47 14 | 12 46இ | துரு | 39 01 | வணி | 16 19 | 02 01 | 2 | 0 | அ60 |
| 17 | 30 | வியா | துவா | 55 41 | 04 09வி | உத் | 54 43 | 03 46இ | வியா | 41 28 | பவ | 22 42 | 07 29 | 2 | 1 | ம54-43சி |
| 18 | 01 | வெ | திர | 60 00 | முழுநாள் | ஹஸ் | 60 00 | முழுநாள் | ஹர் | 43 23 | கௌ | 28 30 | 19 18 | 2 | 1 | அ60 |
| 19 | 02 | சனி | திர | 01 04 | 06 17கா | ஹஸ் | 01 29 | 06 27கா | வஜ் | 44 32 | தை | 01 04 | ---- | 2 | 1 | ம60 |
| 20 | 03 | ஞா | சசி ○ | 05 20 | 07 59கா | சித் | 07 11 | 08 44கா | சித்தி | 44 47 | வணி | 05 20 | 02 48<br>22 14 | 2 | 1 | சி60 |
| 21 | 04 | திங் | பௌ | 08 23 | 09 12கா | சுவா | 11 42 | 10 32கா | வியதீ | 44 03 | பவ | 08 23 | 26 28 | 2 | 1 | அ11-42ம |
| 22 | 05 | செவ் | பிர | 10 09 | 09 54கா | விசா | 15 00 | 11 50ப | வரீ | 42 21 | கௌ | 10 09 | 25 21 | 2 | 1 | ம15-00சி |
| 23 | 06 | புத | துவி | 10 42 | 10 07கா | அனு | 17 06 | 12 40ப | பரி | 39 42 | கர | 10 42 | 31 20 | 2 | 1 | சி60 |
| 24 | 07 | வியா | திரு | 10 05 | 09 52கா | கேட் | 18 05 | 01 03ப | சிவ | 36 12 | பத் | 10 05 | 38 04 | 2 | 1 | பி18-05சி |
| 25 | 08 | வெ | சது | 08 26 | 09 12கா | மூல | 18 03 | 01 02ப | சித்த | 31 54 | பால | 08 26 | 41 40 | 2 | 1 | அ18-03பி |
| 26 | 09 | சனி | பஞ் | 05 49 | 08 09கா | பூரா | 17 06 | 12 39ப | சாத் | 26 52 | தை | 05 49 | 36 31 | 2 | 0 | சி60 |
| 27 | 10 | ஞா | சஷ்<br>சப் | 02 22<br>58 07 | 06 45கா<br>05 03வி | உரா | 15 20 | 11 56ப | சுப | 21 10 | வணி<br>பத் | 02 22<br>30 20 | 24 55 | 2 | ½ | அ60 |
| 28 | 11 | திங் | அஷ் | 53 11 | 03 05இ | திஓ | 12 48 | 10 55கா | சுப் | 14 52 | பால | 25 44 | 22 16 | 1 | ½ | அ12-48சி |
| 29 | 12 | செவ் | நவ | 47 37 | 12 51இ | அவி | 09 35 | 09 38கா | பிரா | 08 01 | தை | 20 28 | 26 27 | 1 | ½ | சி9-35ம |
| 30 | 13 | புத | தச | 41 33 | 10 25இ | சத | 05 48 | 08 07கா | மஹே<br>வை | 00 41<br>52 56 | வணி<br>பத் | 14 39<br>41 33 | 20 39 | 1 | ½ | சி05-48அ |
| 31 | 14 | வியா | ஏகா | 35 05 | 07 50இ | பூட்<br>உட் | 01 31<br>56 56 | 06 24கா<br>04 34வி | விஷ் | 44 55 | பவ | 08 22 | 23 41 | 1 | ½ | சி60 |

கா-காலை வரை, ப-பகல் வரை, மா-மாலை வரை, இ-இரவு வரை, வி-விடியற்காலை (மறுநாள் சூர்ய உதயத்திற்கு முன்) 

# சுத்த திருக்கணித சர்வமுகூர்த்த பஞ்சாங்கம்

**பசலி 1424 கொல்லம் 1190 (சைத்ர - வைசாக *மீ*) உத்தராயணம் வஸந்த ருது - மேஷ *மீ***

| தமிழ் தேதி | ராசி இருப்பு | சேலம் அகஸ் | விவாக சக்கரம் | வார சூலை | யோகினி | திருக்கணித சிராத்த திதி | வாக்கிய சிராத்த திதி | விரதாதி முக்கிய விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | நா.வி | நா.வி | | | | | | |
| 01 | மீன 0-03 மேஷ | 30 38 | வடகிழ | வட | தெ | ---- | ---- | மேஷ சூரியன் 1.47ப சூன்யதிதி, சைத்ர விஷு புண்யகாலம், **தமிழ் வருடப் பிறப்பு,** சூன்யார்க்யம் |
| 02 | 4-25 | 30 43 | வடகிழ | வட | மே | துவா | துவா | பாபவிமோசினி ஏகாதசி, சத்திய விஜய தீர்த்தம், **விவாகம்** |
| 03 | 4-17 | 30 43 | வடகிழ | தெ | வடமே | திர | திர | **பிரதோஷம்,** மத்ஸ்ய ஜெயந்தி, சத்தியப் பிரியர், **தனியநாள்** |
| 04 | 4-08 | 30 45 | வடகிழ | மே | வடகிழ, ஆகா | சசி | சசி | மாதசிவராத்திரி, அவமாகம், வைதிருதி சிராத்தம் |
| 05 | 3-59 | 30 45 | நடு | கிழ | பூமி | அமா ● | அமா ● | **சர்வ அமாவாசை,** பிண்டபித்ரு, ஸ்ரீரங்கம் ரேவதித்தேர் |
| 06 | 3-50 | 30 48 | நடு | மே | கிழ | பிர | பிர | **வைசாக சுத்தம்,** இஷ்டி, வைசாக ஸ்நானம் ஆரம்பம், **கரிநாள்** |
| 07 | 3-42 | 30 48 | நடு | கிழ | வட | துவி | துவி | சந்திர தரிசனம், கிருத்திகை விரதம், ஸ்ரீமாதங்கீ ஜெயந்தி |
| 08 | 3-33 | 30 50 | கிழ | வட | தெகிழ | திரு | திரு | **அக்ஷய திருதியை,** பலராம ஜெயந்தி, கிருதயுகாதி |
| 09 | 3-24 | 30 50 | கிழ | வட | தெமே | சது | சது | மாத சதுர்த்தி, வித்யாதிராஜர் தீர்த்தம், வானமாமலைப் பெருமாள், வார்த்தா கௌரி விரதம், **விவாகம்** |
| 10 | 3-15 | 30 53 | கிழ | தெ | தெ | பஞ் | பஞ் | ஸ்ரீசங்கர ஜெயந்தி, லாவண்ய கௌரி விர, **வாஸ்து நா :** 5.00, மிருத்யு |
| 11 | 3-07 | 30 53 | தெகிழ | மே | மே | சஷ் | சஷ் | ஸ்ரீராமானுஜ ஜெயந்தி, சஷ்டி விரதம், இராமச்சந்திரர் தீர்த்தம் |
| 12 | 2-58 | 30 53 | தெகிழ | கிழ | வடமே | சப் | சப் | காங்கோத்பத்தி, கங்கா-சர்க்கரா சப்தமி, சக்கரவர்த்தித் திருமகனார் |
| 13 | 2-49 | 30 55 | தெகிழ | மே | வடகிழ | அஷ் | அஷ் | துர்காஷ்டமி |
| 14 | 2-40 | 30 58 | தெ | கிழ | ஆகா | நவ | நவ | ஸ்ரீரங்கம் ராமநவமி |
| 15 | 2-32 | 31 00 | தெ | வட | பூமி | தச | தச | வாசவி ஜெயந்தி, **கரிநாள்** |
| 16 | 2-23 | 31 00 | தெ | வட | கிழ | ஏகா | ஏகா | மோகினி ஏகாதசி, புதன் ஜெயந்தி |
| 17 | 2-14 | 31 03 | தெ | தெ | வட | துவா | துவா | பரசுராம துவாதசி |
| 18 | 2-05 | 31 03 | தெமே | மே | தெகிழ | திர | திர | பிரதோஷம், தேவப்பெருமாள், திருதினஸ்பிருக், **விவாகம்** |
| 19 | 1-57 | 31 05 | தெமே | கிழ | தெகிழ | சசி | சசி | ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி, மதுரகவி |
| 20 | 1-48 | 31 05 | தெமே | மே | தெமே | பௌ ○ | பௌ ○ | புத்த ஜெயந்தி, அர்த்தநாரீஸ்வர விரதம், **தனியநாள்,** பௌ-பூஜை, சித்ரா பௌர்நமி விரதம், சித்ரா தீர்த்தம், சித்திரகுப்த பூஜை |
| 21 | 1-39 | 31 08 | தெமே | கிழ | தெ | பிர | பிர | ஆகாமாவை, சம்பத் கௌரி விரதம், அக்னி நட்சத்திர ஆரம்பம் இரவு 2.22, வியதீபாத சிராத்தம், இஷ்டி, **கோயில் சித்ரா பௌர்நமி** |
| 22 | 1-30 | 31 10 | மே | வட | மே | துவி | துவி | **வைசாக பகுளம்** |
| 23 | 1-21 | 31 10 | மே | வட | வடமே | திரு | திரு | பார்த்திப கல்பாதி, **விவாகம்** |
| 24 | 1-12 | 31 10 | மே | தெ | வடகிழ | சது | சது | சங்கடஹர சதுர்த்தி |
| 25 | 1-03 | 31 13 | வடமே | மே | ஆகா | பஞ் | பஞ் | **விவாகம்** |
| 26 | 0-54 | 31 15 | வடமே | கிழ | பூமி | சஷ் | சஷ் | சஷ்டி விரதம் |
| 27 | 0-46 | 31 15 | வடமே | மே | கிழ,வட | சப் | சப் | அவமாகம், பானு சப்தமி, ஸ்ரீநடராஜர் அபிஷேகம், **விவாகம்** |
| 28 | 0-37 | 31 18 | வட | கிழ | தெகிழ | அஷ் | அஷ் | காலாஷ்டமி, சிரவணவிரதம், சதாசிவாஷ்டமி |
| 29 | 0-28 | 31 18 | வட | வட | தெமே | நவ | நவ | திருநாவுக்கரசர் ஜெயந்தி, காலை 9.38க்குமேல் மிருத்யு (சுபம் விலக்க) |
| 30 | 0-19 | 31 18 | வட | வட | தெ | தச | தச | தத்தாத்ரேய ஜெயந்தி, வைதிருதி சிராத்தம் |
| 31 | 0-11 | 31 18 | வட | தெ | மே | ஏகா | ஏகா | வரூதினி ஏகாதசி |

| | | | |
|---|---|---|---|
| சூ கே | செ பு | சுக் | |
| | 1–மேஷ–சூ<br>14–ரிஷ–புத<br>19–மிது–சுக்<br>20–ரிஷ–செ | | குரு |
| | | | |
| | சனி (வ) | | ரா |

**அ** - அமிர்த யோகம், **சி** - சித்த யோகம், **ம** - மரண யோகம், **பி** - பிரபலாரிஷ்ட யோகம்

தமிழ் தேதி : சித்திரை 09    ஆங்கில தேதி: ஏப்ரல் 22    வாரம் : புதன்கிழமை

இதன் பிறகு திதி, நட்சத்திரம், யோகம், கரணம் போன்றவை முடிவடையும் நாழிகை – விநாடி மற்றும் திதி, நட்சத்திரம் முடிவடையும் மணி–நிமிடம் நேரம் கொடுக்கப்பட்டு உள்ளன. இவை அன்றைய தினம் சூரிய உதய காலத்தில் இருப்பவை ஆகும்.

உதாரணமாக சித்திரை 09 புதன் கிழமையன்று சதுர்த்தி திதி 24 நாழிகை 42 விநாடிகள் வரையில் இருக்கும் அதாவது பகல் 03 மணி 49 நிமிடம் வரையில் இருக்கும். பிறகு பஞ்சமி திதி துவங்குகிறது என்று பொருள். அதே போலவே அன்றைய தினம் ரோகிணி நட்சத்திரம் 13 நாழிகை 15 விநாடிகள் வரை உள்ளது. அதாவது பகல் 11 மணி 14 நிமிடங்கள் வரை ரோகிணி நட்சத்திரம் இருப்பு உள்ளது என்று பொருளாகும். அதன் பிறகு மிருக சீரிட நட்சத்திரம் ஆரம்பிக்கிறது. அதை போலவே சோபனம் யோகம் 36 நாழிகை 36 விநாடிகள் வரையில் உள்ளது. அதற்கு மேல் அதன் அடுத்த யோகமான அதிகண்டம் ஆரம்பமாகிறது என பொருள்படும். அடுத்து கரணம் அன்றைய தினம் பத்தரை கரணம் 24 நாழிகைகள் 42 விநாடிகள் வரையில் உள்ளது. அதற்கு மேல், சகுனி கரணம் ஆரம்பமாகிறது எனக் கொள்ள வேண்டும்.

**அவமாகம்:**

பொதுவாக அனைத்து நாட்களிலும் இரண்டு திதிகள் நட்சத்திரங்கள் அல்லது யோகங்களும் நடப்பிலிருக்கும், இவ்வாறு ஒரு நாளில் இரண்டுக்கும் மேற்பட்ட திதியோ, நட்சத்திரங்களோ, அல்லது யோகமோ நடப்பில் இருந்தால் அந்த நாளை அவமாகம் என்று கூறப்படும். இந்த அவமாக நாட்களில் சுபகாரியங்களை விளக்குதல் வேண்டும்.

**திரிதின ஸ்பிரிக்:**

மேற்கூரிய வாறே திதி, நட்சத்திரம் அல்லது யோகம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்று தொடர்ந்து மூன்று நாட்கள் நடப்பில் இருப்பதை திரிதின ஸ்பிரிக் என கூறுகிறோம். அதாவது, திரிதினம் என்றால் மூன்று நாட்கள் என்றும் ஸ்பிரிக் என்றால் பரவுதல் எனவும் பொருள்படும். எனவே மூன்று நாட்கள் தொடர்ந்து ஒரே திதியோ, நட்சத்திரமோ அல்லது யோகமோ இருப்பினும் அந்த நாளை சுபகாரியங்கள் செய்ய தேர்ந்தெடுப்பது இல்லை.

உதாரண பக்கத்தில் சித்திரை மாதம் 17ம் தேதி வியாழக்கிழமை துவாதசி திதி 55 நாழிகை 41 விநாடிகள் வரை உள்ளது. அதாவது விடிய காலை 04 மணி 09 நிமிடங்கள் வரையிலும் உள்ளது. அதற்கு அடுத்து திரயோதசி திதி ஆரம்பமாகிறது என பொருளாகும். அதாவது 1 நாளின் கால அளவான 60 நாழிகையில் 55 நா 41 விநாடிகள் வரை துவாதசியும் மீதமுள்ள 04 நாழிகை 19 விநாடிகள் திரயோதசி திதியும் நடப்பில் உள்ளதாகும். அடுத்த நாளான சித்திரை மாதம் 18ம் தேதி வெள்ளிக்கிழமை திரயோதசி திதி 60.00 நாழிகையும்

முழுமையாக உள்ளது. அதற்கு அடுத்த நாளான சித்திரை 19ம் தேதி சனிக்கிழமை திரயோதசி திதி 01 நாழிகை 04 விநாடிகள் வரையில் உள்ளது. எனவே சித்திரை 17, 18, 19 ஆகிய தேதிகளில் திரயோதசி திதி தொடர்பில் இருக்கிறது. இதுவே திரிதினஸ்பிரிக் என கூறப்படும். இந்நாட்களில் சுபகாரியங்கள் விளக்குதல் வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

இதே போன்று மேற்கூரிய அன்றே அதாவது சித்திரை 17ம் நாள் உத்ரம் நட்சத்திரம் 54 நாழிகை 43 விநாடிகள் வரையில் உள்ளது. அதற்கு மேல் அந்நாளில் 5 நாழிகை 17 விநாடிகள் வரையில் அஸ்த நட்சத்திரம் உள்ளதாகும். அதற்கு அடுத்த நாளான சித்திரை 18ம் நாள் முழுநாளும் அதாவது 60.00 நாழிகையும் அஸ்த நட்சத்திரம் நடப்பிலிருந்து அதற்கு அடுத்த நாளான சித்திரை 19ம் நாள் காலையில் 01 நாழிகை 29 விநாடிகள் வரையில் அஸ்த நட்சத்திரம் உள்ளது. இதுவே திரிதின ஸ்பிரிக் ஆகும்.

**கரணம் :**

மீண்டும் சித்திரை 09ம் தேதி வரிசையை கவனிக்கவும். அன்றைய தினம் பத்திரை கரணம் 24 நாழிகை 42 விநாடிகள் வரை நடப்பில் இருக்கும் பிறகு பவம் கரணம் துவங்கி விடுகிறது. ஒரு திதிக்கு இரண்டு கரணங்கள் ஆகும். அன்றைய தினம் சதுர்த்தி திதி முடியும் அதே நேரத்திற்கு பத்திரை கரணம் முடிவடைவதையும் கவனிக்கவும். ஒரு திதிக்கு இரண்டு கரணங்கள் என்பதால், பொதுவாக பஞ்சாங்கத்தில் அன்றைய சூரிய உதய காலத்தில் நடப்பில் இருக்கும் கரணம் மட்டும் அச்சிடப்பட்டிருக்கும், அதாவது ஒரு கரணம் விட்டு ஒரு கரணம் அச்சடிக்கப்படும் என்பதை கரணங்கள் வரிசையை கவனித்து தெரிந்து கொள்ளவும்.

ஒரு குறிப்பிடட நாளன்று நடப்பில் இருக்கும் வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய ஐந்து அங்கங்களை மேற்கண்ட வழிமுறைகளின்படி அறியலாம்.

**நட்சத்திர தியாஜ்யம்:**

தியாஜ்யம் என்றால் விஷகாலம், சுபகாரியங்கள் விலக்கத்தக்க நேரமாகும். பஞ்சாங்கத்தில் உள்ள நட்சத்திர தியாஜ்யம் என்று குறிப்பிடப்பட்டுள்ள நேரம் (நாழிகை—விநாடி) தியாஜ்யம் துவங்கும் நேரம் ஆகும். பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் துவங்கி நான்கு நாழிகை தியாஜ்யகாலமாகும். உதாரணமாக சித்திரை 09 தேதி தியாஜ்யம் 27 நாழிகை 16 விநாடிகளுக்கு துவங்கி நான்கு நாழிகை தியாஜ்ய காலமாகும்.

| | | |
|---|---|---|
| நட்சத்திர தியாஜ்யம் ஆரம்பம் | = | 27.16 |
| தியாஜ்ய காலம் | = | 04.00 |
| | | ---- |
| நட்சத்திர தியாஜ்யம் முடிவு | = | 31.16 |
| | | ---- |

எனவே 27 நா 16 வி முதல் 31 நா 16 வரை சுபகாரியங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

**நேத்திரம் – ஜீவன் :**

சூரியன் நிற்கும் நட்சத்திரம் முதல் சந்திரன் நிற்கும் நட்சத்திரம் வரை எண்ணி, அந்த எண்ணிக்கையின் அடிப்படையில் நேத்திரம். ஜீவன் கணிக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட நாள் பலமாக இருக்கிறதா, இல்லையா என்பதை அறிய நேத்திரம் – ஜீவன் உதவுகிறது.

| நேத்திரம் | | ஜீவன் | | |
|---|---|---|---|---|
| 2 | – | 1 | = | உத்தமம் |
| 2 | – | ½ | = | மத்திமம் |
| 1 | – | ½ | = | மத்திமம் |
| 0 | – | 0 | = | அதமம் |
| 2 | – | 0 | = | அதமம் |
| 0 | – | ½ | = | அதமம் |

நேத்திரம் என்றால் கண்கள் அதாவது இரண்டு பார்வைகளும், ஜீவன் என்றால் உயிர் என்று பொருள் அதாவது, ஒரு சுபகாரியம் செய்யும் நாள் உயிர்ப்புடனும் நல்ல பார்வையுடனும் இருப்பின் சிறப்பு என்ற நோக்கில் இது உள்ளது. ஆனால் இது பெரும்பாலும், பௌர்ணமி அன்று தான், 2 நேத்திரமும் 1 ஜீவனும் முழுமையாக அமையும்படி உள்ளது. எனவே பௌர்ணமிக்கு நான்கு நாட்கள் முன்னரும். நான்கு நாட்கள் பின்னரும், முழு நேத்திர ஜீவன் இருக்கும், அதாவது வளர்பிறை தசமியிலிரூந்து, தேய்பிறை சப்தமி வரைக்கும், என்ற அமைப்பில் இது இருக்கிறது. ஆனால் தற்காலத்தில் இதை கவனிப்பது மிகவும் குறைவு.

**அமிர்தாதி யோகங்கள்:**

வாரத்தையும், நட்சத்திரத்தையும் அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுவது அமிர்தாதியோகங்கள் ஆகும். பஞ்சாங்கங்களில் காணப்படும் அமிர்தாதி யோகங்கள் மொத்தம் நான்கு அவை: 1) அமிர்த யோகம்; 2) சித்தயோகம்; 3) மரணயோகம்; 4) பிரபலாரிஷ்ட யோகம் ஆகும்.

சில பஞ்சாங்கங்களில் பிரபலாரிஷ்ட யோகத்தையும் மரண யோகம் என்றே குறிப்பிடப்பட்டிருக்கும்.

அமிர்தாதி யோகங்கள் வாரம் மற்றும் நட்சத்திரத்தின் இணைவு ஆகும். நம் வீட்டில் உள்ள காலண்டரில் இந்த யோகங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். சில நாட்களில் இரண்டு யோகங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும். சித்த – அமிர்த, அமிர்த – மரண, மரண – சித்த, இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கும். இதை எப்படிக் கணக்கிடுகிறார்கள் என்பதை இப்போது பார்ப்போம்.

**யோகம் கணக்கிடும் முறை:**

நட்சத்திரத்தையும் கிழமையையும் வைத்தே யோகம் கணக்கிடப்படுகிறது. இன்ன கிழமையில் இன்ன நட்சத்திரம் வந்தால் இன்ன யோகம் என்று வகுத்து அதன் அடிப்படையில் யோகம் கணக்கிடப்படுகிறது.

உதாரணமாக, திங்கட்கிழமையில் அசுவினி, பரணி, திருவாதிரை, பூசம், ஆயில்யம், பூரம், உத்திரம், ஹஸ்தம், அனுஷம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் வந்தால் சித்த யோகமாகும். அதே திங்கட்கிழமையில் ரோகிணி, மிருகசீரிஷம், புனர்பூசம், சுவாதி, திருவோணம் ஆகிய நட்சத்திரங்கள் வந்தால் அமிர்தயோகமாகும். அதே திங்கட்கிழமையில் கார்த்திகை, சித்திரை, மகம், விசாகம், பூராடம், உத்திராடம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்கள் வந்தால் மரண யோகமாகும்.

ஆகவே, ஒரு நட்சத்திரம் ஒரு குறிப்பிட்ட நாளில் 60 நாழிகை முழுவதும் இருந்தால் அன்று முழுவதும் யோகம் ஒன்றே ஒன்று தான் இருக்கும். ஆனால் ஒரே நாளில் இரண்டு நட்சத்திரம் வந்தால் இரண்டு யோகம் வரும்.

உதாரணமாக திங்கட்கிழமை மதியம் 1–00 மணி வரை சுவாதி நட்சத்திரம் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். இதற்குப் பின்னர் விசாகம் நட்சத்திரம் ஆரம்பமாகிறது என்றும் வைத்துக்கொள்வோம். திங்கட்கிழமை மதியம் 1–00 மணி வரை சுவாதி நட்சத்திரம் இருந்தால் மதியம் 1–00 மணி வரை அமிர்த யோகம் உள்ளது. மதியம் 1–00 மணிக்கு மேல் விசாக நட்சத்திரம் வந்தால் அன்று மதியம் 1–00 மணிக்குப் பின்னர் மரண யோகம் வந்துள்ளது என்று எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே திங்கட்கிழமையன்று மதியம் 1–00 மணிக்குள் சுபகாரியங்களைச் செய்ய வேண்டும். 1–00 மணிக்கு மேல் மரண யோகமாதலால் எந்த சுப காரியங்களையும் அன்றைய தினம் செய்யக்கூடாது.

ஒரு சில பஞ்சாங்கங்களில் பிரபலாரிஷ்ட யோகம் என்ற ஒரு யோகமும் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த யோகம் அசுப யோகமாக கருதப்படுகிறது. கீழ்க்கண்ட கிழமையும் நட்சத்திரமும் சேர்ந்தால் பிரபலாரிஷ்ட யோகம் எனப்படும். இது நல்லதல்ல.

| | | |
|---|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | – | பரணி |
| திங்கட்கிழமை | – | சித்திரை |
| செவ்வாய்கிழமை | – | உத்திராடம் |
| புதன்கிழமை | – | அவிட்டம் |
| வியாழக்கிழமை | – | கேட்டை |
| வெள்ளிக்கிழமை | – | பூராடம் |
| சனிக்கிழமை | – | ரேவதி |

இந்த பிரபலாரிஷ்ட யோகம் பெரும்பாலான பஞ்சாங்கங்களில் குறிப்பிடப்பட்டிருக்காது. சித்தயோகம், அமிர்தயோகம், மரண யோகம் என்ற மூன்று யோகங்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கும்.

எந்தக் கிழமையில் எந்த நட்சத்திரம் வந்தால் என்ன யோகம் என்பதைக் காட்டும் அட்டவணை இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அட்டவணையில் அமிர்த யோகத்திற்கு ‘அமிர்த’ என்ற முதல் எழுத்தும், சித்த யோகத்திற்கு ‘சித்த’ என்ற முதலெழுத்ம், மரண யோகத்திற்கு ‘மரண’என்ற முதலெழுத்தும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அட்டவணையைப் பார்க்கும் போது இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**இராசி இருப்பு:**

ஒரு குறிப்பிட்ட நாளன்று உள்ள இராசி பரிமாண இருப்பு கணக்கிடப்பட்டு காட்டப்பட்டுள்ளது. ஒரு குழந்தை பிறக்கும் நேரத்தில் உதயமாகும். இலக்கினம் கணக்கிட இது உதவும்.

சூரியன் ஒவ்வொரு தமிழ் மாதமும் 1 ராசியில் பிரவேசிக்கிறார். 1 ராசிக்கு 30 பாகைகள். அதே போல் ராசியின் நாழிகை அளவுகளான முழு அளவும் ராசியின் தொடக்க நாளான 1 தேதியில் முழுமையாக அப்படியே இருக்கும். ஒவ்வொரு நாளும் குறைந்து கொண்டே வந்து அந்த மாதத்தின் இறுதி நாளில் முழுவதுமாக குறைந்து அடுத் நாள் உதயமாகும் ராசியின் முதல் தேதி அடுத்த ராசியினுடைய இராசி இருப்பு துவங்கும்.

**அகஸ் :**

அகஸ் என்றால் பகல் பொழுது என்று பொருளாகும். அதாவது சூரிய உதயம் முதல் சூரிய அஸ்தமனம் வரை உள்ள இடைப்பட்ட காலம் அகஸ் ஆகும். இந்த பஞ்சாங்கம் சேலத்தை மைய ஸ்தலமாகக் கொண்டு கணிக்கப்பட்டுள்ளதால் சேலம் அகஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சித்திரை **09** ஆம் தேதியன்று சேலத்தின் அகஸ் காண:

| | | |
|---|---|---|
| சூரிய அஸ்தமனம் | = | 06.25 |
| ரயில்வே நேரமாக்க | = | 12.00 |
| | | 18.25 |
| சூரிய உதயம் (–) | = | 06.10 |
| பகல் பொழுது | | 12.15 |

இதை நாழிகையாக்க இரண்டரையால் பெருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 12 x 2 ½ | = | 30.00, |
| 15x2 ½ | = | 00. 37 ½ |
| | | ------------ |
| | | 30.38 |
| | | ------------- |

**விவாக சக்கரம்:**

ஒரு குறிப்பிட்ட நாளன்று சூரியன் நிற்கும் நட்சத்திரத்தை அடிப்படையாக கொண்டு விவாகக் சக்கரம் கணிக்கப்படுகிறது. நடு, மேற்கு, தெற்கு, தென்கிழக்கு, வடமேற்கு என்று குறிப்பிடப்பட்டிருக்கும் நாட்களில் திருமணம் நடைபெறுவது தவிர்க்கப்பட வேண்டும்.

**வார சூலை :**

சூலம் அல்லது வார சூலை என்று குறிப்பிடப்பட்டிருக்கும் திசையில் பிரயாணம் செய்தால், பிரயாணத்தின் நோக்கம் வெற்றி பெறாது, தோல்வியையே தரும். ஆலயங்களில் நவ கோள்கள் அமைந்துள்ள, அமைப்பு முறையை நன்கு அறிவீர்கள். கோள்கள் நோக்கி நிற்கும் திசைக்கு எதிர்திசை (புதன் தவிர) அன்றைய தினம் சூலம் என்று எளிய முறையில் அறியலாம். உதாரணமாக குரு வடக்கு நோக்கி நிற்கும் கோளாகும். எனவே குருவின் ஆதிக்கும் மிக்க வியாழக்கிழமை அன்று சூலம் தெற்கு ஆகும். தவிர்க்க முடியாத காரணத்தால் பிரயாணம் செய்ய வேண்டுமென்றால் பரிகாரபொருளை அருந்திவிட்டு பிரயாணம் செய்ய வேண்டும்.

| திசைகள் | பிரயாணத்திற்கு தவிர்க்க வேண்டிய கிழமைகள் | பரிகாரம் |
|---|---|---|
| கிழக்கு | திங்கள், சனி | தயிர் |
| மேற்கு | ஞாயிறு, வெள்ளி | வெல்லம் |
| வடக்கு | செவ்வாய், புதன் | பால் |
| தெற்கு | வியாழன் | எண்ணெய் |

**யோகினி:**

யோகினியும் பிரயாணம் துவங்கும் போது கவனிக்க வேண்டியதாகும். சூலம் வாரத்தை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகிறது. யோகினி திதியை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகிறது. யோகினி என்பது காளியிடம் ஏவல் செய்யும் பெண் தேவதை. யோகினி நிற்கும் திசைக்கு எதிர்திசையும், வலது திசையும் பிரயாணத்திற்கு தவிர்க்க வேண்டும்.

திருக்கணித சிராத்த திதி, என்றும் வாக்கிய சிராத்த திதி என்றும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் பெரும்பாலும் எந்தவித வித்தியாசமும் இருக்காது, ஒரு மாதத்தில் ஒன்று அல்லது இரண்டு திதிகளில் மட்டும் மாற்றம் வரும்.

**விரதாதி முக்கிய விசேஷங்கள்:**

இதில் அன்றைய தினங்களின் முக்கிய பண்டிகைகள், விரதாதிதினங்கள், முகூர்த்த நாட்கள், பிரதோசம், சுபநாட்கள் போன்றவை அந்தந்த நாட்களின் நேரில் கொடுக்கப்பட்டிருக்கும். மேலும், அந்த மாதத்தின் கிரகநிலை இராசிசக்கரம் ஒன்று இருக்கும் அதில் நடுவில் அந்த மாதத்தின் கிரகப் பெயர்ச்சிகள் குறிக்கப்பட்டிருக்கும்.

ஒரு பஞ்சாங்கத்தின் சில பக்கங்களை உதாரணமாகக் கொண்டு விளக்கப்பட்டது. வாக்கிய பஞ்சாங்கம் ஆனாலும் திருக்கணித பஞ்சாங்கம் ஆனாலும் இதே முறையை கடைபிடித்து மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். தற்காலத்தில் பல பஞ்சாங்கங்கள் கிடைக்கின்றன. அவற்றை வாங்கி படித்து புரிந்து கொள்ள வேண்டும். மேலும் அவரவர்கள் வசிக்கும் ஊர், வட்டாரத்தில் கணிக்கப்படும் பஞ்சாங்கங்களை பயன்படுத்துவது சிறப்பு.

வாக்கிய பஞ்சாங்கங்களில் சில 1. ஸ்ரீ ரங்கம் வாக்கிய பஞ்சாங்கம், 2. அசல் 28 நெ. (பாம்பு) வாக்கிய பஞ்சாங்கம், 3. ஸ்ரீ பிரசன்ன வெங்கடேச பெருமாள் தேவஸ்தானம் வாக்கிய பஞ்சாங்கம், 4. ஆற்காடு வாக்கிய பஞ்சாங்கம், 5. ராமநாதபுரம் வாக்கிய பஞ்சாங்கம், 6. திருநெல்வேலி வாக்கிய பஞ்சாங்கம், 7. சர்வாலய அனுஷ்டான வாக்கிய பஞ்சாங்கம்.

திருக்கணித பஞ்சாங்கங்களில் சில **1.** ராஷ்ட்ரிய பஞ்சாங்கம், **2.** வாசன் திருக்கணித பஞ்சாங்கம், **3.**ஸ்ரீநிவாசன் திருக்கணித பஞ்சாங்கம், **4.** பாலன் திருக்கணித பஞ்சாங்கம், **5.** குமரன் திருக்கணித பஞ்சாங்கம், **6.** ஸ்ரீஜகத்குரு ஸ்ரீ காஞ்சி ஆசார்யாள் மடத்து திருக்கணித பஞ்சாங்கம்.

இனி எல்லாப் பஞ்சாங்களிலும் பொதுவாக காணப்படும் சில விபரங்களை காணலாம்.

முதல் பக்கத்தில் அந்த குறிப்பிட்ட தமிழ் வருடத்திற்கு இணையான பிற ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கும். அறுபது தமிழ் வருடங்களுக்கும் அறுபது பெயர்கள் உண்டு. பிற ஆண்டுகளுக்கும், நடப்பிலுள்ள ஆண்டுகளின் எண் மட்டும் கொடுக்கப்பட்டிருக்கும்.

**உதாரணமாக மன்மத ஆண்டு ஸ்ரீநிவாஸன் பஞ்சாங்கத்தில் மூன்றாம் பக்கத்தில் உள்ள விபரங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| கலியுகாதி | **5117** | சௌராஷ்ட்டிர விஜயம் **703** | |
| சாலிவாகன | **1937** | ஸ்ரீ ராமானுஜாப்தம் | **999** |
| கொல்லமாண்டு | **1190–91** | ஆங்கிலம் | **2015–16** |
| திருவள்ளுவர் | **2046–47** | பசலி | **1424 – 25** |
| விக்ரம சகாப்தம் | **2072 – 73** | பிரபாவதி **29**வது | |
| தென்னிந்தியா – மன்மத | | வடஇந்தியா பராபவ | |

இதில் பிரபாவதி **29** என்பது தமிழ் ஆண்டுகளில் பிரபவ துவங்கி **29**வது ஆண்டான மன்மத ஆண்டை குறிக்கிறது.

ஒவ்வொரு பஞ்சாங்கத்தின் முதல் பக்கத்திலும் இடைக்காட்டு சித்தர் எழுதிய அந்த வருட பலனைக் கூறும் பாடலும் அதற்கான விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது.

**நவநாயகர்கள்:**

அந்தந்த ஆண்டுக்குரிய ராஜா, மந்திரி, அர்க்காதிபதிஇ சஸ்யாதிபதி, சேனாதிபதி, ரசாதிபதி, தானியாதிபதி, நீரசாதிபதி, மேகாதிபதி என ஒன்பது பதவிகளுக்கான கிரகங்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்டவை கணிக்கும் விதம் பின்வருமாறு:

ராஜா :

தமிழ் புத்தாண்டு பிறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பே பிறக்கும் தெலுங்கு வருடப் பிறப்பின் கிழமையின் அதிபதி கிரகமே அந்த தமிழ் ஆண்டின் ராஜா ஆவார்.

மந்திரி :

தமிழ் புத்தாண்டு பிறக்கும் கிழமையின் அதிபதி கிரகமே மந்திரி ஆவார்.

அர்க்காதிபதி :

ஆனி மாதப் பிறப்பன்று உள்ள கிழமை அதிபதியின் கிரகமே அர்க்காதிபதி ஆவார்.

சாஸ்யாதிபதி :

ஆடிமாதப் பிறப்பன்று உள்ள கிழமை அதிபதியின் கிரகமே சஸ்யாதிபதி ஆவார்.

சேனாதிபதி :

ஆவணி மாதப் பிறப்பன்று உள்ள கிழமை அதிபதியின் கிரகமே சேனாதிபதி ஆவார்.

ரசாதிபதி :

ஐப்பசி மாதப் பிறப்பன்று உள்ள கிழமை அதிபதியின் கிரகமே ரசாதிபதி ஆவார்.

தானியாதிபதி :

மார்கழி மாதப் பிறப்பன்று உள்ள கிழமை அதிபதியின் கிரகமே தானியாதிபதி ஆவார்.

நீரசாதிபதி :

தை மாதப் பிறப்பன்று உள்ள கிழமையின் அதிபதியே நீரசாதிபதி ஆவார்.

மேகாதிபதி :

திருவாதிரை நட்சத்திரத்தில் சூரியன் நுழையும் அன்று நடப்பிலிருக்கும் கிழமை அதிபதியின் கிரகமே மேகாதிபதி ஆவார்.

மேலே கூறப்பட்ட நவநாயர்களே அதே ஆண்டிற்கு உபநாயகர்களாகவும் பணிபுரிவார்கள்.

| | | |
|---|---|---|
| ராஜா | – | குதிரைகளுக்கு அதிபதி |
| மந்திரி | – | யானைகளுக்கு அதிபதி |
| அர்க்காதிபதி | – | பறவைகளுக்கு அதிபதி |
| மேகாதிபதி | – | மரம், செடி, கொடிகளுக்கு அதிபதி |
| சஸ்யாதிபதி | – | குடிமக்களுக்கு அதிபதி |
| சேனாதிபதி | – | பசுக்களுக்கு அதிபதி |
| ரசாதிபதி | – | சர்ப்பங்களுக்கு அதிபதி |
| தானியாதிபதி | – | ஒட்டகங்களுக்கு அதிபதி |
| நீரசாதிபதி | – | கிரகங்களுக்கு அதிபதி |

மேற்கண்டவாறு நவநாயகர்கள் உபநாயகர்கள் விபரம் கொடுத்து, அவர்களால் அந்த ஆண்டு நடைபெறவிருக்கும் பலன்களும் கொடுக்கப்பட்டுள்ளது.

பிறகு நவகிரங்களும் அந்த ஆண்டு முழுவதும் இராசிளில் சஞ்சரிக்கும் காலம் கொடுக்கப்பட்டு அதனால் ஏற்படக்கூடிய பொதுவான பலன்களும் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் புதிய ஆண்டு பிறக்கும் நேரத்திற்கு ஜாதகம் கணிக்கப்பட்டு அந்த ஜாதகத்தின் அடிப்படையில் அவ்வாண்டு நிகழவிருக்கும் பொதுவான பலன்களும் கொடுக்கப்பட்டுள்ளது. பிறகு, செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகிய ஐந்து கிரகங்களும் அஸ்தமனம் ஆகும். காலம், உதயம் ஆகும். காலம் கொடுக்கப்பட்டுள்ளது. கிரகங்கள் அஸ்தமனமாகியிருக்கும் பொழுது அவற்றின் காரகத்துவ பலன்கள் சிறப்பாக செயல்படாது. எனவே சுபகாரியங்கள் செய்யும் பொழுது சுபகிரகங்கள் அஸ்தமனமாக இருக்கக்கூடாது. இதன் பிறகு அந்த ஆண்டில் ஏற்படக்கூடிய கிரகணங்கள், அவற்றின் தேதிகள், நம்நாட்டில் தெரியுமா, தெரியாதா என்ற விபரமும் எந்தெந்தந நாட்டில் தெரியும் என்ற விபரமும் கொடுக்கப்பட்டுள்ளது.

**பிறகு மகர சங்கராந்தி பலன் கொடுக்கப்பட்டுள்ளது**

சூரியன் மகர இராசியில் நுழைவதே தை மாதப்பிறப்பாகும். தைமாதப் பிறப்பு நிகழும் பொழுது நடப்பில் இருக்கும் கரணத்திற்கு ஒரு தேவதை அதிபதியாகும். பதினோரு கரணங்களுக்கும் பதினோரு தேவதைகளும் அவற்றின் நிறம், வாகனம், ஆடை, குடை, பாத்திரம், ஆகாரம், பூஷணம், பூ. தூபம், ஆயுதம், உப ஆயுதம் ஆகியவை ஜோதிட சாஸ்திரத்தில் குறிப்பிடப்படுகிறது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு அவ்வாண்டு நிகழவிருக்கும் பொதுவான பலன்களை மகரசங்கராந்தி பலன் என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

**ஆதாயம் விரயம் :**

பன்னிரு இராசிக்கும் ஆதாயம், விரயம் என்ற பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட இராசியை சேர்ந்தவர்களுக்கு விரயத்தை காட்டிலும் ஆதாயம் அதிகமாக இருந்தால், அந்த ஆண்டு சுக பாக்கியங்கள் அதிகமாக இருக்கும். அந்த ஆண்டின் ராஜாவாக வரும் கிரகத்தையும், இராசி அதிபதி கிரகத்தையும் அடிப்படையாகக் கொண்டு ஆதாயம் – விரயம் கணக்கிடப்படுகிறது.

**நட்சத்திர கந்தாயம் :**

நட்சத்திர கந்தாயம் இருபத்தி ஏழு நட்சத்திரத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ளது. கந்தாயம் என்பது ஒரு வருடத்தின் பன்னிரெண்டு மாதங்களை நான்கு மாதங்கள் கொண்ட மூன்று பிரிவுகளாக பிரிப்பதாகும். தமிழ் புத்தாண்டு பிறப்பதற்கு சில நாட்கள் முன் நிகழும் தெலுங்கு வருட பிறப்பன்று நடப்பில் இருக்கும் வாரம், திதி நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய ஐந்து

அங்கங்களை அடிப்படையாகக் கொண்டு கந்தாய பலன் கணக்கிடப்படுகிறது. இவ்வாறு கணக்கிடும் பொழுது சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி ஆகிய நான்கு மாதங்களைக் கொண்ட முதல் கந்தாய வரிசையில் பூஜ்யம் வந்தால் நோய் உண்டாகும். ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய நான்கு மாதங்களைக் கொண்ட இரண்டாவது கந்தாய வரிசையில் பூஜ்யம் வந்தால் கடன், பயம் உண்டாகும். மார்கழி, தை, மாசி, பங்குனி ஆகிய நான்கு மாதங்களைக் கொண்ட மூன்றாவது கந்தாயத்தில் பூஜ்யம் வந்தால் அதிகமாக செலவுகள் ஏற்படும்.

இதன் பிறகு அந்த ஆண்டின் சுப முகூர்த்த தேதிகள், நான்கு யுகங்களின் ஆண்டுகள், யுகாதி புண்ணிய தினங்கள், யுகாந்த புண்ணிய தினங்கள், இந்துக்களின் பண்டிகைகள், முக்கிய விரத தினங்கள், முஸ்லீம்களின் பண்டிகைகள், கிறிஸ்தவர்களின் பண்டிகைகள், அரசாங்க விடுமுறை நாட்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

இதன் பிறகு அந்த ஆண்டின் நவகிரக பாதசாரங்களும், தினசரி நடப்பில் இருக்கும் வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளது.

## தியாஜ்ஜியம்

நாம் ஏற்கனவே நட்சத்திர தியாஜ்யம் பார்த்தோம். ஆனால் தியாஜ்ஜிய காலம் என்பது வாரம், திதி, நட்சத்திரம், லக்னம் ஆகிய நான்கு அமைப்புக்கும் உண்டு அதன் விபரங்கள்.

### வாரத் தியாஜ்ஜியம்

| | | |
|---|---|---|
| ஞாயிறு | – | 32 நாழிகை |
| திங்கள், புதன் | – | 42 நாழிகை |
| செவ்வாய், வியாழன் | – | 31 நாழிகை |
| வெள்ளி | – | 21 நாழிகை |
| சனி | – | 14 நாழிகை |

வாரத்தியாஜ்ஜியம் மேற்கண்ட நாழிகைக்கு மேல் 3 ¾ நாழிகைகள் ஆகும். அதாவது, ஞாயிற்றுக்கிழமை 32வது நாழிகை முதல் 35 நாழிகை 45 விநாடிகள் வரை தியாஜ்ஜிய காலமாகும். இந்த அளவு சுமார் 1 ½ மணி நேரமாகும். இந்த நேரத்தில் எந்த சுப காரியமும் செய்யக்கூடாது.

**திதி தியாஜ்ஜியம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பிரதமை | – | 24 நாழிகை | நவமி | – | 05 நாழிகை |
| துதியை | – | 12 நாழிகை | தசமி | – | 33 நாழிகை |
| திருதியை | – | 55 நாழிகை | ஏகாதசி | – | 01 நாழிகை |
| சதுர்த்தி | – | 05 நாழிகை | துவாதசி | – | 15 நாழிகை |
| பஞ்சமி | – | 54 நாழிகை | திரயோதசி | – | 26 நாழிகை |
| சஷ்டி | – | 54 நாழிகை | சதுர்த்தசி | – | 07 நாழிகை |
| சப்தமி | – | 31 நாழிகை | பௌர்ணமி | – | 29 நாழிகை |
| அஷ்டமி | – | 20 நாழிகை | அமாவாசை | – | 06 நாழிகை |

திதி தியாஜ்ஜியம் மேற்கண்ட நாழிகைக்கு மேல் 4 நாழிகை தியாஜ்ய காலமாகும் அதாவது 1 மணி நேரம் 36 நிமிடமாகும். இந்த கால நேரத்தில் எந்தவித சுபகாரியங்களும் செய்யக்கூடாது.

**நட்சத்திர தியாஜ்ஜியம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அசுவினி | – 50 நாழிகை | மகம் | – 30 நாழிகை | மூலம் | – 56 நாழிகை |
| பரணி | – 24 நாழிகை | பூரம் | – 20 நாழிகை | பூராடம் | – 24 நாழிகை |
| கிருத்திகை | – 30 நாழிகை | உத்ரம் | – 18 நாழிகை | உத்திராடம் | – 20 நாழிகை |
| ரோகிணி | – 40 நாழிகை | அஸ்தம் | – 21 நாழிகை | திருவோணம் | –10 நாழிகை |
| மிருகசீரிடம் | – 14 நாழிகை | சித்திரை | –20 நாழிகை | அவிட்டம் | – 10 நாழிகை |
| திருவாதிரை | – 21 நாழிகை | சுவாதி | – 14 நாழிகை | சதயம் | – 18 நாழிகை |
| புனர்பூசம் | – 30 நாழிகை | விசாகம் | –14 நாழிகை | பூரட்டாதி | – 16 நாழிகை |
| பூசம் | – 20 நாழிகை | அனுஷம் | –10 நாழிகை | உத்திரட்டாதி | – 24 நாழிகை |
| ஆயில்யம் | – 32 நாழிகை | கேட்டை | – 14 நாழிகை | ரேவதி | – 30 நாழிகை |

நட்சத்திர தியாஜ்ஜியம் மேற்கண்ட நாழிகைக்கு மேல் 4 நாழிகைகள் ஆகும். அதாவது 1 மணி நேரம் 36 நிமிடங்களாகும். இந்த கால நேரத்தில் சுப காரியங்கள் செய்யக்கூடாது.

**லக்னத் தியாஜ்ஜியம்**

| | | | |
|---|---|---|---|
| மேஷம் | – | 4 ¼ நாழிகை | 04–15 |
| ரிஷபம் | – | 4 ¾ நாழிகை | 04–45 |
| கன்னி | – | 5 நாழிகை | 05–00 |
| தனுசு | – | 5 ½ நாழிகை | 05–30 |

இந்த நான்கு இலக்னத்திற்கும் முதல் ½ நாழிகை அதாவது 12 நிமிடம் லக்ன ஆரம்ப முதல் தியாஜ்ஜிய காலமாகும். இந்த கால அளவிற்குள் கிரகங்கள் நன்மை செய்யாது.

| | | |
|---|---|---|
| மிதுனம் | – | 05 – 15 நாழிகை |
| சிம்மம் | – | 05–15 நாழிகை |
| துலாம் | – | 05–00 நாழிகை |
| கும்பம் | – | 04 – 45 நாழிகை |

இந்த நான்கு இலக்னத்திற்கும் மத்தியில் வரக்கூடிய ½ நாழிகை அளவான 12 நிமிடங்கள் தியாஜ்யம் ஆகும். இதில் உள்ள கிரகங்கள் நன்மை செய்யாது.

| | | |
|---|---|---|
| கடகம் | – | 05 – 30 நாழிகை |
| விருச்சிகம் | – | 05 – 15 நாழிகை |
| மகரம் | – | 05 – 15 நாழிகை |
| மீனம் | – | 04 – 15 நாழிகை |

இந்த நான்கு இலக்னத்திற்கும் கடைசியில் வரக்கூடிய ½ நாழிகை அளவான 12 நிமிடங்களில் தியாஜ்ஜியம் ஏற்படும் இதில் உள்ள கிரகங்களும் நன்மைகள் தர இயலாது.

### 3. ருது காலப்பலன்கள்

முற்காலத்தில் பெண்களுக்கு பிறந்த ஜாதகம் எழுதிவைக்க மாட்டார்கள். ஆகையால் பெண்கள் பூப்படைந்த காலத்திற்கு ஜாதகம் கணித்து அதன்படி பலன்களை அறிந்து அவரின் எதிர்காலம் கூறப்பட்டது. அதில் ருதுவான நாள், மாதம், திதி, நட்சத்திரம், லக்னம் என பலன்கள் கூறயுள்ளனர். ஆனால் தற்காலத்தில் அனைவருக்கும் பிறந்த ஜாதகம் மிக துள்ளியமாக கணிணியில் கணிக்கப்படுகிறது. அது மட்டுமின்றி ருது பலன் என்பது யாராலும் மிக சரியாக உடன் இருந்து கணிக்க இயலாது. ஆகையால் தற்காலத்தில் ருதுப்பலன்களை சீர் செய்யும் கூங்குக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். அந்த பெண்ணின் திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கைக்கு பிறந்த ஜாதகப்பலன்களை மட்டுமே எடுத்துரைக்க வேண்டும். இனி ருதுகாலப்பலன்களை காண்போம்.

### ருதுவான கிழமையின் பலன்கள்

| | | |
|---|---|---|
| ஞாயிறு | – | புத்ர தோஷம் ஏற்படும் |
| திங்கள் | – | பதிவிரதையாவாள் |
| செவ்வாய் | – | புருசனுக்கு ஆகாது |
| புதன் | – | அதிக புத்திரர்கள் |
| வியாழன் | – | நல்ல குணம் உடையவள் |
| வெள்ளி | – | அதிக புத்ரலாபம் |
| சனி | – | தரித்திரம் |

மேற்கூரியவற்றில் தோஷமான நாட்களுக்கு தனியே பரிகாரங்களும் கூறப்பட்டுள்ளன. அவைகள் தற்காலத்தில் பயன்படுத்த அவசியம் மிகவும் குறைவு.

**ருதுவான மாதத்தின் பலன்கள்**

| | | |
|---|---|---|
| சித்திரை | – | கணவனுக்கு நல்லதல்ல |
| வைகாசி | – | நல்ல சுக போகத்துடன் வாழ்வாள் |
| ஆனி | – | புத்திரர்களால் பெருமை, புகழ் உண்டாகும் |
| ஆவணி | – | நல்ல குழந்தைகளை பெறுவாள் |
| புரட்டாசி | – | செல்வ செழிப்பு உடையவள் |
| ஐப்பசி | – | முதல் குழந்தை பிறந்தபின் விதவையாவாள் |
| கார்த்திகை | – | பிற மண நாட்டம் உள்ளவள் |
| மார்கழி | – | நல்ல குழந்தைகளை பெறுவாள் |
| தை | – | புண்ணிய காரியங்கள் செய்வாள் |
| மாசி | – | பொன், பொருள் நிறைவு |
| பங்குனி | – | அதிக குழந்தைகள் |

**ருதுகால திதியின் பலன்கள்**

| | | |
|---|---|---|
| பிரதமை | – | கன்னியாயிருப்பாள் |
| துதியை | – | சுகவாசி |
| திருதியை | – | தனவதி |
| சதுர்த்தி | – | பொருளிழப்பு |
| பஞ்சமி | – | புத்திரவதி |
| சஷ்டி | – | தரித்ரம் |
| சப்தமி | – | புத்ர விருத்தி |
| அஷ்டமி | – | குழந்தை மரணம் |
| நவமி | – | துக்கம் |
| தசமி | – | தர்மகுணம் |
| ஏகாதசி | – | கணவன் மீது பற்றுதல் |
| துவாதசி | – | நோயாளி |
| திரயோதசி | – | கோபமிக்கவள் |
| சதுர்த்தசி | – | ஒழுக்கமின்மை |
| அமாவாசை | – | குலநாசம் |
| பௌர்ணமி | – | எல்லா நன்மையும் உண்டு |

**ருதுகால நட்சத்திரன் பலன்கள்:**

| | | |
|---|---|---|
| அசுவினி | – | விதவை |
| பரணி | – | புத்ர ஸம்பத்து |
| கிருத்திகை | – | குழந்தை இறந்து பிறக்கும் |
| ரோகிணி | – | புத்ரலாபம் |
| மிருகசீர்ஷம் | – | புத்ரலாபம் |
| திருவாதிரை | – | வியாதி, பீடை |
| புனர்பூசம் | – | புருஷனுக்கு சுகம் |
| பூசம் | – | ராஜபோகம் |
| ஆயில்யம் | – | குழந்தை இறந்து பிறக்கும் |
| மகம் | – | குழந்தை விருத்தி |
| பூரம் | – | பாக்யவதி |
| உத்திரம் | – | சுகம் ஏற்படுதல் |
| ஹஸ்தம் | – | மிகுந்த சுகம் |
| சித்திரை | – | சுகம் ஏற்படும் |
| சுவாதி | – | சிறந்த குடும்ப நிர்வாகி |
| விசாகம் | – | வைதவ்யம் |
| அனுஷம் | – | சௌக்யம் |
| கேட்டை | – | ஆண்களால் தொல்லை |
| மூலம் | – | ஆண்களால் தொல்லை |
| பூராடம் | – | செல்வம் மிகுதி |
| உத்திராடம் | – | சௌக்யம் |
| திருவோணம் | – | தன விருத்தி |
| அவிட்டம் | – | சகல போகம் பெறுவாள் |
| சதயம் | – | செல்வம் போகும் |
| பூரட்டாதி | – | உயர்புத்ரலாபம் |
| உத்திரட்டாதி | – | செல்வம் மிகுதி |
| ரேவதி | – | கணவனுக்கு பிரியமானவள் |

**ருது லக்ன பலன்கள்**

| | | |
|---|---|---|
| மேஷம் | – | மனம்போனபடி நடப்பவள் |
| ரிஷபம் | – | சுகபோகம் |
| மிதுனம் | – | சகலசம்பத்து ஏற்படும் |

| | | |
|---|---|---|
| கடகம் | – | கெட்ட நடத்தை உள்ளவள் |
| சிம்மம் | – | புத்ர லாபம் |
| கன்னி | – | செல்வம் உள்ளவள் |
| துலாம் | – | சாமார்த்தியமுள்ளவள் |
| விருச்சிகம் | – | பரபுருஷ இச்சையுள்ளவன் |
| தனுசு | – | முன்பாதி துர்நடத்தை |
| மகரம் | – | கௌரவக்குறைவு |
| கும்பம் | – | தான்யம் மிகுந்தவள் |
| மீனம் | – | சாமாத்தியம் உள்ளவள் |

**பஞ்சபட்சி**

**பஞ்சபக்ஷி சாஸ்திரம்:**

ஒருவர் தன் தொழிலில் சிறந்து விளங்கவும், பகைவரை வெல்லவும், கோர்ட், வழக்கு வியாஜ்யங்களில் வெற்றி பெறவும், கடன் கொடுக்கவும், கடன் வாங்கவும், ஆபரேஷன் செய்யவும் புதிதாக உத்தியோகத்தில் சேரவும், கீழ்கண்ட முறையில் நேரம் கணித்துக்கொண்டு வாழ்க்கையில் வெற்றி பெறலாம்.

**பிறந்த நக்ஷத்திரங்களுக்குரிய நட்சத்திரப் பக்ஷி**

| | **வளர்பிறையில் பிறந்தவர்களுக்கு** | **தேய்பிறையில் பிறந்தவர்களுக்கு** |
|---|---|---|
| அசுவினி, பரணி, கிருத்திகை ரோகிணி, மிருகசீரிடம் | வல்லூறு | மயில் |
| திருவாதிரை, புனர்பூசம், பூசம் ஆயில்யம், மகம், பூரம் | ஆந்தை | கோழி |
| உத்திரம், ஹஸ்தம், சித்திரை சுவாதி, விசாகம் | காகம் | காகம் |
| அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் | கோழி | ஆந்தை |
| திருவோணம், அவிட்டம்,சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி | மயில் | வல்லூறு |

ஒவ்வொரு பக்ஷியும் ஊன், நடை, அரசு, துயில், சாவு என்று ஐந்து தொழில்களை முறையே ஒவ்வொரு 6.00 நாழிகைகள் (2 மணி 24 நிமிடம்), சூர்ய உதயம், அஸ்தமனத்திலிருந்து செய்கிறது. இதில் சாவு, துயில், நடை, ஊன், அரசு ஆகியவை முறையே ஒன்றைவிட ஒன்று சிறந்தது. இதில் சாவு, துயில் மோசமான பலன்களையும், நடை சுமாரான பலனையும், ஊண், அரசு ஆகியவை உத்தமமான பலன்களையும் கொடுக்கும்.

**பெயர்ப்பக்ஷி**

நக்ஷத்திரம் தெரியாத நபர்கள் அட்டவணையில் கண்டுள்ளபடி அவரவர்கள் பெயருக்கு தகுந்தபடி தன் பக்ஷியை தெரிந்து கொள்ளலாம். உதாரணம் சிதம்பரம் என்ற பெயருக்கு முதல் எழுத்து சி (ச்+இ) ஆகவே, அவருடைய பெயர்ப்பக்ஷி வளர்பிறையில் ஆந்தை, தேய்பிறையில் வல்லூறு என்றும் அறியலாம்.

**படுபக்ஷி**

சில குறிப்பிட்ட வாரங்களில் சில பக்ஷிகள், தொழில்கள் எதுவும் செய்யாது படுத்துக்கொள்ளும். அந்த நாட்களில் புதிதாக எக்காரியமும் செய்யலாகாது.

**சூட்சமத் தொழில் (அல்லது) உப தொழில்**

ஒவ்வொரு தசையிலும் அனைத்து கிரகங்களின் புக்திகள் வருவது போல் இந்த சாஸ்திரத்திலும், ஒவ்வொரு தொழிலிலும் உபதொழில்கள் செய்கிறது. அவையும், வளர்பிறையில் ஒருவாறும், தேற்பிறையில் ஒருவாறும் அட்டவணையில் கண்டுள்ளபடி செய்கிறது.

**உதாரணம்**

ஒரு பக்ஷி 'ஊண்' தொழில் செய்யும் போது ஊண் முதல் நடை, அரசு, துயில், சாவு என்று சூட்சமத் தொழில் செய்யும்.

ஒரு பக்ஷி 'அரசு' தொழில் செய்யும் போது அரசு, துயில் சாவு, ஊண், நடை ஆகிய சூட்சமத் தொழில் செய்யும்.

**சத்துரு – மித்துரு**

கிரகங்களைப் போலவே பக்ஷிகளும் சத்துரு, மித்துரு பக்ஷிகள் இருக்கின்றன. ஒருவருடைய பக்ஷிக்கு சத்துரு பக்ஷி உடைய நபர்களிடம், வியாபார நிமித்தம் தொடர்பு கொள்ளலாகாது. அவ்வாறு நேரின் பஞ்சபக்ஷ யந்திரத்தை பூஜை செய்து தொடர்பு கொள்வது பரிகாரமாகும்.

**கால வித்தியாசம்**

கீழே குறிப்பிட்ட நேரங்கள் அனைத்தும் சூரிய உதயம், அஸ்தமணம் 6.00 மணிக்கு நேரிடுவதாக கணக்கிடப்பட்டுள்ளது. மிகவும் துல்லியமாக கணிக்க விரும்புவோர் அந்தந்த ஊர் சூரிய உதய அஸ்தமனத்தில் ஏற்படும் நேர வித்தியாசத்தை கூட்டி அல்லது கழித்து அறியலாம்.

| வாரம் | பக்ஷிகள் | ▪ வளர்பிறை பகல் தொழில் | | | | | ▪ வளர்பிறை இரவுத் தொழில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6.00–8.24 | 8.24–10.48 | 10.48–1.12 | 1.12–3.36 | 3.36–6.00 | 6.00–8.24 | 8.24–10.48 | 10.48–1.12 | 1.12–3.36 | 3.36–6.00 |
| ஞாயிறு செவ்வாய் | வல்லூறு | ஊண் | நடை | அரசு | துயில் | சாவு | சாவு | நடை | துயில் | ஊண் | அரசு |
| | ஆந்தை | நடை | அரசு | துயில் | சாவு | ஊண் | அரசு | சாவு | நடை | துயில் | ஊண் |
| | காகம் | அரசு | துயில் | சாவு | ஊண் | நடை | ஊண் | அரசு | சாவு | நடை | துயில் |
| | கோழி | துயில் | சாவு | ஊண் | நடை | அரசு | துயில் | ஊண் | அரசு | சாவு | நடை |
| | மயில் | சாவு | ஊண் | நடை | அரசு | துயில் | நடை | துயில் | ஊண் | அரசு | சாவு |
| திங்கள் புதன் | வல்லூறு | சாவு | ஊண் | நடை | அரசு | துயில் | நடை | துயில் | ஊண் | அரசு | சாவு |
| | ஆந்தை | ஊண் | நடை | அரசு | துயில் | சாவு | சாவு | நடை | துயில் | ஊண் | அரசு |
| | காகம் | நடை | அரசு | துயில் | சாவு | ஊண் | அரசு | சாவு | நடை | துயில் | ஊண் |
| | கோழி | அரசு | துயில் | சாவு | ஊண் | நடை | ஊண் | அரசு | சாவு | நடை | துயில் |
| | மயில் | துயில் | சாவு | ஊண் | நடை | அரசு | துயில் | ஊண் | அரசு | சாவு | நடை |
| வியாழன் | வல்லூறு | துயில் | சாவு | ஊண் | நடை | அரசு | துயில் | ஊண் | அரசு | சாவு | நடை |
| | ஆந்தை | சாவு | ஊண் | நடை | அரசு | துயில் | நடை | துயில் | ஊண் | அரசு | சாவு |
| | காகம் | ஊண் | நடை | அரசு | துயில் | சாவு | சாவு | நடை | துயில் | ஊண் | அரசு |
| | கோழி | நடை | அரசு | துயில் | சாவு | ஊண் | அரசு | சாவு | நடை | துயில் | ஊண் |
| | மயில் | அரசு | துயில் | சாவு | ஊண் | நடை | ஊண் | அரசு | சாவு | நடை | துயில் |
| வெள்ளி | வல்லூறு | அரசு | துயில் | சாவு | ஊண் | நடை | ஊண் | அரசு | சாவு | நடை | துயில் |
| | ஆந்தை | துயில் | சாவு | ஊண் | நடை | அரசு | துயில் | ஊண் | அரசு | சாவு | நடை |
| | காகம் | சாவு | ஊண் | நடை | அரசு | துயில் | நடை | துயில் | ஊண் | அரசு | சாவு |
| | கோழி | ஊண் | நடை | அரசு | துயில் | சாவு | சாவு | நடை | துயில் | ஊண் | அரசு |
| | மயில் | நடை | அரசு | துயில் | சாவு | ஊண் | அரசு | சாவு | நடை | துயில் | ஊண் |
| சனி | வல்லூறு | நடை | அரசு | துயில் | சாவு | ஊண் | அரசு | சாவு | நடை | துயில் | ஊண் |
| | ஆந்தை | அரசு | துயில் | சாவு | ஊண் | நடை | ஊண் | அரசு | சாவு | நடை | துயில் |
| | காகம் | துயில் | சாவு | ஊண் | நடை | அரசு | துயில் | ஊண் | அரசு | சாவு | நடை |
| | கோழி | சாவு | ஊண் | நடை | அரசு | துயில் | நடை | துயில் | ஊண் | அரசு | சாவு |
| | மயில் | ஊண் | நடை | அரசு | துயில் | சாவு | சாவு | நடை | துயில் | ஊண் | அரசு |

| பெயர்ப்க்ஷி பக்ஷி | | படு பக்ஷி | | சூட்சமத் தொழில் | | |
|---|---|---|---|---|---|---|
| பெயர் முதலக்ஷரம் | பக்ஷி | வாரம் | பக்ஷி | தொழில் | பகல், நிமி | இரவு, நிமி |
| அ,,ஆ, ஐ, ஔ | வல்லூறு | வியா, சனி | வல்லூறு | ஊண் | 30 | 30 |
| இ, ஈ | ஆந்தை | ஞாயி, வெள் | ஆந்தை | நடை | 36 | 30 |
| உ, ஊ | காகம் | திங்கள் | காகம் | அரசு | 48 | 24 |
| எ, ஏ | கோழி | செவ்வாய் | கோழி | துயில் | 18 | 24 |
| ஒ, ஓ | மயில் | புதன் | மயில் | சாவு | 12 | 26 |

## பக்ஷிகளுக்கு சத்துரு – மித்துரு விவரம்

| வளர்பிறை | வல்லூறுக்கு | ஆந்தைக்கு | காகத்துக்கு | கோழிக்கு | மயிலுக்கு |
|---|---|---|---|---|---|
| சத்துரு | காகம்<br>கோழி | மயில்<br>கோழி | வல்லூறு<br>மயில் | வல்லூறு<br>ஆந்தை | ஆந்தை<br>காகம் |
| மித்துரு | மயில்<br>ஆந்தை | வல்லூறு<br>காகம் | ஆந்தை<br>கோழி | மயில்<br>காகம் | வல்லூறு<br>கோழி |

| ▪ தேய்பிறை பகல் தொழில் | | | | | | | ▪ தேய்பிறை இரவுத் தொழில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வாரம் | பக்ஷிகள் | 6.00–8.24 | 8.24–10.48 | 10.48–1.12 | 1.12–3.36 | 3.36–6.00 | 6.00–8.24 | 8.24–10.48 | 10.48–1.12 | 1.12–3.36 | 3.36–6.00 |
| ஞாயிறு செவ்வாய் | கோழி | ஊண் | சாவு | துயில் | அரசு | நடை | நடை | சாவு | அரசு | ஊண் | துயில் |
| | வல்லூறு | நடை | ஊண் | சாவு | துயில் | அரசு | ஊண் | துயில் | நடை | சாவு | அரசு |
| | ஆந்தை | சாவு | துயில் | அரசு | நடை | ஊண் | அரசு | ஊண் | துயில் | நடை | சாவு |
| | மயில் | துயில் | அரசு | நடை | ஊண் | சாவு | துயில் | நடை | சாவு | அரசு | ஊண் |
| | காகம் | அரசு | நடை | ஊண் | சாவு | துயில் | சாவு | அரசு | ஊண் | துயில் | நடை |
| திங்கள் சனி | கோழி | அரசு | நடை | ஊண் | சாவு | துயில் | ஊண் | துயில் | நடை | சாவு | அரசு |
| | வல்லூறு | துயில் | அரசு | நடை | ஊண் | சாவு | சாவு | அரசு | ஊண் | துயில் | நடை |
| | ஆந்தை | நடை | ஊண் | சாவு | துயில் | அரசு | நடை | சாவு | அரசு | ஊண் | துயில் |
| | மயில் | ஊண் | சாவு | துயில் | அரசு | நடை | அரசு | ஊண் | துயில் | நடை | சாவு |
| | காகம் | சாவு | துயில் | அரசு | நடை | ஊண் | துயில் | நடை | சாவு | அரசு | ஊண் |
| புதன் | கோழி | துயில் | அரசு | நடை | ஊண் | சாவு | சாவு | அரசு | ஊண் | துயில் | நடை |
| | வல்லூறு | சாவு | துயில் | அரசு | நடை | ஊண் | துயில் | நடை | சாவு | அரசு | ஊண் |
| | ஆந்தை | அரசு | நடை | ஊண் | சாவு | துயில் | ஊண் | துயில் | நடை | சாவு | அரசு |
| | மயில் | நடை | ஊண் | சாவு | துயில் | அரசு | நடை | சாவு | அரசு | ஊண் | துயில் |
| | காகம் | ஊண் | சாவு | துயில் | அரசு | நடை | அரசு | ஊண் | துயில் | நடை | சாவு |
| வியாழன் | கோழி | நடை | ஊண் | சாவு | துயில் | அரசு | அரசு | ஊண் | துயில் | நடை | சாவு |
| | வல்லூறு | அரசு | நடை | ஊண் | சாவு | துயில் | நடை | சாவு | அரசு | ஊண் | துயில் |
| | ஆந்தை | ஊண் | சாவு | துயில் | அரசு | நடை | துயில் | நடை | சாவு | அரசு | ஊண் |
| | மயில் | சாவு | துயில் | அரசு | நடை | ஊண் | சாவு | அரசு | ஊண் | துயில் | நடை |
| | காகம் | துயில் | அரசு | நடை | ஊண் | சாவு | ஊண் | துயில் | நடை | சாவு | அரசு |
| வெள்ளி | கோழி | சாவு | துயில் | அரசு | நடை | ஊண் | துயில் | நடை | சாவு | அரசு | ஊண் |
| | வல்லூறு | ஊண் | சாவு | துயில் | அரசு | நடை | அரசு | ஊண் | துயில் | நடை | சாவு |
| | ஆந்தை | துயில் | அரசு | நடை | ஊண் | சாவு | சாவு | அரசு | ஊண் | துயில் | நடை |
| | மயில் | அரசு | நடை | ஊண் | சாவு | துயில் | ஊண் | துயில் | நடை | சாவு | அரசு |
| | காகம் | நடை | ஊண் | சாவு | துயில் | அரசு | நடை | சாவு | அரசு | ஊண் | துயில் |

| பெயர்ப்க்ஷி பக்ஷி | | படு பக்ஷி | | சூக்ஷீமத் தொழில் | | |
|---|---|---|---|---|---|---|
| பெயர் முதலக்ஷரம் | பக்ஷி | வாரம் | பக்ஷி | தொழில் | பகல், நிமிட | இரவு நிமிட |
| அ,,ஆ, ஐ, ஔ | கோழி | செவ்வாய் | கோழி | ஊண் | 48 | 42 |
| இ, ஈ | வல்லூறு | திங்கள் | வல்லூறு | நடை | 36 | 42 |
| உ, ஊ | ஆந்தை | ஞாயிறு | ஆந்தை | அரசு | 18 | 18 |
| எ, ஏ | மயில் | வியா, சனி | மயில் | துயில் | 12 | 18 |
| ஒ, ஓ | காகம் | புத, வெள் | காகம் | சாவு | 30 | 24 |

**பக்ஷிகளுக்கு சத்துரு – மித்துரு விவரம்**

| தேய்பிறை | வல்லூறுக்கு | ஆந்தைக்கு | காகத்துக்கு | கோழிக்கு | மயிலுக்கு |
|---|---|---|---|---|---|
| சத்துரு | ஆந்தை<br>கோழி | வல்லூறு<br>மயில் | மயில்<br>கோழி | காகம்<br>வல்லூறு | ஆந்தை<br>காகம் |
| மித்துரு | மயில்<br>காகம் | கோழி<br>காகம் | ஆந்தை<br>வல்லூறு | மயில்<br>ஆந்தை | வல்லூறு<br>கோழி |

**சகுணங்கள்**

சகுணங்கள் என்பது நிமித்தம் என்று பொருள்படும் ஆதிகாலந் தொட்டே கண்ணில் படும் பொருட்கள், பறவைகள், விலங்குகள், மனிதர்கள் ஆகியவற்றை கொண்டு ஒரு காரியம் தொடங்குவதற்கும், பயணங்கள் செய்யவும், சுபகாரியங்கள் நடத்தவும் சகுணங்கள் பார்க்கப்பட்டன. தற்காலத்தில் நிறைய அறிவியல் வளர்ந்து விட்டதால் பல வகைகளில் சகுணம் பரிணாம வளர்ச்சியடைந்து பிரசன்னங்களாக நம்மிடம் உள்ளது. இருப்பினும் ஆதிகால சகுணங்களையும் நாம் அறிந்து கொள்ளும் வண்ணம், இங்கு பஞ்சாங்க சகுணங்களை பற்றிய சிறிய தொகுப்பு தரப்படுகிறது.

**ஜீவன பக்ஷி சகுனங்கள்:**

வலியன், கருடன், காட்டுக்கடை, கழுகு, உடும்பு, ஆந்தை, கீரி, குரங்கு, பராத்துவாசம், மான், காடை, கோட்டான், நாய், அணில் முஞ்சூறு இவை வலது பக்கமிருந்து இடது பக்கம் போனால் சுபம். காரிய ஜெயம், நாரை, விச்சுளி, காக்கை, செம்போத்து, கிளி, கொக்கு, மயில், கோழி, ஓணான், புள்ளிமான், புனுகுபூனை, புலி, நரி, நாராயணபட்சி, கள்ளிக் காக்கை, குயில், மாடு, எருமை இவைகள் இடது பக்கமிருந்து வலது பக்கம் போனால் சுபக் காரியம் ஜெயம், பாம்பு, பூனை, முயல் குறுக்கிடலாகாது.

**சுப சகுனம்:**

கன்னிகை, பசு, பட்சிக்கூட்டம், சங்குநாதம், தயிர், புஷ்பம், குதிரை, யானை முஞ்சூரின் சத்தம், வேத ஓசை, கழுதை, குதிரை கனைத்தல், நாய் உதறல், ஆந்தை கிளை கூட்டல், ரிஷபம், கட்டுச் சாதம், பிரேதம், கல்யாணம், மேளவாத்தியம், இரட்டை மீன், இரட்டை பூரண கும்பம், தாசி, சுமங்கலி, மாமிசம், பிரியமான வாக்கு, கொடி, குடை, கரும்பு, நரி, கள்ளு, அரசன், முத்து, அட்சதை, பொறி, பேரி வாத்தியம், இரட்டை பிராமணர், தாமரை, ஏரி, நெருப்பு, சலவை வஸ்திரம், வாகனம் இவை எதிர்ப்பட்டால் உத்தமம்.

கன்னிகை, சுமங்கலி, தாசி, மங்கள வாத்தியம், மணமக்கள், சுப வரிசை, நிறைகுடம், சங்குநாதம், அட்சதை, தேவஓசை, இரண்டு பூரண கும்பங்கள், கட்டுச்சாதம், அரசர், இரட்டை பிராமணர், வண்ணான், பூக்கள், பழங்கள், பறவைக்கூட்டம், நெருப்பு, பிரேதம், சலவைத்துணி, யானை, குதிரை, காளை, முத்து, மாமிசம், தயிர், நெய், கள், தேன், பொரி, குடை, கொடி, சாமரை, கரும்பு, மூஞ்சூறின் சத்தம், கழுதை, குதிரை கனைத்தல், நாய் உதறல், ஆந்தை கிளைகூட்டல் இவை எதிர்ப்பட்டால் சுபம்.

ஒரு காரிய நிமித்தம் கிளம்பும் போது கருடன், கழுகு, உடும்பு, கீரி, குரங்கு, ஆந்தை, கோட்டான், நாய், வலியன், அணில், மூஞ்சூறு இவைகள் வலமிருந்து இடமாகப் போனால் சுபம். காகம், கிளி, கொக்கு, மயில், கோழி, ஓணான், மான், ஜவ்வாதுபூனை, நரி, புலி இவைகள் இடமிருந்து வலமாகப் போனால் சுபம். எப்பக்கத்திலிருந்தும் பாம்பு, பூனை, பன்றி, முயல் ஆகியன குறுக்கே வரக்கூடாது.

**அசுப சகுனங்கள்:**

பைத்தியக்காரர், குருடர், விரூபிகள், நொண்டி, விறகுகட்டு, மொட்டைத்தலை, விரிதலை, எண்ணெய்தலை, நோயாளி, வைத்தியன், வாணிபன், தட்டான், ஒற்றைப்பிராமணன், இரட்டை சூத்திரர், மூன்று வைசியன், கணக்கன், கணக்கோலை, சடாதாரி, குயவன், சன்னியாசி, நம்பி, தூரஸ்திரி, அமங்கலை, அழுத குரல், அலி, எண்ணெய்குடம், பால், பயங்கர வேஷதாரி, அரிவாள், கோடாலி, கடப்பாரை, புதுப்பானை, மோர் குடம், குரங்கு, பருத்தி, மூக்கில்லாதவன், சிவந்த புஷ்பம், ஈர வஸ்திரம் தரித்தவன், பூனை சண்டை, குடும்ப கலகம், அகாலமழை தூறல், பசுவினுடைய தும்மல், தடுக்கி விழுதல், இடி, காற்று, உபவாசம், ஷவரம், துக்கம், ஒற்றைக் குரலோசை, பன்றியுறுமல், அபானவாயு பிரிதல், கொக்கரித்தல், ஓவென கத்தல், தலை தட்டல், உண்டு போவெனல், போகாதேயெனல், கூட வருகிறேனெனல்.

மாத விலக்கான பெண், விதவை, அவிழ்ந்ததலை, எண்ணெய்த்தலை, மொட்டை, சடைமுடியுள்ள ஆண், பைத்தியக்காரன், குருடர், நொண்டி, அலி, நோயாளி, வைத்தியன், வாணிகன், தட்டான், குயவன், சந்நியாசி,

ஒற்றைப்பிராமணர், மூன்று கோமுட்டிகள், விறகுக்கட்டு, ஈரவேஷ்டி, வெற்றுக்குடம், உப்பு, அரிவாள், கோடாரி, கடப்பாரை ஆகியன எதிர்ப்பட்டால் அசுப பலன்கள் உண்டாகும். ஒரு காரிய நிமித்தம் கிளம்பும் போது இடி இடித்தல், தூறல் போடுதல், அகால மழை பெய்தல், தும்மல் போடுதல், அழுதல், அழுகுரல் கேட்டல், ஒங்காரமிடல், கொக்கரித்தல், சண்டை போடுதல், பூனை கத்துதல், பன்றி உறுமுதல், துணி அவிழ்தல், இடறி விழுதல், தலை தட்டுதல், சாப்பிட்டுப்போ எனல், போகாதே எனில், எங்கே போகிறாய் எனல், கூட வருகிறேன் எனல் ஆகியனவும் அசுப பலன்களைத்தரும்.

## கருட தரிசனப் பலன்

ஆகாயத்தில் கருடன் பறந்து செல்லும் போது என்னென்ன கிழமைகளில் நாம் அதைப் பார்ப்பதால் என்னென்ன பலன் உண்டாகும் என்ற விவரம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

1. ஞாயிற்றுக்கிழமை பார்த்தல் நோய் தீரும்.
2. திங்கள் கிழமை பார்த்தால் துன்பம் தீரும்.
3. செவ்வாய்க்கிழமை பார்த்தால் துன்பம் தீரும்.
4. புதன்கிழமை பார்த்தால் பகைவர்கள் நமக்கு வைத்த பில்லி, சூனியம் முதலியவை நீங்கும்.
5. வியாழக்கிழமை பார்த்தால் பகைவர்கள் நமக்குவைத்த பில்லி, சூனியம் முதலியவை நீங்கும்.
6. வெள்ளிக்கிழமை பார்த்தால் நீண்ட ஆயுள் உண்டாகும்.
7. சனிக்கிழமை பார்த்தால் நீண்ட ஆயுள் உண்டாகும்.

## ஆந்தை சீரலின் பலன்

பஞ்சாங்கங்களில் ஆந்தை சீரலுக்குப் பலன் சொல்லப்பட்டுள்ளது. அது எத்தனை முறை சீரல் செய்கின்றதோ, அதற்குத் தகுந்தபடி பலன் சொல்லப்பட்டுள்ளது.

1. ஒரு சீரல் சாவுச்செய்தி வரும்
2. இரண்டு சீரல் நினைத்த காரியம் நடக்கும்
3. மூன்று சீரல் கன்னியுடன் கூடுவாய்
4. நான்கு சீரல் உடனே கலகம் உண்டாகும்
5. ஐந்து சீரல் பிரயாணம் உண்டாகும்
6. ஆறு சீரல் உறவினர்கள் வருகை
7. ஏழு செல்வம் உண்டாகும்
8. எட்டு சீரல் உடனே சாவு உண்டாகும்
9. ஒன்பது சீரல் உடனே நன்மை ஏற்படும்
10. பத்து சீரல் மென்மேலும் நன்மை உண்டாகும்.

## சித்திரை மாதப் பிறப்பின் பலன்

சித்திரை மாதம் 1–ஆம் தேதி என்ன கிழமையில் வருகின்றதோ அதற்குத் தகுந்தபடி மக்களுக்கு உண்டாகும். நன்மை, தீமை, மழை, வெள்ளம், காற்று இவற்றைப் பற்றி பலன் கூறப்பட்டுள்ளது. அந்த கிழமை வாரியான பலன் விவரம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

1. ஞாயிற்றுக்கிழமையில் சித்திரை மாதம் பிறந்தால் மழை மிக மிகக் குறைவாகப் பெய்யும்.
2. திங்கட்கிழமையில் பிறந்தால் அதிக மழைபெய்து அதிக வெள்ளப் பெருக்கு ஏற்படும்.
3. செவ்வாய்க் கிழமையில் பிறந்தால் கருமேகம் உண்டாகும்.
4. புதன் கிழமையில் பிறந்தால் அதிகக் காற்று அடிக்கும்
5. வியாழக்கிழமையில் பிறந்தால் சௌக்கியம் ஏற்படும்
6. வெள்ளிக்கிழமையில் பிறந்தால் மிக அதிகமான மழை பெய்யும்
7. சனிக்கிழமையில் பிறந்தால் மழை மிகமிகக் குறைவாகப் பெய்யும்.

## ஆடி 5–ம் தேதி பலன்

ஆடிமாதம் 5–ம் தேதி புதன் கிழமையில் வந்தால் அவ்வருஷத்தில் ஒரு போகம் விளையும். வியாழக்கிழமையில் வந்தால் இரு போகம் விளையும். செவ்வாய்க் கிழமையில் வந்தால் கதிர் சாவியாகி விடும். திங்கள், சனி, ஞாயிறு ஆகிய கிழமைகளில் வந்தால், பயிர்களை விஷப்பூச்சி தாக்கி அழிக்கும்.

## பத்து திக்கு பல்லி சொல்லுக்குப் பலன்

நாம் நம் வீட்டில் சில விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் போது பல்லி சத்தமிடும். இவ்வாறு அது சத்தமிடும் போது எந்தக் கிழமையில் எந்தத் திசையிலிருந்து சத்தமிடுகின்றதோ அதற்குத் தகுந்தபடி பலன் கிடைக்கும். உதாரணமாக, ஞாயிற்றுக்கிழமையில் பல்லியானது வீட்டின் தென் திசையிலிருந்து சத்தம் கொடுத்தால் நாம் பேசிக் கொண்டிருக்கும் காரியம் சுபமாக முடியும். ஆனால் அந்தப் பல்லியானது தென் கிழக்குத் திசையிலிருந்து சத்தம் கொடுத்தால் நாம் பேசிக் கொண்டிருக்கும் காரியமானது தீமையில் முடியும். இவ்வாறு ஒவ்வொரு கிழமைக்கும் ஒவ்வொரு திசைக்கும் பலன் கூறப்பட்டுள்ளது. அதை இப்போது பார்ப்போம்.

**ஞாயிற்றுக்கிழமை:–**

கிழக்கு – பயம், தென்கிழக்கு – தீமை, தெற்கு – சுபம், தென்மேற்கு – உறவினர் வருகை, மேற்கு – சண்டை, வடமேற்கு – ஆடை விருத்தி, வடக்கு – திரவிய லாபம், வடகிழக்கு – லாபம் உண்டாகும், ஆகாயம் – வெற்றி, பூமி – காரியம் சாதகமாக முடிவடையும்.

**திங்கட்கிழமை:–**

கிழக்கு – திரவியலாபம், தென்கிழக்கு – கலகம், தெற்கு – எதிரி வருகை, தென்மேற்கு – விரோதம், மேற்கு – ராஜ தரிசனம், வடமேற்கு – துக்கம், வடக்கு – ஆடை விருத்தி, வடகிழக்கு – மங்களகாரியம் நடக்கும், ஆகாயம் – கேடு, பூமி – திரவியம்.

**செவ்வாய்க்கிழமை:–**

கிழக்கு – செல்வம், தென்கிழக்கு – சுற்றத்தார் வருகை, தெற்கு – பொறாமை, தென் மேற்கு – எதிரியால் பயம், மேற்கு – காரியம் சாதகமாய் நடத்தல், வட மேற்கு – கெட்ட செய்தி, வடக்கு – எதிரிபயம், வடகிழக்கு – வண்டி, வாகனம் உண்டாகும், ஆகாயம் – பிரயாணம், பூமி – பொன், பொருள் சேர்க்கை.

**புதன்கிழமை:–**

கிழக்கு–சந்தோஷம், தென்கிழக்கு– பொன், பொருள் லாபம், தெற்கு – உடல் நோய், தென்மேற்கு – உறவினர் மரணம், மேற்கு –பயம், வடமேற்கு – பொன், பொருள் நாசம், வடக்கு – சுபம், வடகிழக்கு – நஷ்டம், ஆகாயம் – நல்ல வார்த்தை, பூமி – ஐஸ்வரியம்.

**வியாழக்கிழமை:–**

கிழக்கு – அசுபம், தென்கிழக்கு – உறவினர் மரணம், தெற்கு – பொன், பொருள் லாபம், தென்மேற்கு – காரியவெற்றி, மேற்கு – கஷ்டம், வடமேற்கு – நல்ல வார்த்தை, வடக்கு – தீமை, வடகிழக்கு – உணவு சுகம், ஆகாயம் – கலகம், பூமி – கலகம்.

**வெள்ளிக்கிழமை:–**

கிழக்கு – சுபம், தென்கிழக்கு – அலங்காரம், தெற்கு – உறவினர் தரிசனம், தென்மேற்கு – நல்ல வார்த்தை, மேற்கு – சந்தோஷம், வடமேற்கு – வீட்டில் கலகம், வடக்கு – கலகம், வடகிழக்கு – எதிரி பயம், ஆகாயம் – பொருள் வரவு, பூமி – தீட்டு ஸ்நானம்.

**சனிக்கிழமை:–**

கிழக்கு – அதிக வார்த்தை, தென்கிழக்கு – பொன், பொருள் லாபம், தெற்கு – ராஜ தரிசனம், தென்மேற்கு – நோய், மேற்கு – ஆடை லாபம், வடமேற்கு – பெண்ணுடன் சேர்க்கை, வடக்கு – பிரிய சமாசாரம், வடகிழக்கு – திருடர் வரவு, ஆகாயம் – காரிய நஷ்டம், பூமி – காரிய வெற்றி.

## பல்லி விழும் பலன்

தலை – கலகம். குடுமி – சுகம். கூந்தல் – லாபம், முகம் – உறவினர் தரிசனம். நெற்றி – செல்வம். வலது, இடது புருவம் – காரியானு கூலம். இருபுருவத்துக்கிடையில் – புத்திரமரணம். வலது கபாலம் – செல்வம். இடது கபாலம் – அன்புக்குடையர் சந்திப்பு. வலது கண் – சுபம். இடது கண் – கட்டுப்படுதல். மூக்கு – வியாதி. மூக்கு நுனி – விசனம். மேல் உதடு – பொருள் நாசம். கீழ் உதடு – பொருள் வரவு. வாய் – பயம். மோவாய் கட்டை – அரச தண்டனை. வலதுகாது – தீர்க்காயுள். இடது காது – வியாபார விருத்தி. கழுத்து– சத்ருநாசம். வலது புஜம் – வெற்றி. இடது புஜம் – பெண் சேர்க்கை. வலது, இடது கை – மரணம். வலது மணிக்கட்டு – பீடை. இடது மணிக்கட்டு – புகழ், வலது கைவிரல் – ராஜ சன்மானம். இடக்கை விரல் – சஞ்சலம். மார்பு – தனலாபம். வலது, இடது ஸ்தனங்கள் – பாவசம்பவம். உள்ளங்கை, கால் – ஐஸ்வர்ய விருத்தி. இருதயம் – சௌக்கியம். வலது விலா – வாழ்வு. இடது விலா – மரணம். வயிறு – தானிய லாபம். கொப்பூழ் – ரத்தினலாபம். அடிவயிறு – லாபம். முதுகு – பொருள்நாசம். குறி – தரித்திரம். வலது, இடது குதப் பகுதி – பொருட்செல்வம். தொடைகள் – பிதாமரணம். வலது, இடது முழங்கால்கள் – சுபம். வலது, இடது கணுக்கால் – சுபம். வலது பாதம் – நோய். இடது பாதம் – துக்கம். வலது பாத விரல்கள் – ராஜபயம். இடது பாத விரல்கள் – நோய். கால்விரல் நகங்கள் – தனலாபம். பல்லி தேகத்தில் ஏறினால் நன்மை, இறங்கினால் தீமை.

## கனவுகளின் பலன்கள்

**சுப கனவுகள்:–**

பசு, எருது, யானை, கோயில்கள், ராஜா, அரண்மனை, குதிரை, தங்கம்,மலை உச்சி, கனியுள்ள மரத்தின் மேலேறுதல், மாமிசஉணவு, தயிர்ச்சாதம் சாப்பிடுதல், சாராயம் குடித்தல், ரத்த அபிஷேகம், வெள்ளை ஆடை உடுத்துதல், ரத்தின ஆபரணங்கள் காணல், சந்தனம் பூசிக் கொள்ளல், வெற்றிலை பாக்கு போடுதல், கற்பூரம், அகில்மரம், வெள்ளைப்பூ இவைகளைக் கண்டால் உறவினர் தரிசனமும், தன லாபங்களும், கீர்த்தியும் உண்டாகும். சுவர் மேல் உட்கார்ந்தது சாப்பிடுதல், வானத்திலி பறத்தல், நதி, கடல் தாண்டுதல், தீயில் அகப்படுதல், தேவதாசிகள், தீபம் இவைகளைக் கண்டால் விசேஷ லாபம் உண்டாகும். பாம்பு, தேள் கண்டால் வெற்றி கிடைக்கும். சூரியதரிசனம், சந்திரதரிசனம், நட்சத்திரங்கள், பிராமணர்கள், பறவைகள், குடை, உமி, தாமரைப்பூ, ரோஜா, நிறைய ஆபரணம் அணிந்த பொன், பால், கண்ணாடி, குளம், தாண்டுதல் இவைகளைக் கண்டால் வியாதி குறையும். தாய், தந்தை, கொக்கு, கோழி, மான் இவைகளைக் கண்டால் நல்ல காரியம் நடக்கும். எச்சில், அசுத்தம் இவை உடம்பில் படுதல், பெண்ணுடன் சேருதல், பிணம் இவைகளைக் கண்டால், புதிய பொருள் சேர்க்கை உண்டாகும். நாகப்பாம்பு வலது தோளில் ஏறக்கண்டால்,

புதையல் கிடைக்கும். தாமரை இலையில் பாயசம் சாப்பிடுவது போல் கண்டால், பிரபு ஆவான். பறவைகளை வலை போட்டு பிடிப்பது போல் கண்டால், புதிய பெண்ணின் சேர்க்கை உண்டாகும். மனிதனுடைய மாமிசம் சாப்பிடக் கண்டால், தனம் கிடைக்கும். மனிதன் குடலை கழுத்தில் சுற்றிக் கொண்டு கிராமத்திற்கு நடுவில் நிற்பதுபோல் கண்டால், பெருந்தலைவன் ஆவான்.

**அசுப கனவுகள்:—**

கழுதை, ஒட்டகம், கிடா இவைகளை வண்டியில் கட்டி ஏறக் கண்டால், ஆயுள் கண்டம், மரணம் ஏற்படும். தலை மயிர் சிக்குபட, பற்கள் விழக்கண்டால், தானியச் செலவும், தூர தேச பிரயாணமும் உண்டாகும். பஞ்சம ஜாதிகள், படிக்காதவர்கள் ஆயுதங்களுடன் சண்டைக்கு வரக் கண்டால், தன் உடம்பில் காயம் உண்டாகும். வீட்டைச் சாணியினால் மெழுகி கோலமிடக் கண்டால், திருடர் பயம் உண்டாகும். வேள்வித்தூண், புற்று, மொட்டைமரம், எண்ணெய், பருத்தி, சாம்பல், மோர், இரும்பு, கழுகு, குருங்கு கழுதை, இரத்தத் துணி இவைகளைக் கண்டால், வியாதி உண்டாகும்.

**பின் குறிப்பு:—**

பகலில் காணும் கனவிற்கு பலன் கிடையாது. மாலை 6.00 மணி முதல் 8.24 க்குள் கண்ட கனவு 1 வருடத்திலும், இரவு 8.24 முதல் 10.48க்குள் கண்ட கனவு 3 மாதத்திலும், இரவு 10.48 முதல் 1–12 க்குள் கண்டகனவு 10 நாட்களிலும், அதிகாலை 3–36 முதல் 6–00 க்குள் கண்ட கனவு உடனேயும் பலிக்கும். நல்ல கனவு கண்டால் உடனே நித்திரை கொள்ளக்கூடாது. கெட்ட கனவு கண்டால் கடவுளை வணங்கி விட்டு மீண்டும் நித்திரை கொள்ளலாம்.

குறிப்பு

.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................

## கூறு – 3 காலங்கள்

### 1. நல்ல நேரங்கள்

பஞ்சாங்கங்களில் கூறப்பட்டுள்ள நல்ல நேரங்கள் மற்றும் தீய நேரங்களான ராகுகாலம், எமகண்டம், அர்த்தபிரகணன், காலன் மற்றும் கௌரிபஞ்சாங்கம், குளிகைநேரம், ஓரைகள் ஆகிய நேரங்கள் அனைத்தும் தோராயமாகவே கொடுக்கப்பட்டிருக்கும். இந்த அளவீடுகள் அனைத்தும் சூரிய உதயம் சரியாக காலை 6.00 மணி என்றும், சூரிய அஸ்தமனம் சரியாக மாலை 6.00 மணி என்றும் கொடுக்கப்பட்டுள்ள பொதுவான நேரங்கள் ஆகும். இது இரவு பகல் சரி சமமாக 12 மணி நேரம் என்ற அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கும்.

ஆனால் வருடம் முழுவதும் ஒரே மாதிரியான சூரிய உதயமோ, சூரிய அஸ்தமனமோ, நிகழ்வது இல்லை சில மாதத்தில் பகல் பொழுது அதிகமாகவும், சில மாதத்தில் இரவு வேளை அதிகமாகவும் இருக்கும். இந்த நேரமானது தினமும் மாறிக்கொண்டே இருக்கும். எனவே நாம் எந்த நாளில் காரியங்கள் செய்ய வேண்டுமோ அந்த நாளின் சரியான சூரிய உதயம் மற்றும் அஸ்தமனத்தை கணக்கிட்டே நல்ல நேரங்களை தேர்வு செய்தல் வேண்டும். இதை போலவே தீய நேரங்களான ராகுகாலம், எமகண்டம், அர்த்தபிரகணன், காலன் மற்றும் நல்ல நேரங்களான குளிகை, அமிர்தம், லாபம், தனம், சுகம் மற்றும் சுப ஓரைகளையும் தேர்வு செய்தல் வேண்டும்.

**மாந்தி:**

மாந்தி எனப்படுவது சனியின் உப கிரகமாகும். மாந்தியை சனியின் பிள்ளை என்றும் கூறுவர். மாந்தி பொதுவாக தீய பலன் தரும் கிரகமாகும். பஞ்சாங்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள மாந்தி உதய நாழிகையை, ஜாதகர் பிறந்த உதயாதி நாழிகையாக பாவித்து இலக்கினம் கணித்து அந்த இராசியில் மாந்தியை குறிப்பிட வேண்டும்.

**மாந்தி உதயம் :**

| கிழமை | பகல் | | இரவு | |
|---|---|---|---|---|
| | நாழிகை | மணி | நாழிகை | மணி |
| ஞாயிறு | 26 | 04-24 P.M. | 10 | 10- 00 P.M. |
| திங்கள் | 22 | 02-48 P.M. | 06 | 08 – 24 P.M. |
| செவ்வாய் | 18 | 01-12 P.M. | 02 | 06 – 48 P.M. |
| புதன் | 14 | 11-36 P.M. | 26 | 04 – 24 A.M. |
| வியாழன் | 10 | 10-00 A.M. | 22 | 02 – 48 A.M. |
| வெள்ளி | 06 | 08-24 A.M. | 18 | 01 – 12 A.M. |
| சனி | 02 | 06-48 A.M. | 14 | 01 – 36 P.M. |

**இராகு காலம் :**

இராகுகாலம் என்பது இராகு கிரகத்தின் ஆதிக்கம் மிகுந்த நேரமாக கருதப்படுகிறது. இராகு காலம் ஒவ்வொரு நாளும் 3 ¾ நாழிகையாகும். அதாவது 1 ½ மணி நேரமாகும்.

**இராகு காலம்**

| கிழமை | நாழிகை முதல் | நாழிகை வரை | மணி முதல் | மணி வரை |
|---|---|---|---|---|
| ஞாயிறு | 26 ¼ | 30 | 04.30 P.M. | 06.00 P.M. |
| திங்கள் | 03 ¾ | 7 ½ | 07.30 A.M. | 09.00 A.M. |
| செவ்வாய் | 22 ½ | 26 ¼ | 03.00 P.M. | 04.30 P.M. |
| புதன் | 15 | 18 ¾ | 12.00 P.M. | 01.30 P.M. |
| வியாழன் | 18 ¾ | 22 ½ | 01.30 P.M. | 03.00 P.M. |
| வெள்ளி | 11 ¼ | 15 | 10.30 A.M. | 12.00 P.M. |
| சனி | 07 ½ | 11 ¼ | 09.00 A.M. | 10.30 A.M. |

திங்கள்கிழமை துவங்கி சனி, வெள்ளி, புதன், வியாழன், செவ்வாய், ஞாயிறு என்ற கிழமை வரிசையில் இராகுகாலம் அமையும்.

**எமகண்டம் :**

இதை எமகண்டகம் என்றும் கூறுவர். எமகண்டம் என்றால் எமனுக்கே முள்ளாகக் கூடிய என்று பொருள். எமகண்டன் குருவுக்கு உபகிரகம் என்றும், குருவின் பிள்ளை என்றும் கூறுவர். எமகண்டம் ஒவ்வொரு நாளும் 3 ¾ நாழிகை அதாவது 1 ½ மணி நேரமாகும்.

| பகல் | | | | | இரவு | |
|---|---|---|---|---|---|---|
| கிழமை | நாழிகை முதல் | நாழிகை வரை | மணி முதல் | மணி வரை | மணி முதல் | மணி வரை |
| ஞாயிறு | 15.00 | 18 ¾ | 12.00 | 01.30 | 06.00 | 07.30 |
| திங்கள் | 11 ¼ | 15 | 10.30 | 12.00 | 03.00 | 04.30 |
| செவ்வாய் | 7 ½ | 11 ¼ | 09.00 | 10.30 | 01.30 | 03.00 |
| புதன் | 3 ¾ | 7 ½ | 07.30 | 09.00 | 12.00 | 01.30 |
| வியாழன் | 00 | 3 ¾ | 06.00 | 07.30 | 10.30 | 12.00 |
| வெள்ளி | 22 ½ | 26 ¼ | 03.00 | 04.30 | 09.00 | 10.30 |
| சனி | 18 ¾ | 22 ½ | 01.30 | 03.00 | 07.30 | 09.00 |

எமகண்டம் வியாழக்கிழமை துவங்கி புதன், செவ்வாய், திங்கள், ஞாயிறு, சனி, வெள்ளி என்ற வரிசையில் அமையும்.

**அர்த்த பிரகணன் :**

அர்த்த பிரகணன் என்பது புதன் கிரகத்தின் உபகிரகம் ஆகும். புதன் கிரகத்தின் பிள்ளை என்றும் கூறுவர். ஒவ்வொரு நாளும் **3** ¾ நாழிகை அதாவது **1** ½ மணி நேரமாகும்.

| **கிழமை** | **நாழிகை முதல்** | **நாழிகை வரை** | **மணி முதல்** | **மணி வரை** |
|---|---|---|---|---|
| ஞாயிறு | 11 ¼ | 15 | 10.30 A.M. | 12.00 P.M. |
| திங்கள் | 07 ½ | 11 ¼ | 09.00 A.M. | 10.30 A.M. |
| செவ்வாய் | 03 ¾ | 07 ½ | 07.30 A.M. | 09.00 P.M. |
| புதன் | 00 | 03 ¾ | 06.00 A.M. | 07.30 P.M. |
| வியாழன் | 22 ½ | 26 ¼ | 03.00 P.M. | 04.30 P.M. |
| வெள்ளி | 18 ¾ | 22 ½ | 01.30 P.M. | 03.00 P.M. |
| சனி | 15 | 18 ¾ | 12.00 P.M. | 01.30 A.M. |

அர்த்த பிரகணன் புதன் கிழமை துவங்கி செவ்வாய், திங்கள், ஞாயிறு, சனி, வெள்ளி, வியாழன் என்ற வரிசையில் அமையும்.

**காலன் :**

காலன் என்பது சூரியனின் உபகிரகம் ஆகும். இதை சூரியனின் பிள்ளை என்றும் கூறுவர். ஒவ்வொரு நாளும் **3** ¾ நாழிகை அதாவது **1** ½ மணி நேரமாகும்.

| **கிழமை** | **நாழிகை முதல்** | **நாழிகை வரை** | **மணி முதல்** | **மணி வரை** |
|---|---|---|---|---|
| ஞாயிறு | 00 | 03 ¾ | **06.00** A.M. | 07.30 A.M. |
| திங்கள் | 22 ½ | 26 ¼ | 03.00 P.M. | 04.30 P.M. |
| செவ்வாய் | 18 ¾ | 22 ½ | 01.30 P.M. | 03.00 P.M. |
| புதன் | 15 | 18 ¾ | 12.00 P.M. | 01.30 P.M. |
| வியாழன் | 11 ¼ | 15 | 10.30 P.M. | 12.00 P.M. |
| வெள்ளி | 07 ½ | 11 ¼ | 09.00 P.M. | 10.30 A.M. |
| சனி | 03 ¾ | 07 ½ | 07.30 P.M. | 09.00 A.M. |

காலன் ஞாயிற்றுக்கிழமை துவங்கி சனி, வெள்ளி, வியாழன், புதன், செவ்வாய், திங்கள் என்ற வரிசையில் அமையும்.

இராகுகாலம், குளிகன், எமகண்டம், அர்த்த பிரகணன், காலன் ஆகிய காலங்கள், சூரிய உதயம் **6.00** மணி என்றும் அகஸ் முப்பது நாழிகை என்ற அடிப்படையிலும் கணிக்கப்பட்டு பஞ்சாங்களில் அட்டவணையாக கொடுக்கப்பட்டுள்ளது.

ஒரு நாள் **01** மணி **30** நிமிடம் கொண்ட **8** பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. சூரிய உதயம், சூரிய அஸ்தமனம், அகஸ் வித்தியாசத்தில் இந்த அளவு மாறும். மேலும் இவை துவங்கும் நேரமும் மாறும்.

(உதா)

மன்மத வருடம் சித்திரை மாதம் (22–04–2015) புதன்கிழமை சூரிய உதயம் **6.02** AM சூரிய அஸ்தமனம் **6.29** Pm.

| | | | |
|---|---|---|---|
| பகல்வேளை | = | **6.02** Am | சூரிய உதயம் |
| | | **6.29** Pm | சூரிய அஸ்தமணம் |
| | | 12.00 + | (ரயில்வே மணியாக்க) |
| | | ––––––––– | |
| | | 18.29 | |
| | | 6.02 (–) | சூரிய உதயம் |
| | | –––––––––– | |
| 8 பாகம் | = | 12 – 27 | |
| பகல் வேளை | = | 12–27 | |
| ம தி நொ | | –––––––––– | |
| 1 பாகம் | = | 1 – 33 – 22 | |

எனவே அன்றைய நாள் ராகுகாலம், எமகண்டம், குளிகை, அர்த்தபிரகணம், கௌரி பஞ்சாங்கம் ஆகியவை அனைத்தும் 1 மணி நேரம், **33 ½** நிமிடங்கள் கொண்டவையாகும். இதை சூரிய உதய முதல் கணக்கிடல் வேண்டும். அன்றைய நாள் காலை **6.00** மணி முதல் **7.30** மணி வரை அர்த்த பிரகணன் நேரம் என பஞ்சாங்கத்தில் இருக்கும். ஆனால் அன்றைய மிக சரியான அர்த்த பிரகன நேரம்.

| | | |
|---|---|---|
| சூரிய உதயம் | – | **6 – 02** + |
| பகல் வேலையின் 1 பாகம் | – | **1 – 33 ½** மணி – நிமிடம் |
| | | **7 – 35 ½** |
| | | –––––– |

எனவே காலை **6 – 02** முதல் **7 – 35** ½ மணி வரை அர்த்தபிரகனன் ஆகும்.

## கௌரி பஞ்சாங்கம்

கீழ்கண்டவாறு கௌரி பஞ்சாங்கம் கணிக்கப்படுகிறது. ஒரு நாளின் கால அளவான 60 நாழிகைகள் (24 மணி நேரம்) 16 பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு பிரிவும் 3¾ நாழிகைகள் அதாவது 01 மணி 30 நிமிடங்கள் ஆகும். இதற்கு குறிப்பிட்ட பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த 16 பிரிவுகள் பகலில் 8 இரவில் 8 என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

இந்த எட்டுப்பிரிவுகளின் பெயர்கள் பின்வருமாறு:

1. உத்தியோகம்
2. அமுதம்
3. ரோகம்
4. இலாபம்
5. தனம்
6. சுகம்
7. சோரம்
8. விஷம்

## கௌரி பஞ்சாங்கம்

| கிழமை | மணி | 06.00 To 07.30 | 07.30 To 09.00 | 09.00 To 10.30 | 10.30 To 12.00 | 12.00 To 01.30 | 01.30 To 03.00 | 03.00 To 04.30 | 04.30 To 06.00 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | பகல் | உத்தி | அமுத | ரோக | லாபம் | தனம் | சுகம் | சோர | விஷம் |
| | இரவு | தனம் | சுகம் | சோர | விஷம் | உத்தி | அமுத | ரோக | லாபம் |
| திங்கள் | பகல் | அமுத | விஷம் | ரோக | லாபம் | தனம் | சுகம் | சோர | உத்தி |
| | இரவு | சுகம் | சோர | உத்தி | அமுத | விஷம் | ரோக | லாபம் | தனம் |
| செவ்வாய் | பகல் | ரோக | லாபம் | தனம் | சுகம் | சோர | உத்தி | விஷம் | அமுத |
| | இரவு | சோர | உத்தி | விஷம் | அமுத | ரோக | லாபம் | தனம் | சுகம் |
| புதன் | பகல் | லாபம் | தனம் | சுகம் | சோர | விஷம் | உத்தி | அமுத | ரோகம் |
| | இரவு | உத்தி | அமுத | ரோக | லாபம் | தனம் | சுகம் | சோர | விஷம் |
| வியாழன் | பகல் | தனம் | சுகம் | சோர | உத்தி | அமுத | விஷம் | சோக | லாபம் |
| | இரவு | அமுத | விஷம் | ரோக | லாபம் | தனம் | சுகம் | சோர | உத்தி |
| வெள்ளி | பகல் | சுகம் | சோர | உத்தி | விஷம் | அமுத | ரோக | லாபம் | தனம் |
| | இரவு | ரோக | லாபம் | தனம் | சுகம் | சோர | உத்தி | விஷம் | அமுத |
| சனி | பகல் | சோர | உத்தி | விஷம் | அமுத | ரோக | லாபம் | தனம் | சுகம் |
| | இரவு | லாபம் | தனம் | சுகம் | சோர | உத்தி | விஷம் | அமுத | ரோக |

இவற்றுள் உத்தியோகம், அமுதம், லாபம், தனம், சுகம் ஆகிய ஐந்தும் நன்மை தரவல்லன. கௌரி பஞ்சாங்கம் கோள்களின் காரகத்துவத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | – உத்தியோகம் | குரு | – தனம் |
| சந்திரன் | – அமுதம் | சுக்கிரன் | – சுகம் |
| செவ்வாய் | – ரோகம் | சனி | – சோரம் |
| புதன் | – லாபம் | இராகு, கேது | – விஷம் |

**பகலில் கௌரி பஞ்சாங்கம் அமைக்க**

முதலில் ஒரு நாளை எட்டு பிரிவாக பிரித்துக் கொள்ள வேண்டும். இராகு கால நேரத்தை முதலில் நிரப்பிக் கொள்ள வேண்டும். பிறகு அந்தந்த கிழமை அதிபதியின் கௌரி தொடங்கி வரிசையாக எழுத வேண்டும்.

**இரவில் கௌரி பஞ்சாங்கம் அமைக்க**

ஞாயிறு, செவ்வாய், வியாழன் ஆகிய கிழமைகளில் பகலில் ஐந்தாவதாக வரும் கௌரியை இரவில் முதலாவதாக வைத்து வரிசையாக எழுத வேண்டும்.

திங்கள், புதன், வெள்ளி, சனி ஆகிய கிழமைகளில் பகலில் ஆறாவதாக வரும் கௌரியை இரவில் முதலாவதாக வைத்து வரிசையாக எழுத வேண்டும்.

**ஓரை :**

கோள்களில் இராகு கேதுகள் தவிர மற்ற ஏழு கிரகங்களும் ஞாயிறு முதல் சனி வரையில் ஒவ்வொரு கிரகமும் ஒவ்வொரு கிழமைக்கு ஆதிபத்தியம் வகுக்கிறது. இது தவிர அன்றாடம் நடப்பில் உள்ள 24 மணி நேரத்தில் ஒரு மணி நேர கால அளவில் அதாவது 2½ நாழிகை அளவில் ஒவ்வோர் ஓரையாக நின்று பலன் தருகின்றன. ஒவ்வோர் ஓரையும் சூரிய உதயம் முதற்கொண்டு ஒரு மணி நேர கால அளவில் ஒவ்வொன்றும் ஒன்று விட்டு ஒன்று பின் புறமாக வரிசையில் தொடர்ந்து நடைபெறுகின்றன.

ஒரு குறிப்பிட்ட கிழமையில் சூரிய உதயத்தின் போது அந்தக் கிழமையின் அதிபதி கிரகத்தினுடைய ஓரையே முதலாவதாக ஆரம்பிக்கிறது. உதாரணமாக வெள்ளிக்கிழமை காலை சூரிய உதயத்தின் போது சூரியன் உதயமாகி ஒரு மணி நேரம் வரையில் சுக்கிர ஓரை நடைபெறும். அதை அடுத்து மற்ற ஓரைகள் தொடர்ந்து நடைபெறும்.

கிழமைகளின் வரிசைப்படி ஓரையின் வரிசை அமைவதில்லை. சூரிய ஓரை முதலாவதாகக் கொண்டால் அதை அடுத்து சுக்கிர ஓரை, புதன் ஓரை, சந்திர ஓரை, சனி ஓரை, குரு ஓரை, செவ்வாய் ஓரை என்று ஏழு கிரகங்களின் ஓரை ஆதிபத்தியம் முடிவடைந்து மீண்டும் சூரிய ஓரையில் ஆரம்பித்து அதே வரிசைக் கிரமத்தில் ஓரைகளின் கால கணிதம் தொடர்ந்து நடைபெறுகின்றன. ஒரு குறிப்பிட்ட கிழமை அன்று, அந்த கிழமை அதிபதியின் ஓரை நான்கு முறை இடம் பெறும், அதாவது 1) காலை 06.00 மணி முதல் 07.00 மணி வரை, 2) பகல் 01.00 மணி முதல் 02.00 மணி வரை, 3) இரவு 08.00 மணி முதல் 09.00 மணி வரை, 4) அதிகாலை 03.00 மணி முதல் 04.00 மணி வரை ஆகும்.

ஓரைகளின் பட்டியல்களும் அவற்றின் பலன்களும் கீழே காணலாம்.

**(பகல் கால அட்டவணை)**

| மணி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| 6–7 | சூரி | சந் | செவ் | புதன் | குரு | சுக் | சனி |
| 7–8 | சுக் | சனி | சூரி | சந் | செவ் | புதன் | குரு |
| 8–9 | புதன் | குரு | சுக் | சனி | சூரி | சந் | செவ் |
| 9–10 | சந் | செவ் | புத | குரு | சுக் | சனி | சூரி |
| 10–11 | சனி | சூரி | சந் | செவ் | புதன் | குரு | சுக் |
| 11–12 | குரு | சுக் | சனி | சூரி | சந் | செவ் | புதன் |
| 12–1 | செவ் | புதன் | குரு | சுக் | சனி | சூரி | சந் |
| 1–2 | சூரிய | சந் | செவ் | புதன் | குரு | சுக் | சனி |
| 2–3 | சுக் | சனி | சூரி | சந் | செவ் | புதன் | குரு |
| 3–4 | புதன் | குரு | சுக் | சனி | சூரி | சந் | செவ் |
| 4–5 | சந் | செவ் | புதன் | குரு | சுக் | சனி | சூரி |
| 5–6 | சனி | சூரி | சந் | செவ் | புதன் | குரு | சுக் |

**(இரவு கால அட்டவணை)**

| மணி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| 6–7 | குரு | சுக் | சனி | சூரி | சந் | செவ் | புதன் |
| 7–8 | செவ் | புதன் | குரு | சுக் | சனி | சூரி | சந் |
| 8–9 | சூரி | சந் | செவ் | புதன் | குரு | சுக் | சனி |
| 9–10 | சுக் | சனி | சூரி | சந் | செவ் | புதன் | குரு |
| 10–11 | புதன் | குரு | சுக் | சனி | சூரி | சந் | செவ் |
| 11–12 | சந் | செவ் | புதன் | குரு | சுக் | சனி | சூரி |
| 12–1 | சனி | சூரி | சந் | செவ் | புதன் | குரு | சுக் |
| 1–2 | குரு | சுக் | சனி | சூரி | சந் | செவ் | புதன் |
| 2–3 | செவ் | புதன் | குரு | சுக் | சனி | சூரி | சந் |
| 3–4 | சூரி | சந் | செவ் | புதன் | குரு | சுக் | சனி |
| 4–5 | சுக் | சனி | சூரி | சந் | செவ் | புதன் | குரு |
| 5–6 | புதன் | குரு | சுக் | சனி | சூரி | சந் | செவ் |

**1. சூரிய ஓரை :**

வேலைக்கு முயற்சி செய்ய, வேலையைப் பற்றிக் கவனிக்க, அதிகாரிகளைச் சந்திக்க, பெரியோர்கள் ஆதரவு பெற, மருந்துண்ண, சொத்து எழுதிவைக்க, அரசு உதவி பெற, உதவி ஏற்க உகந்தது.

**2. சந்திர ஓரை :**

பிரயாணம் செய்ய, பாஸ் போர்ட் வாங்க, பெண் பார்க்க, வெள்ளி, முத்து ஆபரணங்கள் அணிய, பசு, கன்று வாங்க, வியாபாரம் செய்ய சங்கீதம் போன்ற கலைகள் பயில உகந்தது. கல்வி புகட்ட நலம். புது வீடு கட்டலாகாது.

**3. செவ்வாய் ஓரை:**

மருந்துண்ண, அடுப்புகட்ட, அணைகட்ட, போர்க்கருவிகள், கூரிய ஆயுதங்கள் தயாரிக்க, போர் தொடங்க, கருத்தை மாற்றிப் பேச, பூமி சம்பந்தமான விவகாரங்களைப் பேச நலம். சூளைக்கு தீ மூட்ட நெருப்பு வேலை. இன்னும் மற்ற அழிவு வேலைகளுக்கு உகந்தது. கடன் தீர்க்க உகந்தது. மௌனம் நல்லது. சுபம் நீக்கவும்.

**4. புதன் ஓரை:**

கடித வேலை செய்ய, தந்தி அனுப்ப, விலைபேச, மனுப்போட, புதிய கணக்கு ஆரம்பிக்க. ஜோதிடம், விஞ்ஞானம் ஆராய்ச்சியில் ஈடுபட, பரீட்சை எழுத, போட்டிப் பந்தயங்களில் பங்கு கொள்ள உகந்தது. தரகு வேலைக்குச் சிறந்தது, பெண் பார்க்க, பேச ஆகாது, நிலம் வாங்கலாகாது.

**5. குரு ஓரை:**

பெரிய மனிதர்களைச் சந்திக்க, பொருளுதவி பெற, முதலீடு வைக்க, சேமிப்பு நிதியில் பணம்வைக்க, புத்தாடை உடுத்த, விதை விதைக்க, நாற்றுநட, எல்லா சுபகாரியங்களும் துவக்க உகந்தது. குரு உபதேசம் பெறச் சிறந்தது.

**6. சுக்கிரன் ஓரை:**

பெண்களை நேசிக்க, பெண்களை சந்திக்க, ஆபரணம் அணிய, வாகனம், பசு, கன்று வாங்க, கலை பயில, விருந்துண்ண, விவாகம் பேச, வீரிய விருத்திக்கு மருந்துண்ண, பொருள் சேர்க்க, கடன் வசூல் செய்ய, சுப காரியங்களில் ஈடுபட, அரங்கேற்றத்திற்கும் உகந்தவை.

**7. சனி ஓரை:**

நிலம் உழ, எருப்போட, இரும்பு சாமான்கள் வாங்க, மின்சாரத்தில் இயங்கும் இயந்திரத் தொழில் ஆரம்பிக்க, காடு குத்தகை எடுக்க உகந்தது. சுப காரியங்களை நீக்கவும், பிரயாணம் ஆகாது.

**தனிஷ்டா பஞ்சமி:**

தனிஷ்டா பஞ்சமி என்பது மரணத்திற்கு ஆகாத நாட்கள் ஆகும். அவிட்ட நட்சத்திரத்திற்கு வடமொழியில் தனிஷ்டா என்று பெயர். பஞ்சமி என்றால் ஐந்து என்று பொருள். அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களில் ஒருவர் மரணமடைந்தால் அந்த வீட்டிற்கு ஆறுமாதங்கள் தோஷம் உண்டு. எனவே ஆறுமாதங்கள் அந்த வீட்டை உபயோகப்படுத்தாமல் மூடிவைக்க வேண்டும்.

ரோகிணியில் மரணம் நிகழ்ந்தால் நான்கு மாதத்திற்கு அந்த வீட்டை மூடிவைக்க வேண்டும்.

கார்த்திகை, உத்திரம் நட்சத்திரங்களில் மரணம் நிகழ்ந்தால் மூன்று மாதத்திற்கு அந்த வீட்டை மூடிவைக்க வேண்டும்.

மிருகசீரிஷம், சித்திரை, புனர்பூசம், விசாகம், உத்திராடம் ஆகிய நட்சத்திரங்களில் மரணம் நிகழ்ந்தால் இரண்டு மாதத்திற்கு அந்த வீட்டை மூடிவைக்க வேண்டும்.

இருப்பினும் மரணம் நிகழ்ந்த அந்த வீட்டிற்குள்ளேயே கதவுடன் கூடிய சிறிய மாடம் அமைத்து, அதற்கு வெண்கல கிண்ணம்வைத்து, நல்லெண்ணெய் விட்டு விளக்கு போட்டு தினமும் காலையில் கற்பூர ஆரத்தி செய்து வர வேண்டும். மாடத்திற்குள் இருக்கும் அந்த நல்லெண்ணெய் விளக்கு இரவு, பகல் எந்நேரமும் எரிந்து கொண்டே இருக்க வேண்டும். இவ்வாறு மரணம் நிகழ்ந்த நட்சத்திரத்திற்கு தக்கவாறு அந்த குறிப்பிட்ட மாதங்கள் கால அளவிற்கு செய்துவந்தால் தோஷம் பரிகாரம் ஆகிறது.

**இராகு பணி சக்கரம் :**

விவசாயிகள் விதை, விதைப்பதற்காக நல்ல நாள் தேர்ந்தெடுக்க இராகு பணி சக்கரம் உதவுகிறது. விதை விதைக்கும் நாளன்று, இராகு நிற்கும் நட்சத்திரம் முதல் அன்றைய நட்சத்திரம் வரை எண்ணினால், 1, 2, 3, 4 என வந்தால் வால் நாள் எனப்படும். இந்த நாட்களில் விதை விதைத்தால் பயிர் சாவியாகும். 5, 6, 7, 9, 10, 11, 13, 14, 15, 17, 18, 19 என வந்தால் வயிற்று நாள் எனப்படும். இந்த நாட்களில் விதை விதைத்தால் பயிர் விளைச்சல் நன்கு சிறப்பாக இருக்கும். 8, 12, 16, 20, 24 என வந்தால், வெளி நாள் எனப்படும். இந்த நாட்களில் விதை விதைத்தால் பயிருக்கு பருந்து, கிளி, புழு, பூச்சி, மிருகம் போன்றவைகளால் கேடு விளையும். 21, 22, 23 என வந்தால் கழுத்து நாள் எனப்படும். இந்த நாட்களில் விதை விதைத்தால் பயிர் வெள்ளத்தினால் அழியும். 25, 26, 27 என வந்தால் தலை நாள் எனப்படும். இந்த நாட்களில் விதை விதைத்தால் பயிர் தீயினால் அழியும்.

**கலப்பை சக்கரம்:**

விவசாயிகள் விதை விதைக்கவும், நிலம் உழுவதற்காகவும், விவசாய காரியங்கள் துவங்கவும் நல்ல நாள் தேர்ந்தெடுக்க கலப்பை சக்கரம் உதவுகிறது. விவசாய செயல்கள் துவங்கும் நாளன்று சூரியன் நிற்கும் நட்சத்திரம் முதல் அன்றைய வரை எண்ணினால் 8,9,10,12,13,14,16,17,18,20,22 ஆக வந்தால் சிறப்பான பலன் தரும்.

**வருஷ பணி சக்கரம்:**

சந்திரனின் சஞ்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு மழை பெய்யக்கூடிய நாள் காண்பதற்கு வருஷ பணி சக்கரம் உதவுகிறது. சந்திரன் ஜல நாடி என்று குறிப்பிட்டிருக்கும் நீர் நாடிக்கு வரும் போது மூன்றுக்கு மேற்பட்ட கிரகங்கள் நீர் நாடி நட்சத்திரங்களில் நின்றிருந்தால், அது நன்றாக மழை பெய்வதற்கான அறிகுறியாகும். இதே போன்ற கிரக நிலைகள் அமிர்த நாடியில் இருப்பினும் நன்றாக மழை பெய்வதற்கான அறிகுறியாகும். வாயு நாடி என்று கூறப்படும் காற்று நாடியில் நின்றால் மழையினை காற்று அடித்துச் சென்றுவிடும். தகன நாடி என்று கூறப்படும் நெருப்பு நாடியில் இருந்தால் வெப்பம் அதிகமாக இருக்கும். நிர்ஜலநாடி என்று கூறப்படும் மேக நாடியில் நின்றால் மேக மூட்டம் இருக்கும். சவும்ய நாடி என்று கூறப்படும் ஆரோக்ய நாடியில் நின்றால் போதுமான அளவு மழை பொழியும். வருஷ பணி சக்கரத்தை சப்த நாடி சக்கரம் என்றும் அழைக்கப்படும்.

**வருஷப்பணி சக்கரம்**

| ஊர்த்துவம் | அந்தரம் | பூமி | விதலம் | சுதலம் | தராதலம் | ரஸாதலம் |
|---|---|---|---|---|---|---|
| **சனி, ஆரோக்ய நாடி** | **சூரியன் வாயு நாடி** | **குஜன் தகன நாடி** | **புதன் சவும்ய நாடி** | **சுக்கிரன் நிர்ஜல நாடி** | **குரு ஜல நாடி** | **சந்திரன் அமிர்த நாடி** |
| கிருத்திகை<br>விசாகம்<br>அனுஷம்<br>பரணி<br>அதிக<br>காற்று | ரோகிணி<br>சுவாதி<br>கேட்டை<br>அசுவனி<br>மழை<br>காற்று | மிருகசீரிஷ<br>சித்திரை<br>மூலம்<br>ரேவதி<br>ஜலக்<br>குறைவு | திருவாதி<br>அஸ்தம்<br>பூராடம்<br>உத்திரட்<br>சொல்ப<br>மழை | புனர்பூசம்<br>உத்திரம்<br>உத்ராடம்<br>பூரட்டாதி<br>கண்ட<br>மழை | பூசம்<br>பூரம்<br>அபஜித்து<br>சதயம்<br>நல்ல<br>மழை | ஆயில்யம்<br>மகம்<br>திருஓணம்<br>அவிட்டம்<br>அதிக<br>மழை |

இராகு பணி சக்கரம், கலப்பை சக்கரம், வருஷ பணி சக்கரம் ஆகியவை விவசாயத்திற்கு மிகவும் உதவக் கூடியதாகும். தற்கால பயன்பாட்டில் இல்லை.

**கரிநாள் – தனிய நாள்:**

'கரி' என்றால் நஞ்சு என்று பொருள். கரிநாள் என்று பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் சுபகாரியம் தவிர்க்க வேண்டும். தனிய நாளும் அசுபம் தரும். எனவே தவிர்க்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் வரக்கூடிய கரிநாள், மற்றும் தனிய நாள் விபரம் கீழ்கண்ட அட்டவணையில் காண்க.

| **மாதங்கள்** | **கரி நாள்** | **தனிய நாள்** |
|---|---|---|
| சித்திரை | 6 – 15 | 3-20 |
| வைகாசி | 7 – 16 – 27 | 9-22 |
| ஆனி | 1 – 6 | 8-22 |
| ஆடி | 2 – 10 – 20 | 7-20 |
| ஆவணி | 2 – 09 – 28 | 7-18 |
| புரட்டாசி | 16 – 29 | 9-26 |
| ஐப்பசி | 6 – 20 | 8-10 |
| கார்த்திகை | 1 – 10 – 17 | 8-14 |
| மார்கழி | 6 – 9 – 11 | 8-26 |
| தை | 1-2-3-11-17 | 8-15 |
| மாசி | 15-16-17 | 15-24 |
| பங்குனி | 6-15-19 | 18-24 |

**2. ஆண்டுகள்**

ஆண்டுகள் பொதுவாக ஐந்து வகையாக பிரிக்கப்படுகின்றன. அவையாவன 1) சௌரமான வருடம் 2) சாவனமான வருடம் 3) சந்திரமான வருடம் 4) நட்சத்திரமான வருடம் 5) பிரகஸ்பத்யமான வருடம் ஆகும்.

சூரியன் பன்னிரு இராசிகளைக் கொண்ட இராசி மண்டலத்தை சுற்றிவர சுமார் 365¼ நாட்கள் எடுத்துக் கொள்கிறது. இதன்படி சுமார் 365¼ நாட்களை கொண்டது சௌரமான வருடம் ஆகும்.

சூரியன் ஒரு நாள் உதயமானது முதல், அடுத்த நாள் உதயமாவது வரை உள்ள இடைப்பட்ட காலம் 'ஒரு நாள்' ஆகும். இப்படி 360 நாட்களை கொண்டது ஒரு சாவனமான வருடம் ஆகும்.

சூரியனும் சந்திரனும் இணைவு பெறும் காலமான அமாவாசை முதல் அடுத்த அமாவாசை வரை உள்ள இடைப்பட்ட காலம் சுமாராக 29 ½ நாட்கள் ஆகும். இதற்கு சந்திரமான மாதம் என்று பெயர். இவ்வாறு பன்னிரெண்டு சந்திரமான மாதங்களைக் கொண்டது ஒரு சந்திரமான வருடம் ஆகும்.

சந்திரன் இருபத்தி ஏழு நட்சத்திரங்களையும் கடக்க 27 நாட்களை எடுத்துக் கொள்கிறது. இதை நட்சத்திர மாதம் என்பர். இவ்வாறு பன்னிரெண்டு நட்சத்திர மாதங்களைக் கொண்டது நட்சத்திர வருடம் ஆகும்.

குரு ஒரு இராசியில் சஞ்சாரம் செய்யும் காலம் சுமார் 361 நாட்கள் ஆகும். இந்த 361 நாட்களை கொண்ட வருடம் பிரகஸ்பத்யமான வருடம் ஆகும்.

பெரும்பாலும் ஆண்டுகளை குறிப்பிட எண்களே குறிக்கப்படுகின்றன. ஆனால் தமிழ் ஆண்டுகள் அறுபதும் பெயர்களால் அழைக்கப்படுகின்றன. வட இந்தியாவில் சில பகுதிகளிலும் இதே பெயருள்ள ஆண்டுகள் குறிப்பிடப்படுகின்றன.

**தமிழ் ஆண்டிற்கு இணையான ஆங்கில ஆண்டு**

| வ.எண் | ஆண்டின் பெயர் | ஆங்கில ஆண்டு | அபிமான தேவதை |
|---|---|---|---|
| 1. | பிரபவ | 1987 – 1988 | பிரம்மா |
| 2. | விபவ | 1988 – 89 | விஷ்ணு |
| 3. | சுக்கில | 1989 – 90 | மகேசன் |
| 4. | பிரமோதூத | 1990 – 91 | கணேசன் |
| 5. | பிரஜோத்பத்தி | 1991 – 92 | கணபன் |
| 6. | ஆங்கீரஸ | 1992 – 93 | ஷடானனன் |
| 7. | ஸ்ரீ முக | 1993 – 94 | வள்ளி |
| 8. | பவ | 1994 – 95 | கௌரி |
| 9. | யுவ | 1995 – 96 | ப்ராம்ஹி |
| 10. | தாது | 1996 – 97 | மகேஸ்வரி |
| 11. | ஈஸ்வர | 1997 – 98 | கௌமாரி |
| 12. | வெகுதான்ய | 1998 – 99 | வைஷ்ணவி |
| 13. | பிரமாதி | 1999 – 2000 | வாராஹி |
| 14. | விக்ரம | 2000 – 01 | இந்திராணி |
| 15. | விஷீ | 2001 –02 | சாமுண்டி |
| 16. | சித்ரபானு | 2002 – 03 | அகோரன் |
| 17. | சுபானு | 2003 – 04 | பிராஜன் |
| 18. | தாரண | 2004 – 05 | படரன் |
| 19. | பார்த்திப | 2005 – 06 | பதங்கன் |
| 20. | விய | 2006 – 07 | ஸ்வர்ணரன் |
| 21. | சர்வஜித் | 2007 – 08 | ஜ்யோதிஷ்மான் |
| 22. | சர்வதாரி | 2008 – 09 | விபாஸன் |
| 23. | விரோதி | 2009–10 | கச்யபன் |
| 24. | விக்ருதி | | ரவி |

| | | | |
|---|---|---|---|
| 25. | கர | 2010 – 11 | சூரியன் |
| 26. | நந்தன | 2011 – 12 | பானு |
| 27. | விஜய | 2012–13 | ககன் |
| 28. | ஜய | 2013 – 14 | பூஷா |
| 29. | மன்மத | 2014 – 15 | ஹிரண்யகசிபன் |
| 30. | துன்முகி | 2015 – 16 | மரீசி |
| 31. | ஹேவிளம்பி | 2016 – 17 | ஆதித்யன் |
| 32. | விளம்பி | 2017 – 18 | ஸவிதா |
| 33. | விகாரி | 2018 – 19 | அருக்கன் |
| 34. | சார்வரி | 2019 – 20 | பாஸ்கரன் |
| 35. | பிலவ | 2020 – 21 | அக்கினி |
| 36. | சுபகிருது | 2021 – 22 | ஜாதவேதன் |
| 37. | சோபகிருது | 2022 – 23 | ஸஹோஜஸன் |
| 38. | குரோதி | 2023 – 24 | அஜிராபிரபு |
| 39. | விஸ்வாவசு | 2024 – 25 | வைஸ்வாநரன் |
| 40. | பராபவ | 2025 – 26 | நர்யாபஸன் |
| 41. | பிலவங்க | 2026 – 27 | பக்திராதஸன் |
| 42. | கீலக | 2027 – 28 | விஸர்பி |
| 43. | சௌம்ய | 2028 – 29 | மத்யஸ்யமூர்த்தி |
| 44. | சாதாரண | 2029 – 30 | கூர்மமூர்த்தி |
| 45. | விரோதிகிருது | 2030 – 31 | வராஹமூர்த்தி |
| 46. | பரிதாபி | 2032 – 33 | நரசிம்மமூர்த்தி |
| 47. | பிரமாதீச | 2033–34 | வாமனமூர்த்தி |
| 48. | ஆனந்த | 2034–35 | ஸ்ரீராமன் |
| 49. | ராக்ஷச | 2035–36 | பரசுராமன் |
| 50. | நள | 2036–37 | பலராமன் |
| 51. | பிங்கள | 2037–38 | கிருஷ்ணன் |
| 52. | காளயுக்தி | 2038–39 | கல்கி |
| 53. | சித்தார்த்தி | 2040–41 | புத்தர் |
| 54. | ரௌத்ரி | 2041–42 | துர்க்கை |
| 55. | துன்மதி | 2042–43 | யாதுதானன் |
| 56. | துந்துபி | 2043–44 | பைரவர் |
| 57. | ருத்ரோத்காரி | 2044–45 | ஹனுமான் |
| 58. | ரக்தாக்ஷி | 2045–46 | சரஸ்வதி |
| 59. | குரோதன | 2046–47 | தாட்சாயினி |
| 60. | அக்ஷய |  | லக்ஷ்மி |

1) பிரபவ ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: எல்லாப் பொருள்களையும் சம்பாதித்துச் சேர்ப்பதில் ஆசை கொண்டவர். குழந்தை பாக்கியமுடையவர், அறிவாளி, நீண்ட ஆயுள் கொண்டவர். எல்லா போகங்களையும் துய்ப்பவர்.

2) விபவ ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: விளைந்து வரும் தானிய உணவு உட்கொள்பவர். அழகிய தோற்றம் உள்ளவர். வலிமை உள்ளவர், ஆற்றல் மிக்கவர், கலைகளில் ஈடுபாடு கொள்பவர். குலத்தின் தலைவராயும், நற்குணம் மிக்கவராயும், அறிவாளியாயும் இருப்பார்.

3) சுக்கில ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: மகிழ்ச்சியும், தாராள மனமும், நல் மனைவி மக்களும், நிறைந்த செல்வமும், எல்லா பாக்கியமும், சிறந்த கல்வியும், பணிவும் வாய்க்கப் பெற்றவர்.

4) பிரமோதூத ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: தானம் செய்பவர், மகிழ்ச்சி மிக்கவர், அழகன், உண்மை பேசுபவர், நற்குணங்கள், செயல்திறன் மற்றும் அகம்பாவமும் மிக்கவர்.

5) பிரஜோத்பத்தி ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: தானத்தில் ஈடுபாடு உடையவர், தயாள குணம் மிக்கவர் குலதருமம் காப்பவர், ஒழுக்கமுடையவர், அடக்கம் மிக்கவர், தெய்வம் மற்றும் குருவை வணங்குபவர்.

6) ஆங்கிரஸஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: பிறர் மனதை ஈர்க்கும் தோற்றம் உடையவர், சுகவாசி, போகங்களைத் துய்ப்பவர், இனிமையாக உரையாடுபவர், மிகுந்த மக்கட் செல்வம் பெற்றவர், அறிவாற்றல் மற்றும் திறமைகளை மறைத்து வைப்பவர், நீண்ட ஆயுள் உடையவர்.

7) ஸ்ரீமுக ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: செல்வந்தர், புகழ்மிக்கவர், சாஸ்திரங்கள் அறிந்தவர், நண்பர்கள் மிக்கவர், அறிவாளி, வலிமை மிக்கவர், கொடையாளி.

8) பவ ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: புகழ் பெற்றவர், நல்மனமுடையவர், நற்குணங்கள்மிக்கவர், தைரியமுள்ளவர், பணிவுடையவர், மகிழ்ச்சி மிக்கவர், பலருக்கு விரும்பத்தகாதவனும் ஆவார்.

9) யுவ ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: தூய்மையான உடல், நற்குணங்கள், அடக்கம், அமைதி தானம் செய்வதில் விருப்பு, சிறந்த அறிவு நீண்ட ஆயுள், மகிழ்ச்சி முதலியவற்றுடன் கூடியவனாவார்.

10) தாது ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: எல்லோராலும் கொண்டாடப்படுபவர், கௌரவம் உடையவர், அழகாக இருப்பவர், குருபக்தி உடையவர், சிற்பி, நற்குணங்கள் உடையவர்.

11) ஈஸ்வர ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: கோபம் உடையவர், துக்கத்தின் உருவம், நற்குணங்கள் நிறைந்தவர், புகழ் மிக்கவர், கலைகளில் திறமையும் நல்ல தன்மைகளையும் உடையவர்.

12) வெகுதான்ய ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: வியாபாரத்தில் திறமையுடையவர், அரசர்களால் மதிக்கப்படுபவர், தானம் செய்வதில் ஈடுபாடுடையவர், சாஸ்திரங்களை அறிந்தவர், தானியங்கள் மற்றும் செல்வத்தைச் சேர்ப்பவர்.

13) பிரமாதி ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: எல்லா பாக்கியங்களும் நிறைந்தவன், சாஸ்திரங்களில் ஈடுபாடு உள்ளவர், பகைவரை அழிப்பவர், அரசனுக்கு மந்திரியாவார், செய் நன்றி மறவாதவர்.

14) விக்ரம ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: கொடுமையான செயல்களில் அதிக ஆர்வமுடையவர், பகைவர்களின் சேனையைத் தன் வயப்படுத்துபவர், சாமர்த்தியசாலி,சூரன், தீரன், கொடையாளி, பகைவரை வெல்பவர்.

15) விஷு ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: புகழ் பெற்றவர், மற்றவர்களால் நிந்திக்கப்படுபவர், பிறர் காரியங்களைச் செய்பவர், பலரைக் காப்பவர், மந்த புத்தியும், பேராசையும் , சோம்பேறித்தனமும் உடையவர்.

16) சித்ரபானு ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: பல நிறங்களுடன் கூடிய ஆடை மற்றும் மலர்களை அணிவதில் ஈடுபாடு கொண்டவர், பலவித மனோபாவம் உடையவர், நற்குணங்கள் மிக்கவர், கலைகளில் ஈடுபாடு கொண்டவர்.

17) சுபானு ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: சுருட்டையான கேசம் உள்ளவர், அணுகுவதற்கு எளியவர், அழகியமேனி, பகைவர்களை கொல்பவர், சிறந்த அறிவாளி, பணிவுள்ளவர், தூய மேனியுடையவர், நல்ல பெயரும், புகழும் மிக்கவர்.

18) தாரண ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: அயோக்கியன், சூரன், சஞ்சல புத்தியுடையவர், கலைகளைக் கற்றுணர்ந்தவர், உறுதி மிக்கவர், இகழத்தக்க செயல்களை புரிபவர் செல்வந்தர் ஆவார்.

19) பார்த்திப ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: தன் செயல்களைச் செய்பவர், அரச தர்மம் அறிந்தவர், கலைகளில் திறமை மிக்கவர், சிறப்பாக வாழ்பவர், அரச குலத் தோன்றலும் ஆவார்.

20) விய ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: சுகமற்றவர், துன்பங்களையே துய்ப்பவர், பயந்த குணமுடையவர், கடன் வாங்குவதே முக்கிய செயலாக கொண்டவர், நிலையற்ற மனம் உள்ளவர், பெரிய செலாவாளி ஆவார்.

21) சர்வஜித் ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: அரசனின் கௌரவம் காப்பவர், விழாக்களைக் கொண்டாடுபவர், மாசற்றவர், பருத்த உடம்பையுடையவர், மேனியழகு மிக்கவர், எப்பொழுதும் பகைவரை வெல்லும் முயற்சியில் ஈடுபட்டவர்.

22) சர்வதாரி ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: செல்வம், ஆள் அடிமைமிக்கவர், எல்லா யோகங்களையும் துய்ப்பவர், அழகிய மேனி கொண்டவர், இனிமையான உணவை உட்கொள்பவர், தைரியமும் நற்குணங்களும் மிக்கவர் மற்றும் கொடியவனும் ஆவார்.

23) விரோதி ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: ஆசையுடையவர், தேசாந்திரங்களில் சஞ்சரிப்பவர், குடும்ப சுகமாற்றவர், அதிக அயோக்கியத்தனமுடையவர், மக்களுடன் ஒத்துச் செல்லும் மனநிலையுடையவர், சொந்த புத்தியற்றவர்.

24) விக்ருதி ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: செல்வ மற்றவர், பயங்கரத்தன்மை கொண்டவர், நீண்ட கணுக்கால்களை உடையவர், அதிக ஆர்வம் கொண்டவர், நல்ல புத்தி அற்றவன், பகைவர்களை உடையவர் ஆவார்.

25) கர ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: காமம் மிக்கவர், அழுக்கடைந்த மேனி, கொடூர வார்த்தை மற்றும் அர்த்தமற்ற பேச்சுக்கள் உடையவர், வெட்கங்கெட்டவர், கட்டுப்பாடற்றவர், அதிக உயரமுடையவர்.

26) நந்தன ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: குளங்கள், குட்டைகள், கிணறுகள், வீடுகள் இவைகளைக் கட்டுபவர், அன்னதானப் பிரியர், மாசற்றவர், மனைவி மக்களால் இன்பம் துய்ப்பவர்.

27) விஜய ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: போர் புரிபவர், தைரியசாலி, நற்குணங்கள் மிக்கவர், அரசரால் மதிக்கப்படுபவர், சிறந்த பேச்சாளி, சிறந்த கொடையாளி, இரக்கமுடையவர், பகைவனை வெல்பவனுமாவார்.

28) ஜய ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: பெரியவர்கள் பிரசங்கம் செய்யும் பொழுது வருந்துபவர், மதிக்கத் தக்கவர், வள்ளல், பகைவரின் கர்வத்தை ஒடுக்குபவர், காமம் மிகுந்தவர், மன வலிமை உடையவர்.

29) மன்மத ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: சிறந்த அணிகலன்களை அணிந்தவர், பெண்களுடன் கேளிக்கை புரிபவர், இனிய சொல்வன்மை மிக்கவர், சிறந்த கலைஞர், நாட்டியம், பாட்டு இவைகளில் ஈடுபாடு உள்ளவர், நல்ல உணவில் நாட்டம் உள்ளவர்.

30) துன்முகி ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: கொடூரமான மனம் உள்ளவர், அயோக்கியர், இகழத் தக்க புத்தியுள்ளவர், பேராசைக்காரர், கோணலான முகம் கை, கால்கள் உள்ளவர், பாவச் செயல்களில் ஈடுபாடு உள்ளவர், கெடுதலான செயல்களையே செய்பவர்.

31) ஹேவிளம்பி ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: ஏராளமான குதிரைகள், பொன், ஆடைகள், தானியம், இரத்தினங்கள் இவைகள் வாய்க்கப் பெற்றவர், மனைவி மக்களால் நன்மை பெறுபவர் அனைத்தையும் சேமித்து வைப்பவர் ஆவார்.

32) விளம்பி ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: அயோக்கியர், பேராசையுள்ளவர், அல்பபுத்தியுள்ளவர். சோம்பேறி, குளிர்ச்சி மேலிட்டவர், பலமற்றவர் துவங்கிய செயல்குறித்துப் புலம்புபவராய் இருப்பவர்.

33) விகாரி ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: தீயச்செயல்களில் ஈடுபாடு கொண்டவர், சகல கலைகளைக் கற்றுணர்ந்தவர். ஏமாற்றுவதில் தலைசிறந்தவர், சஞ்சலபுத்தி உடையவர், அயோக்கியர், அதிகமாகப் பேசுபவர் நண்பர்களிடம் விபரீதமான எண்ணம் கொண்டவனாவார்.

34) சார்வரி ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: சிறந்த வணிகர், விளையாட்டில் ஈடுபாடு உள்ளவர், நண்பர்களுக்கு உதவாதவர், பல விதமான கலைகளைக் கற்பதில் ஈடுபாடு உள்ளவர்.

35) பிலவ ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: காமம் மிக்கவர், பெரிய செல்வந்தர், அடிமைத் தொழிலில் நாட்டம், மனைவியின் எண்ணப்படி நடப்பவர், தன்மனதை வெளிக்காட்டாதவர், சஞ்சல புத்தியுள்ளவரும் ஆவார்.

36) சுபகிருது ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: எல்லா பலன்களும், கல்வியும் அடக்கமும் மிக்கவர்கள், புண்ணியகர்மாக்களாலே நீண்ட ஆயுள் உடையவர், மழலைச் செல்வம் மற்றும் எல்லாச் செல்வமும் நிரம்பப் பெற்றவர்.

37) சோபகிருது ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: எல்லா விதத்திலும் மேன்மை பெற்றவர், நற்குணங்கள் மிக்கவர், இரக்ககுணம் மிக்கவர், நற்செயல்கள் புரிபவர், எல்லாவற்றிலும் வெற்றி பெறுபவர், அடக்கம் உடையவர், நற்செயல்களைச் செய்யும் சாமார்த்தியம் உள்ளவர்.

38) குரோதி ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: கொடூரமான பார்வையும், கொடுமையான தன்மையும், பெண்களுக்கு விருப்பமானவராயும், கர்வம் மிக்கவராகவும், பிறர் செயல்களை முடிவடையும் தருணத்தில் தடுப்பவராகவும், கோபமுடையவராயும் இருப்பார்.

39) விசுவாவசு ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: நல்ல புதல்வன் மற்றும் மனைவியைப் பெற்றவர், கொடையாளி, நற்குணம் மிக்கவர், நல்லொழுக்கத்தில் நிலைத்தவர், தைரியசாலி விருப்பமான உணவை உட்கொள்பவர் மற்றும் எல்லா குணங்களாலும் மேம்பட்டவர் ஆவார்.

40) பாராபவ ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: செல்வம் மற்றும் தானியத்தை சேர்க்கவியலாதவர். மிகவும் கொடுமையான வார்த்தைகளைப் பேசுபவர், சிறிது ஆசாரமும், அயோக்கியத்தனமும் நிறைந்தவர்.

41) பிலவங்க ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: சஞ்சலபுத்தி, நற்செயல்களில் ஈடுபாடு இல்லாதவர், அயோக்கியர், ஒழுக்கமற்றவர் ஆவார்.

42) கீலக ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: நடுத்தரமான அழகு, இனிமையான பேச்சு, இரக்க குணம், பருத்த கால்கள் மற்றும் அழகிய தலையுடன் கூடியவர், பகைவர்களை ஒடுக்குபவராயும் இருப்பார், அடிக்கடி நீர் அருந்தும் வழக்கம் உடையவராகவும் இருப்பார்.

43) சௌமிய ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: அறிவாளி, செல்வந்தர், போகங்களைத் துய்ப்பவர் விருந்தாளிகளிடத்தும், தேவதைகளிடத்தும் அன்பு கொண்டவர், தூய்மையானவர், சத்துவ குணம் கொண்டவர், இளைத்த மேனி உடையவர்.

44) சாதாரண ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: தேச சஞ்சாரி, ஆசை மிகுந்தவர், சித்திரம் எழுதுவதில் ஈடுபாடு கொண்டவர், மிகுந்த கோபம், பகுத்தறிவு கொண்டவர், தூய்மையானவர், போகங்களில் அதிக ஈடுபாடற்றவர்.

45) விரோதிகிருது ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: ஈஸ்வர பூஜை செய்பவர், மிகுந்த கோபம் கொண்டவன், பிறருக்கு கெடுதல் செய்பவர், தந்தை சொல் கேளாதவர்.

46) பரிதாபி ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: கல்வியறிவு மிக்கவர், கலைகளில் சிறந்த ஈடுபாடு கொண்டவர், சிறந்த அறிவாளி, மன்னர்களால் மதிக்கப்படுபவர், வாணிபத்தில் பெரும் செல்வம் மற்றும் புகழ் ஈட்டுபவர் ஆவார்.

47) பிராமாதீச ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: தீயோர்களிடம் மற்றும் தீயச் செயல்களில் ஈடுபாடு உள்ளவர், கலகம் செய்பவன், கெட்ட குணங்கள் மிக்கவர், குடும்பத்தில் பற்று உள்ளவர். இரக்கப்படத்தக்கவர், சிற்றறிவாளர், இகழத்தக்க செயல்களைப் புரிபவர், பிழைகள் மலிந்தவர்.

48) ஆனந்த ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: அதிகமான தானம் செய்பவர், சாதுர்யமுடையவர், சாமர்த்தியம் மிக்கவர், நற்குணம் மிக்க பிள்ளைகளால் மகிழ்பவர், மேதாவி, செய்நன்றி மற்றும் அடக்கம் உடையவர்.

49) ராக்ஷஸஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: கொடூரமான செயல்கள் செய்பவர், கலகங்கள் செய்பவர், நல்ல செயல்களைச் செய்யாதவர், இரக்கமற்றவன் பொய் பேசுபவர், திருடும் எண்ணம் கொண்டவர்.

50) நள ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: சிறந்த அறிவாளி, நீர், பயிர், செல்வம், வணிகர் இவர்களை அனுசரித்து நடப்பவர், பிறரைக் காப்பவர், சஞ்சல புத்தியுள்ளவர், குறைவான செல்வம் உடையவர் ஆவார்.

51) பிங்கள ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: பொன்னிறமான கண்கள், இகழத்தக்க செயல்கள் புரிபவர், நிலையற்ற புகழ் பெற்றவர், கொடையாளி, மேன்மை பெற்றவர், பிறருக்கு தீங்கு செய்பவர், கொடூரமான சொற்களை உடையவர் ஆவார்.

52) காளயுக்தி ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: அதிகமாகப் பேசுபவர், அன்பான தன்மையுடையவர், கொண்டாடத்தக்க அறிவாளி, தெய்வ பலமற்றவர், புலவர்களைப் பற்றி பேசுபவர், கருத்த மற்றும் இளைத்தமேனி உடையவர்.

53) சித்தார்த்தி ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: நல்மனம் படைத்தவர், உயிர்களிடத்து கருணை கொண்டவர், வாரி வழங்குபவர், போரில் வெற்றியால் புகழ் பெறுபவர், சுகவாசி, அரசனுக்கு மந்திரியாவார், வெகுமதியாக அதிக செல்வம் பெறுபவர் ஆவார்.

54) ரௌத்திரி ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: பிறருக்கு அச்சத்தை தோற்றுவிப்பவர், பசுக்களைக் காப்பவர், தெளிந்த மனம் கொண்டவர், சபல புத்தி உடையவர், அதிக துஷ்டத்தன்மை கொண்டவர், கெட்ட பெயரெடுத்தவர், மிகக் கொடியவருமாவார்.

55) துன்மதி ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: சொன்னசொற்காக்க முயல்பவர், அல்பத்தனம் நிறைந்தவர், காமம் மிகுந்தவர், தன் புத்தியை எப்பொழுதும் பிறரைக் கெடுப்பதிலேயே செலுத்துபவன்.

56) துந்துபி ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: எப்பொழுதும் மன்னர்கள் ஆதரவையும் மதிப்பையும் பெற்றவர், யானை, குதிரைகள், பூமி, பொன் முதலிய செல்வங்களுடன் கூடியவர், நாட்டியம், பாடல்களில் அதிக ஈடுபாடு கொண்டவர்.

57) ருத்ரோத்காரி ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை: சிவந்த கண்களையுடையவர், அதிக காமத்தின் வயப்பட்டவர், மெலிந்த உடலமைப்பை உடையவர் தன்மானம் மிக்கவர், மோசமான நகங்கள் உள்ளவர், ஆயுதத்தால் தாக்கப்பட்டு வேதனை அடைபவர் ஆவார்.

58) ரக்தாக்ஷி ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை : ஆசாரம் மற்றும் தர்மத்தில் அதிகமாக ஈடுபாடு உள்ளவர், மன்மதனை விஞ்சிய அழகு உடையவர், பிறரின் ஆதிக்கத்தை விரும்பாதவர், கண் நோய் உள்ளவர் ஆவார்.

**59)** குரோதன ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை : மற்றவர் செயலுக்கு தடை போடுபவன், தாமஸகுணம் உள்ளதால், பிறருக்கு பயங்கரமாக தோற்றமளிப்பவர், பிறர் மனதையும் புத்தியையும் கெடுப்பவர்.

**60)** அக்ஷய ஆண்டில் பிறந்தவர்களின் தன்மை : தேடிவைக்கின்ற பொருளைச் செலவிடுபவர், பிறர் செயல்களில் குற்றம் காண்பவர் நற்செயல்களில் அதிக ஈடுபாடற்றவர் ஆவார்.

## 3. அயனங்கள்

அயனம் என்றால் பயணம் என்று பொருளாகும். சூரியனின் சஞ்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு ஆண்டு இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது. அவை

1) உத்தராயனம்
2) தட்சிணாயனம் ஆகும்.

சூரியன் மகரம், கும்பம், மீனம், மேஷம், ரிஷபம், மிதுனம் ஆகிய ஆறு இராசிகளில் சஞ்சரிக்கும் காலமாகிய தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய ஆறு மாதங்கள் உத்தராயனம் என்று அழைக்கப்படுகிறது.

சூரியன் கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு ஆகிய ஆறு இராசிகளில் சஞ்சரிக்கும் காலமாகிய ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய ஆறு மாதங்கள் தட்சிணாயனம் என்று அழைக்கப்படுகிறது.

உத்தரம் என்றால் வடக்கு என்றும், தட்சிணம் என்றால் தெற்கு என்றும் பொருளாகும். சூரியன் உதயமாகி சற்று வடக்கு திசை சார்ந்து பிரயாணப்படுவது உத்தராயனம் ஆகும். அதாவது உத்தராயனத்தில் சூரியன் தென்கிழக்கில் உதயமாகி வடமேற்கில் அஸ்தமிப்பது போன்றும், தட்சிணாயனத்தில் வடகிழக்கில் உதயமாகி தென்மேற்கில் அஸ்தமிப்பது போன்றும் தோற்றமளிக்கும்.

உத்தராயன காலம் தேவர்களுக்கு பகல் பொழுது என்றும், தட்சிணாயன காலம் தேவர்களுக்கு இரவுக் காலம் என்றும் கூறப்படுகிறது. எனவே உத்தராயன காலம் எல்லா விதமான சுபகாரியங்களுக்கும் ஏற்றது என்று கூறப்படுகிறது.

1) உத்தராயனத்தின் தேவதை சந்திரன்.

உத்தராயனத்தில் பிறந்தவர்களின் தன்மை : மனத்தெளிவு மிக்கவர், மனைவி மக்களால் எல்லா சுகங்களையும் துய்ப்பவர், நீண்ட காலம் வாழ்பவர், தன்னைத் காப்பாற்றிக் கொள்ளும் திறமையுள்ளவர், மற்றவரையும் காக்கும் தன்மை கொண்டவர், தாராளமனம் உள்ளவர், பயந்த குணமுடையவர்.

உத்தராயனத்தில் செய்யத்தக்கவைகள்: தேவதைகளை பிரதிஷ்டை செய்தல், தோட்டம் அமைத்தல், குளம் வெட்டுதல், புதுமனை புகுவிழா, திருமணம் முதலியவை செய்யலாம்.

2) தட்சிணாயனத்தின் தேவதை – சூரியன்.

தட்சிணாயனத்தில் பிறந்தவர்களின் தன்மை: தகாத செயல்களைப் புரிந்து பெயர் பெறுவர். பயிர்த்தொழிலில் நாட்டம் உள்ளவர்கள். விலங்குகளிடத்து அன்பற்று கொடூரமாக நடந்து கொள்பவர்கள், மக்களால் பொறுக்க முடியாத அளவிற்கு அயோக்கியற்களாக இருப்பார்கள். பிறர் அறியாமல் மற்றவர்க்கு தீங்கு செய்பவர்கள்.

தட்சிணாயனத்தில் செய்யத்தக்கவைகள்: ஸப்தமாதர்கள், பைரவர், மகிஷாசுரமர்தினி, நரசிம்மமூர்த்தி, திரிவிக்கிரமமூர்த்தி முதலிய தேவதைகளை பிரதிஷ்டை செய்யலாம்.

## 4. ருதுக்கள்

ருது என்றால் பருவகாலம் என்று பொருள். இரண்டு மாதங்கள் ஒரு ருது ஆகும். எனவே ஒரு ஆண்டில் ருதுக்கள் ஆறு ஆகும். அவையாவன: 1. வசந்த ருது 2. கிரீஷ்ம ருது 3. வருஷ ருது 4. சரத் ருது 5. ஹேமந்த ருது 6. சிசிர ருது ஆகும்.

| | | |
|---|---|---|
| சித்திரை , வைகாசி மாதங்கள் | வசந்த ருதுவாகும் | இளவேனிற் காலம் |
| ஆனி , ஆடி மாதங்கள் | கிரீஷ்ம ருதுவாகும் | முதுவேனிற் காலம் |
| ஆவணி, புரட்டாசி மாதங்கள் | வருஷ ருதுவாகும் | கார் காலம் |
| ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் | சரத் ருதுவாகும் | கூதிர் காலம் |
| மார்கழி , தை மாதங்கள் | ஹேமந்த ருதுவாகும் | முன் பனி காலம் |
| மாசி, பங்குனி மாதங்கள் | சிசிர ருதுவாகும் | பின் பனி காலம் |

1) வசந்த ருதுவின் அபிமான தேவதை – காமதேவன்.
2) கிரீஷ்ம ருதுவின் அபிமான தேவதை – அக்னி.
3) வருஷ ருதுவின் அபிமான தேவதை – வருணன்
4) சரத் ருதுவின் அபிமான தேவதை – பார்வதி
5) ஹேமந்த ருதுவின் அபிமான தேவதை – ஆதிஷேஷன்
6) சிசிர ருதுவின் அபிமான தேவதை – ஈஸ்வரன்

## ருதுக்களில் பிறந்தவர்களின் பலன்கள்

வசந்த ருதுவில் பிறந்தவர்களுடைய தன்மை : மன்மதனைப் போல் அழகானவர், சிறந்த அறிவுடையவர், வெற்றி பெறுபவர், புகழ் பெற்றவர், சங்கீதம் மற்றும் கணிதத்தில் தேர்ச்சிமிக்கவர், வாள் மற்றும் வில் வித்தைகளை அறிந்தவர் ஆவார்.

கிரீஷ்ம ருதுவில் பிறந்தவர்களுடைய தன்மை : செல்வம் மிகுந்தவர், தானியக் குவியல் மிக்கவர், சிறந்த பேச்சாளர், நீண்ட சுருண்ட தலைகேசம் உடையவர், சுகபோகங்களைத் தூய்ப்பவர் ஆவார்.

வருஷ ருதுவில் பிறந்தவர்களுடைய தன்மை : போரில் வல்லவர், சிறந்த அறிவாளி, குதிரை செலுத்துவதில் சாமர்த்தியம் கொண்டவர். அழகன், கபம் மற்றும் வாயுத் தொல்லைகளால் வருந்துபவர் ஆவார்.

சரத் ருதுவில் பிறந்தவர்களுடைய தன்மை : செல்வந்தர், தருமவான், தூய்மையானவர், போரில் விருப்பமுள்ளவர் வாகனங்களையுடையவர், மானமுடையவர், வாயுத் தொல்லையால் துன்பப்படுபவர் மற்றும் ரோஷமுடன் கூடியவர் ஆவார்.

ஹேமந்த ருதுவில் பிறந்தவர்களுடைய தன்மை : அமைச்சராகவும், சாமர்த்தியம் மிக்கவராகவும், நற்குணங்களுடன் கூடியவராகவும், நற்செயல்களையும் தரும காரியங்களைச் செய்வதில் விருப்பமுள்ளவராகவும், பணிவுடன் கூடியவராகவும் இருப்பவர் ஆவார்.

சிசிர ருதுவில் பிறந்தவர்களுடைய தன்மை : சிறந்த உணவு வகைகளையும், பானங்களையும் அருந்துபவர், குருவிடம் அன்பு கொண்டவர், பணிவு உள்ளவன், மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு விருப்பமானதைச் செய்பவர், தூயமனம் கொண்டவர், ரோஷம் மற்றும் பலம் முதலியவற்றுடன் கூடியவர் ஆவார்.

## 5. மாதங்கள்

மாதங்கள் இரண்டு வகைப்படும். 1) சௌரமானம், 2) சந்திரமானம் ஆகும். சௌரமானம் என்பது சூரியனின் சஞ்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது. சூரியன் ஒரு இராசியிலிருந்து மற்றொரு இராசிக்கு பிரவேசிப்பதை மாதப்பிரவேசம் அல்லது சங்க்ரமணம் என்று கூறுவர். இவ்வாறு ஒரு இராசியில் சூரியன் நுழைந்து அந்த இராசியில் இருக்கும் காலம் சௌரமான மாதம் என்று அழைக்கப்படுகிறது. இவை மொத்தம் பன்னிரெண்டு ஆகும். இவையே தமிழ் மாதங்களாகக் கூறப்படுகிறது. மாதங்களின் பெயர்களும், அவற்றின் தேவதைகளும் பின்வருமாறு:

| **சௌரமான மாதங்கள்** | | **தமிழ் மாதங்கள்** | **தேவதை** |
|---|---|---|---|
| மேஷ மாதம் | – | சித்திரை மாதம் | மது |
| ரிஷப மாதம் | – | வைகாசி மாதம் | மாதவன் |
| மிதுன மாதம் | – | ஆனி மாதம் | சுக்கிலன் |
| கடக மாதம் | – | ஆடி மாதம் | சுசி |
| சிம்ம மாதம் | – | ஆவணி மாதம் | நபஸ் |
| கன்யா மாதம் | – | புரட்டாசி மாதம் | நபஸியன் |
| துலா மாதம் | – | ஐப்பசி மாதம் | இஷன் |
| விருச்சிக மாதம் | – | கார்த்திகை மாதம் | ஊர்ஜன் |
| தனுர் மாதம் | – | மார்கழி மாதம் | ஸஹன் |
| மகர மாதம் | – | தை மாதம் | ஸஹஸ்யன் |
| கும்ப மாதம் | – | மாசி மாதம் | தயஸ் |
| மீன மாதம் | – | பங்குனி மாதம் | தபஸியன் |

சந்திரமானம் என்பது சந்திரனின் சஞ்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது. சூரியனும் சந்திரனும் ஒரே பாகையில் இணையும் அமாவாசைக்கு அடுத்த நாள் முதல் சாந்திரமான மாதம் ஆரம்பமாகிறது. அதாவது சுக்ல பட்ச பிரதமை முதல் அமாவாசை வரை உள்ள காலம் ஒரு சாந்திரமான மாதம் ஆகும். இவை மொத்தம் பன்னிரெண்டு ஆகும். அந்தந்த மாதத்தில் பௌர்ணமி நிகழும் நட்சத்திரத்தின் பெயரே சந்திரமான மாதங்களுக்கு சூட்டப்பட்டுள்ளது. அவையாவன:

| | **மாதங்களின் பெயர்** | **பௌர்ணமி நிகழும் நட்சத்திரம்** |
|---|---|---|
| 1. | சைத்திரம் | சித்ரா (சித்திரை) |
| 2. | வைசாகம் | விசாகா (விசாகம்) |
| 3. | ஜ்யேஷ்டம் | ஜேஷ்டா (கேட்டை) |
| 4. | ஆஷாடம் | பூர்வாஷாடா (பூராடம்) |
| 5. | சிராவணம் | சிரவண (திருவோணம்) |
| 6. | பாத்ரபதம் | பூர்வபாத்ரபத (பூரட்டாதி) |
| 7. | ஆஸ்வயுஜம் | அஸ்வினி (அசுபதி) |
| 8. | கார்த்திகம் | கிருத்திகா (கார்த்திகை) |
| 9. | மார்கசிரம் | மிருகசிரா ( மிருகசீரிஷம்) |
| 10. | புஷ்யம் | புஷ்யா (பூசம்) |
| 11. | மாகம் | மகா (மகம்) |
| 12. | பால்குனம் | உத்திரபால்குனி (உத்திரம்) |

பரந்த நமது பாரத தேசத்தில் சில பிரதேசங்களில் சௌரமான மாதமும், சில பிரதேசங்களில் சந்திரமான மாதமும் நடைமுறையில் இருக்கிறது.

1) சித்திரை (சைத்ர) மாதத்தில் பிறந்தவர்களின் தன்மை : நற்செயல்கள் புரிபவர், கல்வியறிவு மிக்கவர் சுக போகங்களைத் துய்ப்பவர், சுவையான உணவை உண்பவர், ஆலோசனை கூறத்தக்கவர், சாமர்த்தியம் மிக்கவர் ஆவார்.

2) வைகாசி (வைசாக) மாதத்தில் பிறந்தவர்களின் தன்மை:பிள்ளைகளிடம் அளவற்ற பாசம் உடையவர், ஆரோக்கியமான தேகம் உடையவர், குருவிடமும் தேவதைகளிடத்தும் பக்தியுள்ளவர், நீண்ட ஆயுள் உள்ளவர் நீரில் செல்லும் கப்பல் போன்றவற்றில் பிரயாணம் செய்ய விருப்பம் உள்ளவராகவும் இருப்பார்.

3) ஆனி (ஜ்யேஷ்ட) மாதத்தில் பிறந்தவர்களின் தன்மை:
பொறுமையுடையவர், நிலையற்ற மனதையுடையவர், வெளிநாட்டில் வசிக்க விரும்புவர், பெருமுயற்சி உடையவர், நீண்ட காலம் ஆலோசிப்பவர், புத்திகூர்மை மிக்கவர் ஆவார்.

4) ஆடி (ஆஷாட) மாதத்தில் பிறந்தவர்களின் தன்மை : அதிகசெலவு செய்பவர், அதிகமாகப் பேசுபவர், தவறுகள் புரிபவர், ஆசிரியர்களிடத்தில் அன்புடையவர், நற்செயல்கள் புரிபவர், நற்பெருமை கொண்டவர், அஜீரணம் உள்ளவர் ஆவார்.

5) ஆவணி (சிராவண) மாதத்தில் பிறந்தவர்களின் தன்மை : பிள்ளைகள், மனைவி, பேரன், பேத்தி, நண்பர்கள், இவர்களுடன் கூடியவராய் இன்பமாய் வாழ்பவர், தந்தை சொற்படி நடப்பவர் புகழ் பெற்றவர், சுபம் மிகுந்தவர், கொடையாளி, நற்குணங்கள் மிக்கவர் ஆவார்.

6) புரட்டாசி (பாத்ரபதம்) மாதத்தில் பிறந்தவர்களின் தன்மை: செல்வந்தர், இளைத்தமேனியை உடையவர், கொடையாளி, மனைவி மற்றும் மக்கட் செல்வத்தால் நன்மை அடைபவர், சுகதுக்கங்களில் மாறாத மனதை உடையவர் மற்றும் அயோக்கியன் ஆவார்.

7) ஐப்பசி (ஆஸ்வயுஜம்) மாதத்தில் பிறந்தவர்களின் தன்மை: அறிவாளி, செல்வந்தர் அரசர்களுக்கு பிரியமானவர், நற்செயல்கள் புரிபவர் நிறைய வேலைக்காரர்கள் உடையவன், கொடைவள்ளர், நற்குணம் மிக்கவர் அநேக பிள்ளைகளை உடையவர், குதிரை முதலியன நிறைந்து இருப்பவர் ஆவார்.

8) கார்த்திகை (கார்த்திகம்) மாதத்தில் பிறந்தவர்களின் தன்மை : நற்செயல்கள் புரிபவர் பவ விஷயங்களைப் பல விதமாக பேசும் திறமையுடையவர், செல்வந்தர், மிகுந்தகாமம் உடையவர் வியாபாரத்தில் சிறந்தவர் ஆவார்.

9) மார்கழி (மார்கசிரம்) மாதத்தில் பிறந்தவர்களின் தன்மை : அடிக்கடி தீர்த்த யாத்திரை செல்பவர், கலைகளில் சிறந்தவன், ஆடை ஆபரணங்களுடனும், அழகுடனும் இருப்பவர், பிறருக்கு உதவுபவர், செல்வந்தர், பல கலைகளில் சாமர்த்தியம் மிக்கவர் ஆவார்.

10) தை (புஷ்யம்) மாதத்தில் பிறந்தவர்களின் தன்மை : பிறருக்கு உபகாரி, முன்னோர் சொத்தை இழப்பவர், தான் ஈட்டிய பொருளையும் செலவு செய்பவர், சாஸ்திரங்களும் கலைகளும் கற்றவர் ஆவார்.

11) மாசி (மாகம்) மாதத்தில் பிறந்தவர்களின் தன்மை : மந்திரங்கள் அறிந்தவர், வைதீகத்தில் ஈடுபாடு உள்ளவர், யோகாப்பியாசம் செய்பவர், பகைவர்களை வெல்பவர், மேன்மையானவர் ஆவார்.

12) பங்குனி (பால்குனம்) மாதத்தில் பிறந்தவர்களின் தன்மை : பிறருக்கு உதவுபவர், சாமர்த்தியசாலி, தயை உள்ளவர், அழகன், பெண்களின் மனம் அறிந்து நடப்பவர், வீண் பேச்சாளி, வலிமை மிக்கவர் ஆவார்.

## குறிப்பு

## கூறு : 4

## திருமணப் பொருத்தம்

### 1. திருமண வகைகள்:

மனித குலம் தழைத்தோங்கி கலாச்சார மேம்பாடு அடைந்தபின் குடும்ப அமைப்புகளை ஏற்படுத்தும் பொருட்டு திருமணங்கள் செய்துவைக்கப்பட்டன. இவ்வகை திருமணங்களை ஒவ்வொரு காலகட்டத்தின் கலாச்சாரத்தை ஒட்டி அமைந்திருந்தன எனலாம். நாம் திருமணங்களை வேதகால திருமணங்கள், ஆதிகால திருமணங்கள், தற்கால திருமணங்கள் என மூன்று காலகட்டங்களாக பிரிக்கலாம் அவை.

**வேதகால திருமணங்கள்:**

வேதகால திருமணங்கள் 8 வகைப்படும். 1. பிரம்மம், 2. பிரஜாபத்யம், 3. ஆர்சம், 4. புரோகிதம், 5. காந்தர்வம், 6. ராட்சகம், 7. ஆசுரம், 8. பைசாசிகம் ஆகியனவாகும்.

**பிரம்மம்:** குலம் குணம் கல்வி ஆகியவற்றில் சிறந்த கன்னியை ஆடை ஆபரணங்களுடன் தானம் செய்து கொடுப்பது பிரம்ம விவாகம் அல்லது பிரம்ம திருமணம் எனப்படும்.

**பிரஜாபத்யம்:** பிரதி உபகாரங்கள் ஏதும் எதிர்பாராமல் கணவன், மனைவி இருவரும் பல்லாண்டு வாழ வேண்டும் என ஆசிர்வதித்து ஒருவர் தன் மகளை வரனுக்கு மணமுடித்து வைப்பது பிரஜாபத்யம் எனப்படும்.

**ஆர்சம்:** வரன் வீட்டாரிடம் எதையாவது தானமாக பெற்றுக்கொண்டு அதற்கு பதிலாக ஒருவர் தன் மகளை தானமாக மணமுடித்து தருவது ஆர்ச்சமணமாகும்.

**புரோகிதம்:** வேதங்கள் கற்றுணர்ந்து அதன் மூலம் யாகங்களும் பூஜைகளும் செய்யும் புரோகிதருக்கு தன் மகளை தானம் செய்து கொடுப்பது புரோகிதம் எனப்படும்.

**காந்தர்வம்:** அழகிலும், வீரத்திலும், குணத்திலும், சிறந்த ஆண்களின் மீது பெண்கள் விருப்பம் கொண்டு யாருடைய சம்மதத்தையும் பெறாமல் தாங்களாகவே வரன்களை தேர்வு செய்து கொள்வது காந்தர்வமனம் எனப்படும்.

**ராட்சகம்:** குலம் மாறி வேறு குலத்தவர்களை போரில் தோற்கடித்தும், அல்லது வேறு பெண்களின் கணவர்களை கொன்றுவிட்டும். அவர்களுடைய மனைவி அல்லது பெண்களை பலவந்தமாக இழுத்து வந்து திருமணம் செய்து கொண்டு அடைத்துவைத்து குடும்பம் நடத்துவது ராட்சசமாகும்.

**ஆசுரம்:** பெண்களின் ஆதரவாளர்கள் அல்லது பாதுகாவலர்கள் அல்லது பெற்றோருக்கு தானம் கொடுத்து அவர்களுடைய பெண்ணை மனம் முடிப்பது ஆசுரம் எனப்படும்.

**பைசாசிகம்:** சுய நினைவு இல்லாத மற்றும் யாரென்று தெரியாத ஆதரவு இல்லாத பெண்ணை யாருடைய சம்மதமும் இல்லாமல் மணமுடித்துக் கொள்வது பைசாசிகம் எனப்படும்.

**ஆதிகால திருமணங்கள்**

ஆதிகால திருமணங்கள் 6 வகைப்படும். 1. தெய்வ நிச்சயம், 2. குருநிச்சயம், 3. அரசநிச்சயம், 4.கர்ப்பநிச்சயம், 5. காதல் மணம், 6. ராட்சசமணம் ஆகியனவாகும்.

**தெய்வ நிச்சயம்:** வழிபாட்டு ஸ்தலங்களில் கடவுளின் முன்னிலையில் வாக்கு கேட்டு இந்த வரனுக்கு பெண்தரலாமா வேண்டாமா என முடிவு செய்வது தெய்வ நிச்சயம் எனப்படும்.

**குரு நிச்சயம்:** தன் குலத்தின் குருமார்கள் அல்லது வித்தைகள், கல்வி கற்று கொடுத்த குருவின் ஆணைப்படி ஒரு பெண்ணை வரனுக்கு மணமுடித்துவைப்பது குரு நிச்சயம் எனப்படும்.

**அரச நிச்சயம்:** அரசர்கள் நகர்வலம் வரும் போதோ அல்லது போருக்கு செல்லும் போதோ அழகான பெண்களை பார்த்து அவர்களை தன் மனைவிகளாக ஏற்றுக் கொள்வது அரச நிச்சயம் எனப்படும்.

**கர்ப்பநிச்சயம்:** திருமணத்திற்கு முன்னரே கர்ப்பமான பெண்ணை தன் குலத்தின் மானம் காக்கும் பொருட்டு யாருக்கும் தெரியாமல் திருமணம் செய்துவைத்தல் கர்ப்பநிச்சயம் எனப்படும்.

**காதல் மணம்:** ஒரு ஆணும் பெண்ணும் ஒருவர் மீது ஒருவர் விருப்பப்பட்டு இருவர் மனதும் ஒத்துப்போய் காதல் திருமணம் செய்வது காதல் மணம் எனப்படும்.

**ராட்சச மணம்:** ஒரு பெண்ணோ ஆணோ ஒருவர் மட்டும் மற்றொருவர் மீது காதல்வயப்பட்டு அவரின் சம்மதமே இல்லாமல் கடத்தி வந்து திருமணம் செய்து கொள்வது ராட்சச மணம் எனப்படும்.

## 2. தசவிதப் பொருத்தம்

தற்காலத்தில் நடைமுறையில் இருக்கும் பொருத்தங்களில் இதுவும் ஒன்று பெரும்பாலான மக்கள் இதை கடைபிடிக்கின்றனர். 1. தினம், 2.கணம், 3. மகேந்திரம், 4. ஸ்திரிதீர்க்கம், 5. யோனி, 6. இராசி, 7. இராசியதிபதி, 8. வசியம், 9. ரஜ்ஜீ, 10. வேதை ஆகிய பத்தும் தசவித பொருத்தம் எனப்படும்.

**1. தினப் பொருத்தம்:**

பெண் நட்சத்திரம் முதல் ஆண் நட்சத்திரம் வரை எண்ண வேண்டும். ஒன்பதுக்கு மேல் போனால் ஒன்பதால் வகுத்து ஈவு போக மீதி

| | | | |
|---|---|---|---|
| 1. | வந்தால் | ஜன்மம் | என்றும் |
| 2. | வந்தால் | சம்பத்து | என்றும் |
| 3. | வந்தால் | விபத்து | என்றும் |
| 4. | வந்தால் | க்ஷேமம் | என்றும் |
| 5. | வந்தால் | ப்ரத்யக் | என்றும் |
| 6. | வந்தால் | சாதகம் | என்றும் |
| 7. | வந்தால் | வதம் | என்றும் |
| 8. | வந்தால் | மைத்ரம் | என்றும் |
| 9. | வந்தால் | பரமமைத்ரம் | என்றும் |

பெயர்கள் தரப்பட்டுள்ளன.

மூன்றாவதாக வருகின்ற நட்சத்திரம் 'விபத்து'' என்ற பெயர் கொண்டதாலும். ஐந்தாவதாக வருகின்ற நட்சத்திரம் ''ப்ரத்ய'' என்ற பெயர் கொண்டதாலும், ஏழாவதாக வருகின்ற நட்சத்திரம் ''வதம்'' என்று பெயர் கொண்டதாலும் விலக்கப்பட வேண்டும்.

இரண்டாவதாக வருகின்ற நட்சத்திரம் ''சம்பத்து'' என்ற பெயர் கொண்டதாலும், நான்காவதாக வருகின்ற நட்சத்திரம் ''க்ஷேமம்'' என்ற பெயர் கொண்டதாலும், ஆறாவது வரும் நட்சத்திரம் ''ஸாதகம்'' என்ற பெயர் கொண்டதாலும் எட்டாவதாக வருகின்ற நட்சத்திரம் ''மைத்ரம்'' என்ற பெயர் கொண்டதாலும், ஒன்பதாவதாக வரும் நட்சத்திரம் ''பரம மைத்ரம்'' என்ற பெயர் கொண்டதாலும் மிகவும் உத்தமம். ஆண், பெண் இருவருக்கும் ஒரே நட்சத்திரம் என்றால், சில நட்சத்திரங்கள் உத்தமம். சில நட்சத்திரங்கள் மத்திமம், சில நட்சத்திரங்கள் அதமம்.

| உத்தம நட்சத்திரங்கள் | மத்திம நட்சத்திரங்கள் | அதம நட்சத்திரங்கள் |
|---|---|---|
| ரோகிணி | அசுவினி | பரணி |
| திருவாதிரை | கார்த்திகை | ஸ்வாதி |
| மகம் | மிருகசீரிஷம் | ஆயில்யம் |
| விசாகம் | புனர்பூசம் | கேட்டை |
| ஹஸ்தம் | பூசம் | மூலம் |
| திருவோணம் | பூரம் | அவிட்டம் |
| ரேவதி | உத்திரம் | சதயம் |
| உத்திரட்டாதி | சித்திரை | பூரட்டாதி |
| | அனுஷம் | |
| | பூராடம் | |
| | உத்திராடம் | |

ஆண் பெண் இருவருடைய நட்சத்திரமும் ஒரே நட்சத்திரம் ஆகு இருந்து பொருந்துவதாக இருந்தால், ஆண் நட்சத்திர பாதம் முன்னதாகவும் பெண் நட்சத்திரம் பாதம் பின்னதாகவும் இருக்க வேண்டும்.

ஆண், பெண் இருவரும் ஒரே இராசியாக இருந்து இவருடைய நட்சத்திரமும் வெவ்வேறு நட்சத்திரங்களாக இருந்தால் ஆண் நட்சத்திரம் முன்னதாகவும், பெண் நட்சத்திரம் பின்னதாகவும் இருக்க வேண்டும். இருப்பினும் மேஷ இராசியானால் பரணி – காாத்திகை, கும்ப இராசியானால் அவிட்டம் – சதயம், கடக இராசியானால் பூசம் – ஆயில்யம் ஆகியவை விலக்கப்பட வேண்டும்.

பெண் நட்சத்திரப்பாதம் முதல் ஆண் நட்சத்திரப் பாதம் வரை எண்ணும் போது 88வது நட்சத்திரப் பாதம் ‘‘வைநாசிகம்’’ எனப்படும். ஆண் நட்சத்திரப் பாதம் முதல் பெண் நட்சத்திரம் பாதம் வரை எண்ணும் போது 88வது நட்சத்திரப் பாதம் ‘‘வதம்’’ எனப்படும். இவ்வாறு வந்தால் பொருத்தமில்லை.

தினப் பொருத்தம் பார்க்கும் போது, பெண் நட்சத்திரத்திலிருந்து எண்ணும் போது ஆண் நட்சத்திரம் அமைந்துள்ள இராசி பெண்ணின் ஜென்ம இராசியிலிருந்து அஷ்டம இராசியாக வரக்கூடாது.

**2. கணப் பொருத்தம்**

இருபத்தேழு நட்சத்திரங்களும் தேவ கணம், மனுஷ கணம், ராட்சஸ கணம் என மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

| **தேவ கண நட்சத்திரங்கள்** | **மனுஷ கண நட்சத்திரங்கள்** | **ராட்சஸ கண நட்சத்திரங்கள்** |
|---|---|---|
| அசுவினி | ரோகிணி | கார்த்திகை |
| மிருகசீஷம் | பூரம் | மகம் |
| பூசம் | பூராடம் | ஆயில்யம் |
| ஸ்வாதி | பூரட்டாதி | விசாகம் |
| ஹஸ்தம் | பரணி | சதயம் |
| புனர்பூசம் | திருவாதிரை | அவிட்டம் |
| அனுஷம் | உத்திரம் | சித்திரை |
| திருவோணம் | உத்திராடம் | கேட்டை |
| ரேவதி | உத்திரட்டாதி | மூலம் |

**கணப் பொருத்த விளக்கம்**

| **பெண்** | **ஆண்** | **பொருத்தம்** |
|---|---|---|
| தேவம் | தேவம் | உத்தமம் |
| மனுஷம் | மனுஷம் | உத்தமம் |
| மனுஷம் | தேவம் | உத்தமம் |
| தேவம் | மனுஷம் | மத்திமம் |
| தேவம் | ராட்சஸம் | மத்திமம் |
| ராட்சஸம் | ராட்சஸம் | மத்திமம் |
| மனுஷம் | ராட்சஸம் | அதமம் |
| ராட்சஸம் | தேவம் | அதமம் |
| ராட்சஸம் | மனுஷம் | அதமம் |

**3. மகேந்திரப் பொருத்தம்**

பெண் நட்சத்திரம் முதல் ஆணின் நட்சத்திரம் 4, 7, 10, 13, 16, 19, 22, 25 வது நட்சத்திரமாக வந்தால் மகேந்திரப் பொருத்தம் உண்டு.

**4. ஸ்திரீதீர்க்கப் பொருத்தம்**

பெண் நட்சத்திரம் முதல் ஆண் நட்சத்திரம் வரை எண்ணினால் 13க்கு மேற்பட்டால் உத்தமம் 7 முதல் 13க்குள் அமைந்தால் மத்திமம் 1 முதல் 6 க்குள் இருந்தால் அதமம், பொருந்தாது.

**5. யோனிப் பொருத்தம்**

ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் ஒவ்வொரு மிருகம் உண்டு. ஆண், பெண் நட்சத்திரங்கள் ஒரே யோனியானால் உத்தமம் வேறு யோனியாகி பகையில்லாமல் இருந்தால் மத்திமம். பகையோனியாகில் அதமம் பொருந்தாது.

**யோனிப் பொருத்தம்**

| நட்சத்திரங்கள் | யோனிகள் | நட்சத்திரங்கள் | யோனிகள் |
|---|---|---|---|
| அசுவினி | ஆண் குதிரை | ஸ்வாதி | ஆண் எருமை |
| பரணி | ஆண் யானை | விசாகம் | ஆண் புலி |
| கார்த்திகை | பெண் ஆடு | அனுஷம் | பெண் மான் |
| ரோகிணி | ஆண் நாகம் | கேட்டை | ஆண் மான் |
| மிருகசீரிஷம் | பெண் நாகம் | மூலம் | ஆண் நாய் |
| திருவாதிரை | பெண் நாய் | பூராடம் | ஆண் குரங்கு |
| புனர்பூசம் | பெண் பூனை | உத்திராடம் | கீரி |
| பூசம் | ஆண் ஆடு | திருவோணம் | பெண் குரங்கு |
| ஆயில்யம் | ஆண் பூனை | அவிட்டம் | பெண் சிங்கம் |
| மகம் | ஆண் எலி | சதயம் | பெண் குதிரை |
| பூரம் | பெண் எலி | பூரட்டாதி | ஆண் சிங்கம் |
| உத்திரம் | எருது | உத்திரட்டாதி | பசு |
| ஹஸ்தம் | பெண் எருமை | ரேவதி | பெண் யானை |
| சித்திரை | பெண் புலி | | |

**பகை யோனிகள் நட்சத்திரங்கள்**

| பகையோனிகள் | நட்சத்திரங்கள் |
|---|---|
| குரங்கு x ஆடு | பூராடம், திருவோணம் x பூசம், கார்த்திகை |
| சிங்கம் x யானை | அவிட்டம், பூரட்டாதி x பரணி, ரேவதி |
| குதிரை x எருமை | அசுவினி, சதயம் x சுவாதி, ஹஸ்தம் |
| பசு x புலி | உத்திரம், உத்திரட்டாதி x விசாகம் சித்திரை |
| எலி x பூனை | மகம், பூரம் x ஆயில்யம், புனர்பூசம் |
| பாம்பு x எலி | ரோகிணி, மிருகசீரிஷம் x மகம், பூரம் |
| கீரி x பாம்பு | உத்திராடம் x ரோகிணி, மிருகசீரிஷம் |
| மான் x நாய் | கேட்டை, அனுஷம் x மூலம், திருவாதிரை |

**6. இராசிப் பொருத்தம்**

பெண்ராசி முதல் ஆண் ராசி வரை எண்ணினால் ஆறுக்கு மேற்பட்டால் உத்தமம். ஆறுக்கு குறைவாக இருந்தால் பொருந்தாது.

பெண் இராசி முதல் ஆண் இராசி வரை எண்ணினால் ஏற்படும் பலன்கள்

1. பொருத்தம் உண்டு
2. மரணம் – பொருத்தம் இல்லை
3. துக்கம் – மத்திமம்
4. ஏழ்மை – மத்திமம்
5. விதவை – அதமம் – பொருத்தம் இல்லை
6. புத்திரநாசம் – அதமம் – பொருத்தம் இல்லை
7. சம சப்தமம் – மாங்கல்ய பலம், ஆயுள் விருத்தி
8. புத்திர பாக்கியம்
9. சௌபாக்கியம்
10. ஐஸ்வர்யம்
11. சுகம்
12. தீர்க்க ஆயுள்

**7. இராசி அதிபதி பொருத்தம்**

பெண், ஆண் இருவரின் இராசி அதிபதிகளும் ஒருவருக்கொருவர் நட்பாக இருந்தால் உத்தமம். சமநிலை ஆக இருந்தால் மத்திமம். பகையானால் அதமம் பொருத்தம் இல்லை.

பெண், ஆண் இருவரின் ராசி அதிபதிகளும் ''நட்பு'' ஆனாலும் ''சமம்'' ஆனாலும் உத்தமம். ஆறுக்கு குறைவாக இருந்தால் பொருந்தாது.

| இராசிகள் | அதிபதி | நட்பு | சமம் | பகை |
|---|---|---|---|---|
| சிம்மம் | சூரியன் | சந், செவ்,குரு | புதன் | சுக், சனி, ரா,கே |
| கடகம் | சந்திரன் | சூரி, புதன் | செவ்,குரு,சுக்,சனி | ராகு, கேது |
| மேஷ, விருச் | செவ்வாய் | சூரி, சந், குரு | சனி, சுக்கிரன் | புதன்,ராகு,கேது |
| ரிஷப, துலாம் | சுக்கிரன் | புத,சனி,ரா,கே | செவ், குரு | சூரியன், சந் |
| மிதுன,கன்னி | புதன் | சூரி,சுக்கிரன் | செ,குரு,சனி, ரா,கே | சந்திரன் |
| தனுசு, மீனம் | குரு | சூரி, சந்,செவ் | சனி, ரா, கே | புத, சுக் |
| மகரம், கும்பம் | சனி | புத, சுக்,ரா,கே | குரு | சூரி, சந், செவ் |

**வசியப் பொருத்தம்**

மேஷம் முதல் மீனம் வரை உள்ள பன்னிரெண்டு இராசிகளுக்கு ஏதாவது ஒன்று அல்லது இரண்டு இராசிகள் வசியத்திற்குட்பட்டு இருக்கும். வசியம் உள்ள ராசிகளுக்குள் இருவர் நட்சத்திரமும் இருப்பது வசியப் பொருத்தம் ஆகும். பெண் ராசிக்கு ஆண் ராசி வசியமானால் உத்தம. ஆண் இராசிக்கு பெண் இராசி வசியமானால் மத்திமம். வசியம் இல்லை என்றால் பொருத்தம் இல்லை.

| இராசிகள் | வசிய இராசிகள் |
|---|---|
| மேஷம் | சிம்மம், விருச்கிம் |
| ரிஷபம் | கடகம் |
| மிதுனம் | கன்னி |
| கடகம் | தனுசு, விருச்சிகம் |
| சிம்மம் | துலாம் |
| கன்னி | மீனம், மிதுனம் |
| துலாம் | மகரம், கன்னி |
| விருச்சிகம் | கடகம் |
| தனுசு | மீனம் |
| மகரம் | மீனம் |
| கும்பம் | கன்னி |
| மீனம் | மேஷம் |

**9. ரஜ்ஜுப் பொருத்தம்**

பெண், ஆண், நட்சத்திரங்களின் ரஜ்ஜு ஒரே ரஜ்ஜுவானால் பொருத்தமில்லை. வேறுபட்ட ரஜ்ஜுவானால் பொருத்தம் உண்டு.

| சிரசு ரஜ்ஜு | மிருகசீரிசம் | சித்திரை | அவிட்டம் |
|---|---|---|---|
| கண்ட ரஜ்ஜு | ரோகிணி, திருவா | ஹஸ்தம், சுவாதி | திருவோ, சதயம் |
| உதிர ரஜ்ஜு | கார்த்தி, புனர்பூசம் | உத்திரம், விசாகம் | உத்திரா, பூரட்டா |
| தொடை ரஜ்ஜு | பரணி, பூசம் | பூரம், அனுஷம் | பூராட, உத்திரட் |
| பாத ரஜ்ஜு | அசுவி, ஆயில்யம் | மகம், கேட்டை | மூலம், ரேவதி |

இரண்டுமே ஏக ரஜ்ஜுவாகி, அதில் பாத ரஜ்ஜுவாகில் தேசாந்திர யாத்திரை, இரண்டுமே தொடை ரஜ்ஜுவாக இருந்தால் செல்வநாசம், உதிர ரஜ்ஜுவாகில் சந்ததி நாசம்,கர்ப்ப தோஷம். கண்ட ரஜ்ஜுவாகில் பெண் மரணம், இரண்டுமே சிரசு ரஜ்ஜுவாகில் கணவன் மரணம். எனவே, திருமணப் பொருத்தத்தில் ரஜ்ஜு பொருத்தம் முக்கியமானதாகும்.

**10. வேதைப் பொருத்தம்**

பெண், ஆண் நட்சத்திரங்களில் சில ஒன்றுக்கொன்று பொருத்த மற்றவை என்பதால் அத்தகைய நட்சத்திரங்களைக் கொண்ட ஆண் மற்றும் பெண்ணுக்கு திருமணம் செய்வித்தல் சரியல்ல.

வேதை என்றால் வேதனை தரக்கூடியது. எனவே வாழ்க்கையில் கஷ்டப் படாமல் இருப்பதற்கு வேதைப் பொருத்தம் அவசியம்.

**ஒன்றுக்கொன்று வேதையாகும் நட்சத்திரங்கள்**

| | | |
|---|---|---|
| அசுவினி | கேட்டை | |
| பரணி | அனுஷம் | |
| திருவோணம் | திருவாதிரை | |
| கார்த்திகை | விசாகம் | மிருகசீரிசம் |
| சுவாதி | ரோகிணி | சித்திரை |
| மூலம் | ஆயில்யம் | அவிட்டம் |
| மகம் | ரேவதி | இவை மூன்றும் ஒன்றுக் |
| பூசம் | பூராடம் | கொன்று வேதை ஆகும். |
| புனர்பூசம் | உத்திராடம் | |
| உத்திரம் | பூரட்டாதி | |
| ஹஸ்தம் | சதயம் | |
| உத்திரட்டாதி | பூரம் | |

**தசவித பொருத்தத்தின் பலன்கள்**

**1. தினப் பொருத்தம் :**

தினப் பொருத்தத்தை நட்சத்திர பொருத்தம் என்றும் கூறலாம். கணவன் மனைவி நோய் நொடியின்றி ஆரோக்கியத்துடனும், தேக சுகத்துடனும் வாழ்வதற்கு தினப் பொருத்தம் இருக்க வேண்டும்.

**2. கணப் பொருத்தம்:**

கணவன், மனைவி குடும்ப வாழ்க்கை, திருமண வாழ்வின் முக்கிய அம்சமாகும். குடும்பத்தில் ஒருவரை ஒருவர் அன்பு செலுத்த முடியாத நிலை ஏற்பட்டால் விபரீத விளைவுகள் ஏற்படும். இந்நிலை ஏற்படாமல், சயன, சுக, போக பாக்கியத்தைக் குறைவின்றி இருவரும் அனுபவமிக்க கணப் பொருத்தம் இருக்க வேண்டும்.

**3. மகேந்திரப் பொருத்தம் :**

குலம், விருத்தி அடைய புத்திரபாக்கியம் இருக்க வேண்டும். மகேந்திரப் பொருத்தம் இருந்தால் புத்திர பாக்கியம் சிறப்பாக இருக்கும்.

**4. ஸ்திரிதீர்க்கப் பொருத்தம் :**

அஷ்ட லெட்சுமி கடாட்சம், தன, தான்ய விருத்திக்கு ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம் இருந்தால் புத்திர பாக்கியம் சிறப்பாக இருக்கும்.

**5. யோனிப் பொருத்தம் :**

கணவனும், மனைவியும் ஒருவர் மேல் ஒருவர் அன்புடனும், பாசத்துடனும் குடும்பம் நடத்த யோனிப் பொருத்தம் இருக்க வேண்டும்.

**6. இராசிப் பொருத்தம் :**

குடும்பம் சுகமாகவும், உறவினர்களிடையே எந்தவித கருத்து வேறுபாடும் இன்றி ஒற்றுமையாக இருப்பதற்கு இராசிப் பொருத்தம் இருக்க வேண்டும்.

**7. இராசி அதிபதிப் பொருத்தம் :**

கணவன், மனைவி இருவரும் கருத்து வேறுபாடு இன்றி ஒற்றுமையாக குடும்பம் நடத்த இராசி அதிபதிப் பொருத்தம் இருக்க வேண்டும்.

**8. வசியப் பொருத்தம் :**

மனைவியைத் தவிர, பிற பெண்களைக் கணவனும், கணவனைத் தவிர பிற ஆண்களை மனைவியும் மனத்தாலும் நினைக்காமல், பரஸ்பர அன்புடன் இருக்க வசியப் பொருத்தம் வேண்டும்.

**9. ரஜ்ஜுப் பொருத்தம் :**

கணவன், மனைவி இருவரும் தீர்க்க ஆயுளுடன், நீண்ட காலம் வாழ்வதற்கு ரஜ்ஜுப் பொருத்தம் இருக்க வேண்டும்.

**10. வேதைப் பொருத்தம் :**

வாழ்க்கையில் ஏற்படும் ஏற்ற தாழ்வுகள், கஷ்ட, நஷ்டங்கள் போன்றவற்றை அனுசரித்து கோபமோ, சோர்வோ இல்லாமல், ஒற்றுமையாக சந்தோஷமாக குடும்பம் நடத்த, வேதைப் பொருத்தம், தம்பதிகளுக்கு மனோபலம் அளிக்கிறது.

தற்காலத்தில் தசவித பொருத்தம் (நட்சத்திரப்படி) பார்க்கும் முறை வழக்கத்தில் இருந்து வருகிறது. மற்றும் தற்கால ஜோதிட ஆய்வாளர்கள் சிலர் ஜாதக கிரகங்களின் படி பொருத்தம் பார்ப்பதுதான் சிறந்தது என பொருத்தம் பார்க்கின்றனர்.

**3.தோஷங்கள்**

**தோஷம் தரும் நட்சத்திரங்கள்**

1. மூலம் முதல் பாதம் பெண்ணின் நட்சத்திரமானால் தகப்பனார் உள்ள பையனுக்கும்.
2. ஆயில்யம் முதல் பாதம் பெண்ணின் நட்சத்திரமானால் தாயார் உள்ள பையனுக்கும்.
3. கேட்டை முதல் பாதம் பெண்ணின் நட்சத்திரமானால் மூத்த சகோதரன் உள்ள பையனுக்கும்
4. விசாகம் நான்காம் பாதம் பெண்ணின் நட்சத்திரமானால் தம்பியுள்ள (கடைசி தம்பி) பையனுக்கும்.

விவாகம் செய்துவைக்கக் கூடாது என்பது (பல நூல்களில் இல்லாவிட்டாலும்) பழக்கத்தில் உள்ளது. தீவிரமாகவும் கடைபிடிக்கப்படுகிறது.

மூலம், ஆயில்யம், கேட்டை நட்சத்திரங்களின் முதல் பாதமும், விசாகம் நட்சத்திரத்தின் நான்காம் பாதமும் தோஷமுள்ளது என கூறப்படுகிறது. மேலும் பெண்களுக்கு தான் இது பொருந்தும். மேற்படி நட்சத்திரங்களில் பிறந்த ஆண்களுக்குத் தோஷம் கிடையாது.

மேலே குறிப்பிட்டுள்ள பத்துப் பொருத்தங்களில் தினம், கணம், யோனி, ராசி, ரஜ்ஜு ஆகிய ஐந்து பொருத்தங்களும் மிக முக்கியம்.

திருமண பொருத்தம் தொடர்பாக, ஜோதிட நூல்களுக்கிடையே சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. தசப் பொருத்தங்கள் ஆய்வுக்குறியவை ஆகும்.

பத்துப் பொருத்தங்கள் யாவும் நட்சத்திரம், இராசி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. திருமணப் பொருத்தம் பார்க்கின்ற விஷயத்தில் இந்த பத்துப் பொருத்தங்கள் மட்டும் போதுமானவை அல்ல. பெண், ஆண் ஜாதகங்களில் கிரகங்களின் நிலையையும் கண்டு அனுகூலமான பொருத்தம் இருப்பதை உறுதி செய்வது மிகவும் அவசியம். ''தசவிதப் பொருத்தங்கள்'' என்று சொல்லப்படும் பொருத்தத்தை விட பெண், ஆண் ஜாதகங்களில் கிரகங்களின் பலாபலம், குணம்தோஷம் இவற்றை பரிசீலித்துப்பொருத்தமுள்ளதா ? என்று உறுதி செய்து கொண்ட பிறகு கூட தசவிதப் பொருத்தம் பார்த்தால் போதுமானதென்றும் சொல்லும் வகையில் திருமணப் பொருத்தங்கள் விஷயத்தில் தசவிதப் பொருத்தத்தை விட ''ஜாதகப்பொருத்தம்'' மேலும் அதிக முக்கியத்துவம் பெறுகிறது எனலாம்.

## செவ்வாய் தோஷம்

பெண், ஆண் ஜாதகங்களில் ஜென்ம இலக்கினம், சந்திரா இலக்கினம், சுக்கிர இலக்கினம் இவற்றிற்கு 2 – 4 – 7 – 8 – 12 ஆகிய இடங்களில் செவ்வாய் இருப்பின் செவ்வாய் தோஷமுடையதாகும்.

இருவருடைய ஜாதகமும் தோஷமுடையதாயின் சிறப்பு. பெண் ஜாதகம் தோஷமுடையதாகி, ஆண் ஜாதகம் தோஷம் இல்லாதிருப்பின் ஆணுக்கு கெடுதி உண்டாகும். அதே போல் ஆண் ஜாதகம் தோஷமுடையதாகி பெண் ஜாதகம் தோஷம் இல்லாதிருப்பின் பெண்ணுக்கு கெடுதியுண்டாகும். சில ஜாதகங்கள் செவ்வாய் தோஷமுடையதாகக் காணப்பட்டாலும் சில காரணணங்களினால் அத்தோஷம் நீங்கப் பெற்றுச் சுபம் உண்டாகும்.

**சனி தோஷம்:** ஆண், பெண் ஜாதகங்களில் 2, 7ம் இடங்களில் சனி இருப்பின் திருமண தோஷம் ஏற்படும் .

**யுரேனஸ் தோஷம்:** ஆண், பெண் ஜாதகங்களில் 2, 7ம் இடங்களில் யுரேனஸ் இருப்பின் திருமணத்தில் தோஷம் ஏற்படும்

**நெப்டியூன்:** ஆண், பெண் ஜாதகங்களில் 7ல் நெப்டியூன் இருந்தால் திருமண தோஷம் ஏற்படும்

**புளுட்டோ:** ஆண், பெண் ஜாதகங்களில் 7, 8ல் புளுட்டோ இருப்பின் திருமண தோஷம் ஏற்படும்

**ராகு, கேது:** நிழல் கோள்களான ராகு, கேது, இலக்னத்திலோ, இரண்டிலோ ஏழிலோ, எட்டிலோ இருப்பின் நாகதோஷம் எனப்படும். இதுவும் திருமணதோஷமே.

**திருமணதோஷம்:** கன்னில் புதனிருந்து அதனுடன் 2க்கு அல்லது அதற்கு மேற்பட்ட கோள்கள் இணைந்து இருப்பின் திருமணதோஷம் ஏற்படும்.

## 4. திருமணப் பொருத்தம் விதி விலக்குகள்

### தசவித பொருத்தத்தில் விதி விலக்குகள்:

திருமணப் பொருத்தம் தொடர்பாக, சில ஜோதிட வல்லுனர்கள் கூறியுள்ள விதி விலக்குகளை காணலாம்.

1. தினப் பொருத்தம் இல்லாவிட்டால் ராசி பொருத்தம் கண்டிப்பாக இருக்க வேண்டும்.
2. பெண் இராசி அதிபதியும், ஆண் இராசி அதிபதியும் நண்பர்களாக இருந்து, இராசி பொருத்தமும் இருந்தால், கணப் பொருத்தம் இல்லாவிட்டாலும் தோஷமில்லை.

3. இருவரின் இராசி அதிபதிகளும் நண்பர்களாய் இருந்து ரஜ்ஜு பொருத்தமும் இருந்தால், மகேந்திரப் பொருத்தம் இல்லாவிட்டாலும் தோஷமில்லை.
4. இராசிப் பொருத்தமும், இராசி அதிபதிப் பொருத்தமும் இருந்தால், ஸ்திரிதீர்க்கப் பொருத்தம் இல்லாவிட்டாலும் தோஷமில்லை.
5. இராசிப் பொருத்தம், இராசி அதிபதிப் பொருத்தமும் இல்லாவிட்டால் ஸ்திரிதீர்க்கப் பொருத்தம் இருக்க வேண்டும்.
6. வசியப் பொருத்தம் இருந்தாலும், வேதைப்பொருத்தம் இல்லாவிட்டால் இருவருக்கும் மன வேதனை தரும்.
7. நாடிப் பொருத்தம் இல்லாவிட்டால், ஆண், பெண் இருவருக்கும் தோஷமுண்டாகும். இருப்பினும், இராசிப் பொருத்தமும், ரஜ்ஜு பொருத்தமும் இருந்து, இருவர் ராசி அதிபதிகளும் ஒருவராகவே இருந்தாலோ (அல்லது) நண்பர்களாக இருந்தாலோ, நாடிப் பொருத்தம் இல்லாவிட்டாலும் தோஷமில்லை.
8. இராசிப் பொருத்தம் இல்லாவிட்டால் வசியப் பொருத்தம் இருக்க வேண்டும்.
9. வசியப் பொருத்தம் இருந்தால், மகேந்திரப் பொருத்தம் இல்லாவிட்டாலும் தோஷம் இல்லை.
10. வேதைப் பொருத்தம், தினப் பொருத்தத்திற்கு வலு சேர்க்கிறது.

**செவ்வாய் தோஷ விதி விலக்குகள்:**

1. செவ்வாய் 2 – 4 – 7 – 8 – 12 ம் வீடுகளிலொன்றிலிருந்து அவ்விடங்கள் சர இராசிகளாகிய மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகிய இராசிகளாயிருப்பின் செவ்வாய் தோஷம் நீங்கப்பெறும்.
2. செவ்வாய் 2 – 4 – 7 – 8– 12 ம் வீடுகளிலொன்றில் இருந்தாலும் அந்த செவ்வாய், குரு, புதன், சுக்கிரன், சந்திரன் ஆகிய இவர்களோடு சேர்ந்திருந்தாலும் (அல்லது) அவர்களுடைய பார்வையைப் பெற்றிருந்தாலும் தோஷத்தைச் செய்யாது.
3. தோஷமுடைய செவ்வாய் இராசிக் சக்கரத்தில் ஆட்சி வீடு, உச்ச வீடு நீச வீடு ஆகியவற்றிலும் (அல்லது) நவாம்சத்தில் ஸ்வநவாம்சம், உச்சாம்சம் முதலியவற்றில் இருந்தாலும் எக்காலத்தும் தோஷம் தராது நன்மையே செய்யும்.
4. சந்திர, சூரிய ராசிகளான கடகம், சிம்மம் ஆகிய இலக்கினங்களில் ஜனமான ஜாதகர்களுக்குச் செவ்வாய் யோககாரகர் எனவே எவ்வித தோஷத்தையும் தராது.

5. செவ்வாய் இருக்கும் இராசி நாதன் அவர் இருக்கும் இராசிக்கு 1 – 4 – 5 – 7 – 9 – 10ம் இடங்களிலிருந்தால் அந்த செவ்வாயால் தோஷமில்லை.
6. செவ்வாய் ஸ்திர இராசிகளான சிம்மம், விருச்சிகம் ஆகிய இராசிகளில் இருப்பின் தோஷம் தருவதில்லை.
7. செவ்வாய் பெண், ஆண் ஜாதகங்களில் மிதுனம், கன்னி ஆகிய ராசிகளிலிருந்து அது லக்கினத்துக்கு 2ம் இடமானால் தோஷமில்லை.
8. செவ்வாய் மேஷம், விருச்சிக இராசிகளிலிருந்து அது லக்கினத்துக்கு 4ம் இடமானால் தோஷமில்லை.
9. செவ்வாய் மகரம், கடகம் ஆகியவற்றிலிருந்து அது லக்கினத்திற்கு 7ம் இடமானால் தோஷமில்லை.
10. செவ்வாய் தனுசு, மீனம் இவைகளிலிருந்து லக்கினத்துக்கு 8ம் இடமானால் தோஷமில்லை.
11. செவ்வாய், சிம்மம், கும்பத்தில் இருந்தால் தோஷம் இல்லை.
12. செவ்வாய், தன் நண்பரான குருவின் வீடுகளான தனுசு, மீனத்தில் இருந்தால் தோஷமில்லை.

செவ்வாய் தோஷம் என்பதும் ஜோதிட நூல்களுக்கிடையே மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுவதால். இது ஆய்வுக்குறியதாகும்.

மேலும், செவ்வாய் தோஷம் பாவகஸ்புட ரீதியாகவே கணிக்கப்பட்டுப் பார்க்கப் பட வேண்டும்.

**நாகதோஷ விதி விலக்கு:**

ஆண், பெண் ஜாதகங்களில் 1, 2, 7, 8ல் ராகு/கேது இருப்பின் நாகதோஷம் ஏற்படும் என்றும் நாகதோஷ இருப்பின் அதே அமைப்புள்ள நாகதோஷவரனுக்கு திருமணம் செய்ய வேண்டும் என சிலர் நம்பியுள்ளனர். ஆனால் தற்கால ஜோதிட ஆய்வாளர்கள். அவ்வாறு இருக்க வேண்டிய அவசியமில்லை என கூறுகின்றனர். ஏனெனில், நாகதோஷம் ஒருவருக்கு இருந்து மற்றொருவருக்கு இல்லை எனினும், அவரது ஜாதகத்தில் 5 ம் இடம் வலிமை பெற்றால் திருமணம் செய்யலாம் என கூறுகின்றனர்.

**யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ, தோஷ விதிவிலக்குகள்:**

ஆண், பெண் ஜாதகங்களில் மேற்கண்ட பாவ கிரகங்கள் இருப்பின் மற்றொரு ஜாதகத்தில் அதே அமைப்பு இருக்கக் கூடாது. அதற்கு மாறாக 2, 7 ம் இடங்கள் சுத்தமாகவும், வலிமையுடனும் இருத்தல் அவசியம். 2ல் சுப கிரகங்கள் தனித்து இருக்கலாம்.

செவ்வாய்க்கு 2, 7, 8 ம் இடங்கள் மட்டுமே வலிமையான தோஷமாகும். அவ்வாறு இருப்பினும், மற்றொருவர் ஜாதகத்தில் செவ்வாய் 2, 7, 8ல் இருக்க வேண்டிய அவசியமில்லை.

## 5. தற்கால திருமணப் பொருத்தம்:

திருமணப்பொருத்தம் என்ற உடனேயே நம் நினைவில் வருவது தசவித திருமண பொருத்தம் தான். ஆனால் அதில் பல முரண்பாடான பொருத்தங்கள் உள்ளன. தற்காலத்திற்கு ஏற்றவாறு திருமணப் பொருத்தம் பார்க்கும் போது. பல ஜோதிடர்களின் அனுபவ ரீதியாக 1) ராசிபொருத்தம், 2) ராசி அதிபதி பொருத்தம், 3) நட்சத்திர அதிபதி பொருத்தம், 4) லக்னபொருத்தம் ஆகிய நான்கு பொருத்தங்களே மிகவும் பிரதானங்களாக உள்ளன. இது பல ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஜாதகங்களை ஆய்வு செய்து கண்டறிந்த உண்மைகளாகும்.

**1) ராசி பொருத்தம்:—**

ராசி பொருத்தம் என்றவுடன் தசவித திருமணப்பொருத்தத்தில் உள்ள ராசிப்பொருத்தம் என்று எண்ண வேண்டாம். இந்த பொருத்தமானது ஆண் அல்லது பெண் ஜாதகத்தில் உள்ள சந்திரன் இருக்கும் இடத்திலிருந்து பாவக ரீதியாக கணக்கிடும் பொருத்தமாகும். அதாவது ஒருவர் ஜாதகத்தில் உள்ள சந்திரனுக்கு மற்றொருவர் ஜாதகத்தில் உள்ள சந்திரன் 6,8,12 ம் பாவகங்களாக வருதல் கூடாது.

6ம் இடம் என்றால் ஒருவரின் சந்திரன் இருக்கும் இடத்திலிருந்து மற்றொருவரது சந்திரன் இருக்கும் முழுராசியையும் 6ம் பாவகமாக குறிப்பது அல்ல. சந்திரன் அமைந்த சரியான பாகையிலிருந்து மற்றவரின் சந்திரன் 138°வது பாகை முதல் 162°வது பாகைக்குள் அமைந்திருப்பின் இது சரியான 6ம் பாவகமாகும்.

இதே போல் 8ம் இடம் என்றால் ஒருவரது சந்திரன் இருக்கும் சரியான பாகையிலிருந்து மற்றொருவரின் சந்திரன் 198°வது பாகை முதல் 222°வது பாகைக்குள் அமைந்திருப்பின் இதுவே சரியான 8ம் பாவகமாகும். மேற்கண்ட 6ம் இடத்திற்கு மற்றொருவரின் ஜாதகம் 8ம் இடமாக மாறி அமையும் எனவே யார் ஜாதகத்தில் இருந்து கணக்கிட்டாலும் 138°வது பாகை முதல் 162°பாகை ஆகவோ 198°ம் பாகை முதல் 222° வது பாகை ஆக அமைதல் கூடாது.

இதன் பலன்கள் இவ்வாறு அமைந்து திருமணம் செய்து கொண்டவர்களின் வாழ்க்கையில் ஒற்றுமையின்மை, அடிக்கடி சண்டை சச்சரவுகள், கருத்து வேற்றுமைகள் வந்து பிரிவினைகள் தருகின்றன. தற்காலத்தில் நாம் காணும் டைவர்ஸ் கேஸ் உள்ள அனைவருக்கும் மேற்கண்ட அமைப்பு காணப்படுகிறது. அதிலும் யாருக்கு 8ம் பாவகமாக வருகிறதோ. அவர்கள் தான் பிரிவினைக்கு தூண்டு கோளாக இருக்கின்றனர். 6ம் பாவகமாக வருபவர்கள் பிரிந்துவிட்டாலும் மறுபடியும் இணைந்து வாழும் எண்ணம் உள்ளவர்களாகவே இருக்கின்றனர். ஆனால் 8ம் பாவகமாக அமைந்தவர்கள் ஒரு முறை பிரிந்து சென்றுவிட்டால் மறுபடி அதை பற்றி சிந்திப்பது கூட இல்லை.

இது போன்று 12ம் பாவகங்கள் என்றால் ஒருவரது ஜாதகத்தில் உள்ள சந்திரன் இருக்கும் சரியான பாகையிலிருந்து மற்றொருவரின் ஜாதகத்தில் உள்ள சந்திரன் 318°வது பாகை முதல் 342° வது பாகைகளுக்குள் அமைந்தால் அதுவே மிகச்சரியான 12ம் இடமாகும். இதில் ஒருவருக்கு 12ம் பாவகமாக அமையும் போது அது மற்றொருவருக்கு 2ம் பாவகமாக அமைவதால் இது போன்ற ஜாதக அமைப்புடன் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு முழுமையான தோஷம் செய்வதில்லை. 12ம் பாவகமாக அமைந்தவரின் திருமண வாழ்க்கை மட்டும் சரியாக அமையாமல் உள்ளது. 12ம் இடமாக வருபவர்கள் 2ம் இடமாக உள்ளவர்களின் கட்டளைகளுக்கும், தொந்தரவுகளுக்கும் அவர் எப்போதும் அடிபணிந்து கொண்டே இருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இவர்களுக்குள் அடிக்கடி கருத்து வேறுபாடுகள் வந்தாலும் பிரிந்து விடுவது இல்லை. ஒரே வீட்டில் சச்சரவுடனேயே திருமண வாழ்வை அனுபவிக்கிறார்கள். எனவே மேற்கண்ட ராசி பொருத்தமானது தற்காலத்தில் மிகவும் அவசியமானதொரு பொருத்தமாகும்.

**ராசி பொருத்தம் உள்ள அமைப்பு:–**

ஒருவரின் ஜாதகத்தில் சந்திரன் உள்ள சரியான பாகையிலிருந்து மற்றொருவரின் ஜாதகத்தில் உள்ள சந்திரன் முன்பின் 12° பாகைகளுக்குள் அமைந்தால் இதை இணைவாகவும், ஒரே பாவகமாகவும் கருதுதல் வேண்டும் இவ்வாறு அமைந்தால் ராசிப் பொருத்தம் மிகவும் சிறப்பு.

இதே போல் 48°வது பாகையிலிருந்து 132° வது பாகைகளுக்குள் அமைந்தால் உத்தமமான பொருத்தம்.

168°வது பாகையிலிருந்து 192° வது பாகைகளுக்குள் அமைந்தால் மிகவும் சிறப்பான பொருத்தம்.

228°வது பாகையிலிருந்து 312°வது பாகைகளுக்குள் அமைந்தால் அதுவும் உத்தமமான பொருத்தமாகும். மேற்கண்ட அமைப்புகளில் குறிப்பிடப்படாமல் உள்ள மற்ற 48° பாகைகள் மத்திமமான பலன்களை தருகின்றன. இதுவே சரியான ராசி பொருத்தமாகும்.

**2. ராசி அதிபதி பொருத்தம்:–**

இது நாம் அனைவரும் பயன்படுத்தும் தசவித திருமணப் பொருத்தத்தில் உள்ள அதே ராசியதிபதி பொருத்த முறையே தான் பின்பற்றப்பட வேண்டும். அதாவது ஆண் அல்லது பெண் ஜாதகத்தில் உள்ள ராசியின் அதிபதிகள் பகை கோள்களாக அமைதல் கூடாது.

**(எ.கா) சூரியனுக்கு** பகை கோள்களான சுக்ரன், சனி, தவிர மற்ற கோள்கள் ராசியதிபதியானால் அதிபதி பொருத்தம் உண்டு.

**சந்திரனுக்கு** மட்டும் அனைத்து ராசியதிபதிகளும் பொருந்தும். ஆனாலும் மேற்கண்ட ராசி பொருத்த முறை பார்த்தல் வேண்டும்.

**செவ்வாய்க்கு** பகை கோளான புதனுக்கு உள்ள மிதுனம், கன்னியை தவிர்த்தால் போதுமானது.

**புதனுக்கு** பகை கோளான சந்திரனின் கடகத்தை மட்டும் தவிர்த்தால் போதுமானது.

**குருவுக்கு** பகை கோள்களான சுக்ரன் மற்றும் புதனை தவிர்த்தல் வேண்டும்.

**சுக்ரனுக்கு** பகை கோள்களான சூரியன் மற்றும் சந்திரனை தவிர்த்தல் வேண்டும்.

**சனிக்கு** பகை கோள்களான சூரியன், சந்திரன் மற்றும் செவ்வாய் ஆகியவற்றில் செவ்வாயை மத்தியமாக கொண்டு மற்ற இரண்டு அதிபதிகளை மட்டும் தவிர்த்தால் போதுமானது. இந்த அமைப்பு ராகு, கேதுவுக்கு இல்லை.

**3) நட்சத்திர அதிபதிகள் பொருத்தம்:–**

திருமணத்திற்கு அனேக பொருத்தங்கள் இருந்தாலும் நட்சத்திர அதிபதிகள் பொருத்தமே மிகவும் முக்கியமானது. தசவித திருமணப் பொருத்தத்தில் ராசி பொருத்தம், ராசியதிபதி பொருத்தம் இருந்தும். நட்சத்திர அதிபதிகள் பகையாக இருந்து திருமணம் செய்தவர்கள் வாழ்க்கையில் பிரிவினை தருகின்றன. அல்லது ஒற்றுமை இல்லாமல் புளியம்பழமும் ஒடும் போல் வாழ்ந்து கொண்டுள்ளனர். இது பல ஜாதக அமைப்புகளை ஆய்வு செய்து கண்ட உண்மையாகும்.

நட்சத்திர அதிபதிகள் பொருத்தமானது சூரியனுடைய நட்சத்திரங்களான கிருத்திகை, உத்ரம், உத்திராடம் இவைகளுக்கு சனியினுடைய நட்சத்திரங்களான பூசம், அனுஷம், உத்திரட்டாதியும், கேதுவுனுடைய நட்சத்திரங்களான அசுவினி, மகம், மூலமும், ராகுவுனுடைய நட்சத்திரங்களான திருவாதிரை, சுவாதி, சதயம் மற்றும் சுக்ரனுடைய பரணி, பூசம், பூராடமும் பொருந்தாது. எனவே தசவித பொருத்தமே இருந்தாலும் நட்சத்திர அதிபதி பொருத்தம் இல்லாமல் திருமணம் செய்தல்கூடாது. இதே போல் நட்சத்திராதிபதிகள் நட்பு கோளாகி தசவித திருமணப் பொருத்தத்தில் பொருத்தமே இல்லை என்றாலும் திருமணம் செய்துவைக்கலாம். இது போன்ற அமைப்புகள் இருந்து திருமணம் செய்தவர்கள் ஒற்றுமையாகவே இருக்கிறார்கள். இதே போல் அனைத்து கோள்களுக்கும் அதனுடைய நட்பு கோள்களின் நட்சத்திரங்களை, பொருத்தம் இல்லை என்றாலும் திருமணம் செய்யலாம்.

**4) இலக்னப் பொருத்தம்:—**

இலக்னப் பொருத்தம் இதுவரையிலும் யாரும் பார்ப்பது இல்லை. ஆனால் தற்காலத்தில் கற்றுணர்ந்த நாம் அனைவரும் ராசியைப் போலவே லக்னமும் மிகவும் பிரதானமான ஒன்றாக கருதுகின்றோம். ஒருவரின் ஜாதகப்பலன்களை காணும் போது சந்திர ராசிக்கு இணையாகவும் அதற்கு முதன்மைதுவம் தந்தும் நாம் பலன் காண்கிறோம். எனவே தற்காலத்தில் திருமணப் பொருத்தத்தில் லக்னப் பொருத்தத்தையும் இணைத்து பொருத்தம் பார்க்கும் முறை மிக மிக அவசியமானது ஆகும்.

லக்னப் பொருத்தமானது முதற்கண்ட ராசிப்பொருத்தம் காண்பதற்கு கடைபிடிக்கப்பட்ட அதே வழிமுறைகளைதான் பின்பற்ற வேண்டும். அதாவது ஒருவரின் லக்னத்திலிருந்து அடுத்தவரின் லக்னம் 6,8,12 ஆக வருதல் கூடாது மற்றும் ராசிக்கு கூறிய 6ம் இடம் லக்னம் முதல் லக்னபாகை வரை 138°வது பாகை முதல் 162°வது பாகைக்குள்ளும்.

8ம் இடம் என்பது 198°வது பாகை முதல் 222°வது பாகைக்குள்ளும்.

12ம் இடம் என்பது 318°வது பாகை முதல் 342°வது பாகைக்குள்ளும் அமைதல் கூடாது. இது தீமையான பலன்களை தரும்.

**நன்மையான லக்ன பொருத்தம்:—**

ஒருவரின் லக்ன முதல் அடுத்தவரின் லக்னத்திற்கு முன் அல்லது பின்னால் 12° பாகைக்குள் அமைந்தால் அதை லக்ன இணைவு மற்றும் லக்ன பொருத்தம் உண்டு.

அதே போல் 48°வது பாகை முதல் 132°வது பாகைக்குள் அமைந்தால் மிகவும் உத்தமமான பொருத்தம் உண்டு.

168°வது பாகையிலிருந்து 192° வது பாகைகளுக்குள் அமைந்தால் மிகவும் சிறப்பான பொருத்தம்

மற்றும் 228°வது பாகை முதல் 312°வது பாகைகளுக்குள் அமைந்தால் அதுவும் உத்தமமான பொருத்தம்.

மேற்கண்ட அமைப்புகளில் குறிப்பிடப்படாமல் உள்ள மற்ற 48° பாகைகள் அனைத்தும் மத்திமமான பலன்களை செய்யும்.

இந்த மேற்கண்ட நான்கு பொருத்தங்கள் திருமணத்திற்கு மட்டுமல்லாது, காதலர்கள், தொழில் பார்ட்னர்கள், நண்பர்கள், உறவினர்கள், நிறுவனத்தில் பணிபுரிபவர்கள் ஆகியோர்களை தேர்வு செய்யும் போதும் கடைபிடித்தால் அவர்கள் என்றும் பிரியாமலும் நட்புடனும், நேர்மையாகவும் இருக்கிறார்கள்.

இதுவரை நாம் பார்த்த நான்குவித பொருத்தம் மட்டுமே போதுமானால் நாம் ஏற்கனவே பார்த்துவரும் தசவித பொருத்தத்தில் உள்ள முக்கியமான

பொருத்தங்கள் என்ன செய்வது என ஒரு சந்தேகம் எழலாம் அதற்கான சிறு விளக்கம் இங்கே.

**தினப்பொருத்தம்:–**

ஆண் மற்றும் பெண் ஜாதகத்தில் உள்ள 6ம் அதிபதிகள் மற்றும் 6ல் உள்ள கோள்களை கொண்டே அவர்களின் ஆரோக்கியத்தை நாம் அறிய வேண்டும்.

**கணப் பொருத்தம்:–**

மேற்கண்ட நான்குவித பொருத்தம் மூலமாகவே இருவருக்கும் மிகவும் அந்நியோன்யம் வந்து விடுகிறது. எனவே ஒருவருக்கு ஒருவர் அனுசரித்து வாழ்வதால் கணப் பொருத்தம் அவசியமில்லாமல் போகிறது.

**மகேந்திரப் பொருத்தம்:–**

இருவரின் ஜாதக அமைப்பில் உள்ள 5ம் பாவகம் 5ம் அதிபதிகள் மற்றும் குரு ஆகியோர் நீசமடையாமலும் 6,8,12 ல் மறையாமல் இருந்து பாவிகளின் இணைவு மற்றும் பார்வை இல்லாமல் இருந்தாலே கண்டிப்பாக வம்ச விருத்தி உண்டு எனவே மகேந்திர பொருத்தம் அவசியமில்லை.

**ஸ்திரி தீர்க்க பொருத்தம்:–**

ஆணினுடைய ஜாதகத்தில் உள்ள 2 மற்றும் 8ம் இடம் மற்றும் அதன் வலிமை கொண்டே ஸ்திரியினுடைய தீர்க்க ஆயுளை கூறுவதால் ஸ்திரி தீர்க்கமும் அவசியமில்லை.

**யோனிப் பொருத்தம்:–**

நட்சத்திரங்களின் தன்மையிலான அமைப்பில் மட்டுமே யோனிப் பொருத்தம் உள்ளது. நாம் மேற்கண்ட ராசி, ராசியதிபதி, நட்சத்திராதிபதி, லக்னம் ஆகியவை பொருந்தினாலே யோனி பொருத்தம் வந்துவிடும்.

**வசியப் பொருத்தம்:–**

மேற்கண்ட நான்குவித பொருத்த அமைப்பே வசியத்தை தருகின்றது.

**ரஜ்ஜு பொருத்தம்:–**

மிகவும் முக்கிய பொருத்தமாக அனைவரும் கருதும் ரஜ்ஜுவானது. ஆண் மற்றும் பெண் ஜாதகங்களில் உள்ள கிரக அமைப்பு நன்றாக இருந்து மாங்கல்யபலம் மற்றும் ஆயுள் பலமாக இருப்பின் ரஜ்ஜு பொருத்தம் அவசியமில்லை.

**வேதைப் பொருத்தம்:–**

நட்சத்திர அதிபதிகள் பொருத்தம் இருந்தாலே ஆண், பெண் இருவருக்கும் வேதைகள் ஏற்படாது. எனவே இதுவும் அவசியமில்லை.

குறிப்பு

........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................

## கூறு – 5

## முகூர்த்தம்

பண்டைய காலம் முதலாகவே சுப காரியங்கள் செய்வதற்கு ஏற்ற நல்ல நேரம் கணிப்பது என்பது மக்களின் வாழ்க்கையில் ஒரு முக்கியமான அங்கமாக இருந்து வருகிறது. தற்காலத்திலும் ஒரு நல்ல காரியம் தொடங்க நல்ல, சாதகமான நேரம் பார்ப்பது என்பது வழக்கத்தில் இருந்து வருகிறது. ஜோதிட சாஸ்திரத்திலும் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.

ஒவ்வொரு குடும்பத்திலும் தற்காலத்தில், விவாகம், கிரகப்பிரவேசம், காதுகுத்துதல் முதலான சமூகப் பழக்க வழக்கங்களும் அதை விழாக்களாகவே கொண்டாடும் வழக்கமும் இருக்கிறது. சமுதாயத்தில் ஒவ்வொருவரும் ஒரு சமயத்தில் இதில் ஏதாவது ஒன்றைக் கொண்டாடியே இருப்பார்கள் என்பது திண்ணம். இம்மாதிரி சமய சடங்குகளைச் செய்வதற்கு நல்ல நேரம் கணிக்க மக்கள் ஜோதிடரின் உதவியை நாடுகின்றனர். அம்மாதிரி சமயங்களில் மக்களுக்கு சரியான வழிகளைச் சொல்லிச் கொடுப்பது ஜோதிடர்களின் தலையாய கடமையாகிறது.

முகூர்த்தம் என்பது 2 நாழிகைகள் அதாவது 48 நிமிஷங்கள் கொண்டது ஒரு முகூர்த்தம் ஆகும். ஆனால் பொதுவாக நல்ல சாதகமான முகூர்த்தம் என்பது செய்யும் காலத்தில் கோள்களின் சாதகமான சுபகாரியங்கள் நிலைகளை கொண்டிருப்பது ஆகும். அவ்வாறு கோள்களின் நிலைகளைக் கணக்கிட்டு அவைகளின் சாதக பாதகங்களைத் தீர்மானிப்பதும், மேலும் அந்த சாதகமான நிலை ஒரு தனிமனிதனுக்கு எப்படி பொருந்தி வருகிறது என்பதையும் ஆராய வேண்டும். முகூர்த்தம் நிர்ணயிப்பதில் ஒளிக் கிரகங்களான சூரிய சந்திரர்களின் பங்கு மிக மிக முக்கியமானது. முகூர்த்தத்தின் அங்கங்களாகிய அயனம், மாதம், திதி, நட்சத்திரம், வாரம், லக்னம் முதலியன சூரிய சந்திரர்களின் சுழற்சியை வைத்தே கணக்கிடப்படுகிறது.

ஒவ்வொரு நாளும் நற்குணங்களும், தோஷங்களும் கலந்ததாகவே இருக்கும். நற்குணங்கள் மட்டிலும் உள்ள நாள் தேவர்களுக்கும் கிடைப்பது அரிது. எனவே நன்கு ஆராய்ந்து பார்த்து, நற்குணங்கள் அதிகமாகவும், தோஷங்கள் குறைந்தும் உள்ள நாளையே சுப காரியங்கள் செய்வதற்கு தேர்ந்தெடுக்க வேண்டும்.

முகூர்த்தம் கணிக்க பஞ்ச அங்கங்களான வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் முதலியன கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

மாணவர்களுக்கு வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் முதலியன பற்றி ஏற்கனவே தெரிந்திருக்கலாம். இருந்தாலும் நினைவிற்காக அவைபற்றி மிக சுருக்கமாக கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

## 1. முகூர்த்த விதிகள் :

ஒரு நாள் என்பது சூரியோதயம் முதல் மறுநாள் சூரியோதயம் வரை இருப்பதாகும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கோளின் பெயரிலேயே அமைந்திருக்கிறது. ஞாயிற்றுக் கிழமை சூரியனுக்கு, திங்கட்கிழமை சந்திரனுக்கும், செவ்வாய் கிழமை செவ்வாய்க்கு, புதன் கிழமை புதனுக்கு, வியாழக்கிழமை குருவிற்கு, வெள்ளிக்கிழமை சுக்கிரனுக்கும், சனிக்கிழமை சனிக்கு, இவ்வாறு ஒவ்வொரு கிழமையும் கோளின் பெரிலேயே அமைந்திருக்கிறது.

கிழமைகளில் புதன் கிழமையும், வியாழக் கிழமையும், வெள்ளிக்கிழமையும் முழுமையான சுப நாட்கள் ஆகும். செவ்வாய் கிழமையும், சனிக்கிழமையும் முழுமையாக அசுப நாட்கள், ஞாயிறு மற்றும் திங்கள் பாதி அசுபமாகவும் பாதி சுபமாகவும் ஆகிறது. கிழமைகளை ஒரு வகைகளாக நம் முன்னோர்கள் பிரித்திருக்கிறார்கள்.

| | | |
|---|---|---|
| 1. ஞாயிற்றுக்கிழமை | – | ஸ்திர வாரம் |
| 2. திங்கட்கிழமை | – | சர வாரம் |
| 3. செவ்வாய்கிழமை | – | உக்ரமான வாரம் |
| 4. புதன்கிழமை | – | சரம் ஸ்திரம் இரண்டும் கலந்தது |
| 5. வியாழக்கிழமை | – | லகு வாரம் |
| 6. வெள்ளிக்கிழமை | – | மிருது வாரம் |
| 7. சனிக்கிழமை | – | ஸ்திரமும் தீக்ஷண்யமும் கொண்டது |

நட்சத்திரங்களுக்கு ஏற்ற காரியங்களைப் போல வாரங்களுக்கும் அதே காரியங்கள் செய்யத்தக்கவையாகின்றன.

**திதி :** சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடைப்பட்ட தூரம் திதி ஆகும். சுக்ல பட்சம் 15 திதிகள், கிருஷ்ணபட்சம் 15 திதிகள், ஆகு 30 திதிகள் ஆகும்.

**திதிகள் கீழ்க்கண்ட ஐந்து வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.**

| | பெயர் | | திதிகள் |
|---|---|---|---|
| 1. | நந்தா | – | 1வது, 6வது, 11வது திதிகள் |
| 2. | பத்ரா | – | 2வது, 7வது, 12வது திதிகள் |
| 3. | ஜெயா | – | 3வது, 8வது, 13வது திதிகள் |
| 4. | ரிக்தா | – | 4வது, 9வது, 14வது திதிகள் |
| 5. | பூர்ணா | – | 5வது, 10வது, 15வது, 30வது திதிகள் |

**அவமாகம்**

ஒரு திதியானது சூரிய உதயத்திற்கு பின்னால் தொடங்கி மறு சூரிய உதயத்திற்குள் முடிந்துவிடுமானால் – அதாவது அந்த திதி ஏதாவது ஒரு சூரிய உதய காலத்தில் நடப்பில் இல்லை என்றால் அதை அவமாகம் என்கிறோம். அந்த திதியில் சுப காரியங்கள் செய்யக்கூடாது.

**திரிதின ஸ்பிரிக்**

எந்த ஒரு திதியாவது இரண்டு சூரிய உதயத்தின்போது நடப்பிலிருக்குமானால் – அதாவது ஒரு திதி ஒரு சூரிய உதயத்திற்கு முன்பு தொடங்கி அடுத்த சூரிய உதயத்திற்குப் பின்னால் முடியுமானால் அதை திரிதின ஸ்பிரிக் என்று அழைக்கிறோம். இந்த திதியும் சுபகாரியங்கள் செய்வதற்கு ஏற்ற திதி இல்லை.

**திதி கண்டாந்தம்**

பூரண திதியின் – அதாவது 5, 10, 15, 30 திதிகளின் கடைசி 1 நாழிகையும் (24 நிமிஷம்) நந்தா திதியின் – அதாவது 1, 6, 11 திதிகளின் ஆரம்ப 1 நாழிகையும் (24 நிமிஷம்) திதி கண்டாந்தம் எனப்படும். இந்த 48 நிமிஷங்களும் சுபகாரியங்கள் செய்ய உகந்தது அல்ல.

**நட்சத்திரங்கள்**

மொத்தம் 27 நட்சத்திரங்கள் உள்ளன. நட்சத்திரங்களைக் கீழ்க்காணும் 7 பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

**துருவ நட்சத்திரங்கள்**

உத்திரம் உத்திராடம், உத்திரட்டாதி, ரோகிணி ஆகியவை ஸ்திர நட்சத்திரங்கள் ஆகும்.

இந்த நக்ஷத்திரங்களில் ஸ்திரத் தன்மையுள்ள வேலைகள் அதாவது அஸ்திவாரம் தோண்டுதல், கிணறு தோண்டுதல், வீடு கட்டுதல், பூணுல் கல்யாணம், விவசாய, வேலை தொடங்குதல் முதலிய ஸ்திரத் தன்மையுள்ள வேலைகளை செய்யலாம்.

**சர நட்சத்திரங்கள்**

புனர்பூசம் சுவாதி திருஓணம் அவிட்டம் சதயம் ஆகியவை சர நட்சத்திரங்கள் எனப்படும். வாகனங்களை ஓட்டுதல் குதிரையேற்றம், யானையேற்றம், பிரயாணம் போல் நகர்ந்து கொண்டிருக்கும் வேலைகளை இந்த நட்சத்திரங்களில் செய்யலாம்.

**உக்ர – நட்சத்திரங்கள்**

பரணி, மகம், பூரம், பூராடம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்கள் உக்ரமான நக்ஷத்திரங்கள் ஆகும். இந்த நக்ஷத்திரங்கள் கொடூரகாரியங்களான வதைத்தல், ஏமாற்றுதல், நெருப்பை உபயோகித்துச் செய்யப்படும் வேலைகள்,

விஷத்தைப்பற்றி ஆராய்ச்சி, திருட்டு மற்றும் ஆயுதங்களை வாங்குதல் விற்றல், துப்பாக்கி லைசென்ஸ் வாங்குதல் முதலிய காரியங்களில் ஈடுபட ஏற்றவைகளாகும்.

**லகு நட்சத்திரங்கள்**

அஸ்வினி பூசம் அஸ்தம் ஆகியவை லகு நட்சத்திரங்கள் ஆகும். இவைகள் சிறிய, மிகவும் சுறுசுறுப்பாக இயங்கக்கூடியவை. இவைகளில் வியாபாரம் தொடங்குதல், கலைகளைப் பயில்தல், கலைகளை செய்து காண்பித்தல் முதலிய காரியங்கள் செய்யலாம்.

**மிருது நட்சத்திரங்கள்**

மிருகசீரிஷம் சித்திரை அனுஷம் ரேவதி ஆகியவை மிருது நட்சத்திரங்களாகும். இவைகள் சங்கீதம் கற்றுக் கொள்ளவும் பாடுவதற்கும் ஆடைகளை வாங்குவதற்கும், அணியவும், விளையாடவும், விளையாட்டினுடைய நுட்பங்களை அறியவும், நட்பு கொள்ளவும், ஆபரணங்களை அணியவும் உகந்த நட்சத்திரங்கள் ஆகும்.

**தீஷ்ண நட்சத்திரங்கள்**

திருவாதிரை ஆயில்யம் கேட்டை மூலம் ஆகியவை கசப்பானவையாகக் கருதப்படுகிறது. இந்த நட்சத்திரங்களில் மற்றவர்களைப் பயமுறுத்தும்படியாக உள்ள காரியத்தை செய்யவும் மிருகங்களைப் பழக்கவும், அது போன்ற கடினமான, கொடூரமான காரியங்களை செய்யலாம்.

**சாதாரண நட்சத்திரங்கள்**

கார்த்திகையும் விசாகமும் சாதாரண நட்சத்திரங்கள் ஆகும்.

மேலே கண்ட பிரிவுகளல்லாமல் நக்ஷத்திரங்களை மேல்நோக்கு, சமநோக்கு, கீழ்நோக்கு நஷத்திரங்கள் என்று மூன்று வகையாகப் பிரித்திருக்கிறார்கள். நம் முன்னோர்கள்.

**நக்ஷத்திர கண்டாந்தம்**

ஆயில்யம், கேட்டை, ரேவதி நட்சத்திரங்களின் கடைசி 2 நாழிகைகளும் (48 நிமிஷங்கள்) அசுவினி, மகம், மூலம் ஆகிய நட்சத்திரங்களின் ஆரம்ப 2 நாழிகைகளும் (48 நிமிடங்களும்) கண்டாந்தம் (சந்திப்பு முனைகள்) என்றழைக்கப்படுகின்றன. இச்சமயங்கள் சுப காரியங்களுக்கு ஏற்ற சமயங்கள் அல்ல.

**யோகம்:**

சூரியனும், சந்திரனும், வான்மண்டலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து குறிப்பிட்ட இடம் வரை சேர்ந்து செல்லும் தூரம் ஆகும்.

**சுப யோகங்கள்:**

ப்ரீதி, ஆயுஷ்மான், சௌபாக்யம், சோபனம், சுகர்மம், விருத்தி, ஹர்ஷணம், வஜ்ரம், சித்தி, வரீயான், சிவம், சித்தம், சாத்தியம், சுபம், சுப்பிரம், பிராம்யம், ஐந்திரம் ஆகிய யோகங்கள் சுப காரியங்கள் செய்ய ஏற்றவை ஆகும்.

**அசுப யோகங்கள்:** விஷ்கம்பம் அதிகண்டம், திருதி, சூலம், கண்டம், துருவம், வ்யாகாதம், வ்யாதீபாதம், பரிகம் வைதிருதீ ஆகிய யோகங்கள் சுபகாரியங்கள் செய்ய ஏற்றவை அல்ல.

**கரணம்:** திதியில் பாதி கரணம் ஆகும். அதாவது ஒரு திதிக்கு இரண்டு கரணங்கள் ஆகும். கரணங்கள் மொத்தம் 11 அதில் ஏழு சரகரணங்கள் நான்கு ஸ்திரகரணங்கள்.

**சர கரணங்கள் – 7**

1. பவம்
2. பாலவம்
3. கௌலவம்
4. தைதுலை
5. கரிசை
6. வனிசை
7. பத்திரை

**ஸ்திர கரணங்கள் – 4**

1. சகுனி
2. சதுஷ்பாதம்
3. நாகவம்
4. கிம்ஸ்துக்கினம்

ஸ்திர கரணங்கள் சுபகாரியங்களுக்கு விலக்கப்பட்டவை.

**அமிர்தாதி யோகம்**

நட்சத்திரங்களும் வாரங்களும் ஒன்று சேமிப்பது அமிர்தாதி யோகங்கள் உண்டாகிறது. அமிர்தாதி யோகங்களில் அமிர்தயோகம் சித்தயோகம், நற்காரியங்களுக்கு உகந்தவை. மரணயோகம், பிரபலாரிஷ்டயோகம் சுபகாரியங்களுக்கு தவிர்க்கப்பட வேண்டும். இவைகளின் விபரங்கள் ஜோதிடவியல் அடிப்படை கோட்பாடுகள் பாடத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**குரு – சுக்ரன் அஸ்தங்கதம்**

குருவோ அல்லது சுக்கிரனோ சூரியனுக்கு மிக அருகாமையில் நெருங்கி வந்தால் குருவும் சுக்ரனும் பலமிழக்கின்றன. இதையே அஸ்தங்கம் என்கிறோம். அம்மாதிரி சமயங்கள் சுபகாரியங்கள் செய்வதற்கு தவிர்க்கப்பட வேண்டும்.

**லக்னம்**

லக்னம் என்பது முகூர்த்தத்திற்கு மிக மிக முக்கியமாகப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். லக்ன சுத்தி என்பது லக்னத்திற்கு கோள்கள் சாதகமான நிலையில் இருப்பது ஆகும்.

முகூர்த்தத்திற்கு ஏற்ற லக்னங்கள்: ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மீனம், கும்பம் ஆகியவை முகூர்த்தத்திற்கு உகந்தவை.

**2.தாராபலன்**

தாராபலன் என்பது நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு முகூர்த்தத்தை நிச்சயிப்பதில் ஒருமுறை.

தாராபலனை கீழ்க்காணும் 9 வகைகளாகப் பிரிக்கலாம்.

1. ஜென்ம தாரை, 2.சம்பத் தாரை, 3.விபத் தாரை, 4.ஷேம தாரை, 5.ப்ரயக் தாரை, 6.சாதக தாரை 7.வதை தாரை, 8.மைத்ர தாரை, 9.பரமமைத் தாரை

தாரா என்றால் நட்சத்திரம். ஒரு சுபகாரியம் செய்வதற்கு நாள் குறிக்கும் சமயம் தாராபலம் அறிதல் அவசியமாகும்.

ஒருவரது ஜென்ம நட்சத்திரம் முதல் சுபகாரியம் செய்யவிருக்கும் நாள் அன்று உள்ள நட்சத்திரம் வரை எண்ணி ஒன்பதுக்கு மேல் போனால் ஒன்பதால் வகுத்து ஈவு நீக்கி மீதி 2, 4, 6, 8, 9 வந்தால் தாராபலம் உண்டு உத்தமம், 1, 3, 5, 7 வந்தால் தாராபலம் இல்லை அதமம். மீதி வரும் எண்ணிற்கு தக்கவாறு ஏற்படும் பலன்கள் பின்வருமாறு.

மீதி 1 வந்தால் ஜென்ம தாரை. உடல நலிவும், செலவும் ஏற்படும்.

மீதி 2 வந்தால் சம்பத் தாரை. அதிர்ஷ்டம், செல்வம் உண்டாகும்.

மீதி 3 வந்தால் விபத்தாரை. வாகனவிபத்து, திருடர்பயம், பொருள் விரயம்.

மீதி 4 வந்தால் க்ஷேம தாரை. வாழ்க்கையில் செழுமையும், செல்வ வளர்ச்சியும், சிறந்த உடல ஆரோக்கியமும் உருவாகும்.

மீதி 5 வந்தால் பிரத்யக் தாரை. எல்லா செயல்களிலும் தடைகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்.

மீதி 6 வந்தால் சாதக தாரை. அனைவரிடமிருந்து உதவிகள் கிடைக்கும். எல்லா செயல்களிலும் வெற்றி உண்டாகும்.

மீதி 7 வந்தால் வதை தாரை. மனக்கஷ்டம், பணக்கட்ஷடம், அலைச்சல்.

மீதி 8 வந்தால் மைத்ர தாரை. நல்லுறவும், மன மகிழ்ச்சியும் உண்டாகும்.

மீதி 9 வந்தால் பரம மைத்ர தாரை என்று பெயர். அனைவரிடமும் நட்பு, ஆதரவு, அனுசரனை உண்டாகும்.

மேற்கண்ட தாரைகளில் சுபகாரியங்கள் செய்தே ஆகவேண்டும் என்றால் கீழ்க்கண்டபடி தானம் கொடுத்துவிட்டு சுப காரியங்கள் செய்யலாம்.

1. ஜன்ம தாரைக்கு – காய்கறி தானம்
2. விபத் தாரைக்கு – வெல்ல தானம்
3. ப்ரத்யக் தாரைக்கு – உப்பு தானம்
4. வதை தாரைக்கு – அட்சதை தானம்

| தாரா பலன் அட்டவணை | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜென்ம நக்ஷத்திர | அன்றைய நடப்பு நக்ஷத்திரம் | | | | | | | | |
| | அசுவினி மகம் மூலம் | பரணி பூரம் பூராடம் | கிருத்தி உத்திரம் உத்திராடம் | ரோகிணி அஸ்தம் திருஓணம் | மிருகசீரிட சித்திரை அவிட்டம் | திருவாதி சுவாதி சதயம் | புனர்பூசம் விசாகம் பூரட்டாதி | பூசம் அனுஷம் உத்திரட்டாதி | ஆயில்யம் கேட்டை ரேவதி |
| அசுவி மகம் மூலம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| பரணி பூரம் பூராடம் | 9 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| கிருத்தி உத்திரம் உத்திரா | 8 | 9 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| ரோகி அஸ்தம் திருஓண | 7 | 8 | 9 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| மிருகசீரி சித்திரை அவிட்ட | 6 | 7 | 8 | 9 | 1 | 2 | 3 | 4 | 5 |
| திருவா சுவாதி சதயம் | 5 | 6 | 7 | 8 | 9 | 1 | 2 | 3 | 4 |
| புனர்பூச விசாகம் பூரட்டா | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 1 | 2 | 3 |
| பூசம் அனுஷம் உத்திரட் | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 1 | 2 |
| ஆயில்யம் கேட்டை ரேவதி | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 1 |

**சந்திரா பலன் :**

ஒரு சுப காரியத்திற்கு நல்ல நாள் தேர்ந்தெடுக்கும் பொழுது சந்திர பலனும் இருக்கிறதா என்று அறிய வேண்டும். ஒருவரது ஜென்ம இராசி முதல் சுபகாாயம் செய்யவிருக்கும் நாள் அன்று சந்திரன் நிற்கும் இராசி வரை எண்ணினால் 1, 3, 6, 7, 10, 11 வந்தால் சந்திர பலன் உண்டு. உத்தமம். 2, 4, 5, 8, 9, 12 வந்தால் சந்திர பலன் இல்லை. அதமம்.

**சந்திரா பலன் அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| 1. | முதலாவது ராசி | – | சிறப்பான உடல் ஆரோக்யம் |
| 2. | இரண்டாவது ராசி | – | பொருள் இழப்பு |
| 3. | மூன்றாவது ராசி | – | பொருள் லாபம் |
| 4. | நான்காவது ராசி | – | நோய், பயம், அச்சம் |
| 5. | ஐந்தாவது ராசி | – | அனைத்திலும் தோல்வி |
| 6. | ஆறாவது ராசி | – | எதிரிகள் தோல்வி, அனைத்திலும் வெற்றி |
| 7. | ஏழாவது ராசி | – | சிறப்பான உடல் ஆரோக்கியம் |
| 8. | எட்டாவது ராசி | – | எதிர்பாராத சம்பவங்கள், உடல் சோர்வு, மனக்குழப்பம் |
| 9. | ஒன்பதாவது ராசி | – | காரிய தடை |
| 10. | பத்தாவது ராசி | – | விருப்பம் நிறைவேறுதல் |
| 11. | பதினொன்றாவது ராசி | – | சிறப்பான தொழில் நிலை |
| 12. | பன்னிரெண்டாவது ராசி | – | செலவினங்கள் |

| சந்திரா பலன் அட்டவணை | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜெனன ராசி ↓ | அன்றைய சந்திரன் உள்ள ராசி | | | | | | | | | | | | |
| | மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் | ஜனன இராசி முதல் அன்றைய சந்திரன் இருக்கிற இராசி வரை எண்ணி கண்ட தொகைக்குவி பரம். |
| மேஷம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 1. தேக சௌக்யம் |
| ரிஷபம் | 12 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 2. தன இழப்பு |
| மிதுனம் | 11 | 12 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 3–திரவிய லாபம் |
| கடகம் | 10 | 11 | 12 | 1 | 2 | 3 | 4 | 5 | | 7 | 8 | 9 | 4–ரோக பயம் |
| சிம்மம் | 9 | 10 | 11 | 12 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 5 – காரிய விகல்பம் |
| கன்னி | 8 | 9 | 10 | 11 | 12 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 6– சத்ரு நாசம் |
| துலாம் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 –சௌக்ய விருத்தி |
| விருச்சி கம் | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 1 | 2 | 3 | 4 | 5 | 8–ரோக விருத்தி |
| தனுசு | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 1 | 2 | 3 | 4 | 9–காரிய தாமதம் |
| மகரம் | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 1 | 2 | 3 | 10 – உத்யோக விருத்தி |
| கும்பம் | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 1 | 2 | 11–இஷ்ட சித்தி |
| மீனம் | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 1 | 12 – தன விரயம் |

**பஞ்சகம்:**

ஒரு சுப காரியம் செய்ய தாராபலம், சந்திர பலன் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நல்ல நாள் தேர்ந்தெடுத்த பிறகு, நல்ல நேரம் தேர்ந்தெடுக்க பயன்படுவது பஞ்சகமாகும். பஞ்சகம் என்றால் ஐந்தை தன்னுள் கொண்டது என்று பொருள். அதாவது 1. கிழமை 2, திதி, 3.நட்சத்திரம், 4. இலக்கினம், 5. இலக்கின துருவம் ஆகிய ஐந்தை உள்ளடக்கியது பஞ்சகம் என்று கூறப்படும்.

**பஞ்சகம் பார்க்கும் முறை:**

1. ஞாயிற்றுக்கிழமை முதல் சுப காரியம் நடக்கவிருக்கும் நாள் வரை உள்ள கிழமைகளை எண்ண வேண்டும்.
2. பிரதமை முதல் சுப காரியம் நடக்கவிருக்கும் நாள் அன்று நடப்பல் உள்ள திதிவரை எண்ண வேண்டும்.
3. அசுபதி நட்சத்திரம் முதல் சுப காரியம் நடக்கவிருக்கும் நாள் அன்று நடப்பில் உள்ள நட்சத்திரம் வரை எண்ண வேண்டும்.
4. மேஷம் முதல் சுப காரியத்திற்கு குறிக்கப்பட உள்ள இலக்கினம் வரை எண்ண வேண்டும்.
5. இலக்கின துருவம் : மேஷம் 5, ரிஷபம் – 7, மகரம் 2, கும்பம் – 4, மீனம் – 6 ஆகும். பிற இலக்கினங்களுக்கு துருவம் இல்லை.

மேற்கண்ட ஐந்தும் கூட்டி வரும் எண் ஒன்பதற்கு மேல் போனால் ஒன்பதால் வகுத்து ஈவு நீக்கி மீதி 0, 3, 5, 7, வந்தால் நிஷ் பஞ்சகம் எனப்படும். உத்தமம். சுபகாரியம் நடத்த சிறப்பான நேரம் ஆகும். மீதி 1, 2, 4, 6, 8 வந்தால் அந்த நேரம் சிறப்பில்லை என்று கொள்ள வேண்டும்.

மீதி 0 வந்தால் நிஷ் பஞ்சகம்

மீதி 1 வந்தால் மிருத்யு (மரணம்) பஞ்சகம்.

மீதி 2 வந்தால் அக்கினி (நெருப்பு) பஞ்சகம்.

மீதி 3 வந்தால் நிஷ் பஞ்சகம்

மீதி 4 வந்தால் ராஜ (அரச தண்டனை) பஞ்சகம்

மீதி 5 வந்தால் நிஷ் பஞ்சகம்

மீதி 6 வந்தால் சோர (வஞ்சகம், திருட்டு) பஞ்சகம்

மீதி 7 வந்தால் நிஷ் பஞ்சகம்

மீதி 8 வந்தால் ரோக (நோய்) பஞ்சகம்

சுபகாரியம் நடத்த நேரம் தேர்ந்தெடுக்கும் பொழுது நிஷ் பஞ்சகம் அமையாவிட்டாலும், சில பொருட்களை தானம் செய்வதன் மூலம் பரிகாரம் செய்து சுபகாரியங்கள் செய்யலாம் என ஜோதிட நூல்கள் கூறுகின்றன.

| பஞ்சகம் | தானம் தரும் பொருட்கள் |
|---|---|
| மிருத்யு பஞ்சகம் | நவரத்தினம் |
| அக்னி பஞ்சகம் | சந்தனம் |
| ராஜ பஞ்சகம் | எலுமிச்சைபழம் |
| சோர பஞ்சகம் | குத்துவிளக்கு |
| ரோக பஞ்சகம் | நவதானியம் |

பொதுவாக பெரும்பாலும் கடைபிடிக்கின்ற வழிமுறை இங்கு கூறப்பட்டுள்ளது. சில நூல்களில் துருவம் மூன்று விதமாக கணக்கிடப்படுவதாக கூறப்படுகிறது.

| **இலக்கின துருவம்** | **பஞ்சக துருவம்** | **கிழமை துருவம்** |
|---|---|---|
| மேஷம் – சிம்மம் = 4<br>ரிஷபம் – கடகம் = 5<br>மிதுனம் – மகரம் = 6<br>துலாம் – கும்பம் = 2<br>கன்னி – மீனம் = 3<br>விருச்சிகம் – தனுசு = 1 | மிருத்யு பஞ்சகம் = 4<br>சோர பஞ்சகம் = 5<br>இராஜ பஞ்சகம் = 10<br>அக்னி பஞ்சகம் = 10<br>ரோக பஞ்சகம் = 15 | ஞாயிறு = 15<br>திங்கள் = 10<br>செவ்வாய் = 12<br>புதன் = 3<br>வியாழன் = 8<br>வெள்ளி = 8<br>சனி = 3 |

பஞ்சாங்க புத்தகத்தில் காணப்படும் விபரங்கள் என்று இதுவரை கூறப்பட்டவை சற்றேறக்குறைய எல்லா வாக்கியப் பஞ்சாங்கம் மற்றும் திருக்கணித முறைப்படி கணிக்கப்பட்டுள்ள பஞ்சாங்கங்களில் காணப்படும் விபரங்களாகும்.

இவை தவிர, திருக்கணித பஞ்சாங்கங்களில் மேலும் சில விபரங்கள் இடம் பெற்றிருக்கும் அவை பின்வருமாறு :

இந்திய பொது நேரம் காலை மணி 05.30க்கு சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, யுரேனஸ், நெப்டியூன், புளுட்டோ ஆகிய கோள்கள் நிற்கும் பாகைகலைகள் கொடுக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு கோளும் காலை 05.30 மணிக்கு நிற்கும் நிலையிலிருந்து மறுநாள் காலை 05.30 மணிக்கு நிற்கப்போகும் நிலைக்கும் உள்ள வித்தியாசமே தினகதியாகும். தினகதி என்பது கோள்கள் 24 மணி நேரத்தில் செல்லக்கூடிய தூரமாகும். சில திருக்கணித பஞ்சாங்கங்களில் தினகதி தனி அட்டவணையாகக் கொடுக்கப்பட்டிருக்கும், அவ்வாறு கொடுக்கப்படாவிட்டால், கோள்களின் தினகதி அறிய, அடுத்த நாள் காலை கொடுக்கப்பட்டிருக்கும் பாகை – கலையிலிருந்து, அன்றைய தினத்தில் நிற்கும் பாகை – கலையை கழிக்க தினகதி கிடைக்கும்.

கடிகார மணியை நட்சத்திர ஹோராமணியாக மாற்றும் அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது. வான்மண்டலத்தில் பூமி செல்லும் பாதைக்கு கிராந்தி என்று பெயர். இந்த பாதைக்கு வடக்கிலும், தெற்கிலும் கோள்கள் நிற்கும் நிலையை குறிக்கும், கிராந்தி (டெக்லினேஷன்ஸ்) என்ற அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.

ஆகாய காட்சி எனப்படும் சமாகமங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. சூரியனுடன் பிறகிரகங்கள் சேர்வதை அஸ்தமனம் என்று கூறப்படும். அஸ்தமனம் பெற்ற கிரகங்கள் பலம் இழக்கின்றன. சந்திரனுடன் பிறகிரகங்கள் சேர்வதை சமாகமம் என்று கூறப்படும். சமாகமம் பெற்ற கிரகங்களுக்கு பலம் அதிகம்.

### 3. இலக்ன தேர்வுகள்:

எந்த ஒரு சுபகாரியம் செய்வதற்கும் பஞ்சாங்கத்தில் உள்ள பொதுவான நல்ல நேரத்தை பயன்படுத்தி செய்யக்கூடாது. நாம் என்ன காரியம் செய்யவிருக்கிறோமோ அந்த காரிய பாவகம் சுத்தமாகவும், அதில் பாவகிரகங்கள் இல்லாமலும், அந்த பாவகத்தை சுபகோள் பார்வையும் அமையும்படி தேர்வு செய்தல் வேண்டும். எந்தெந்த காரியங்களுக்கு எதை தேர்வு செய்வது என அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.

| சுபகாரியங்கள் | நக்ஷத்திரம் | திதி | லக்கினம் | விசேஷ விதிகள் |
|---|---|---|---|---|
| கோயில் கும்பாபிஷேகம் செய்ய | ரோ, புனர், மிருகசீர்ஷம், ரேவதி, ஹஸ்தம், உத்திரம், உத்திரட்டாதி, சுவாதி, உத்தமம், திருவோணம், சித், அசு, மூல, அவி, அனுஷம், மத்யமம் | துவி, திரு, பஞ், சஷ், சப், தச, ஏகா, திரயோதசி | ஸ்திர ராசிகள் உத்தமம், துர்கை போன்ற ஸ்திரி தேவதைக்கு உபராசிகள் நல்லவை. சர ராசிகள் கூடாது | 1) சித்திரை, வைகாசி, ஆனி, தை, பங்குனி மாதங்களில் செய்ய வேண்டும்.<br>2) குரு, சுக்ர அஸ்தமனம் கூடாது.<br>3) யஜமானுக்கு அனுகூலமான நக்ஷத்திரம் வேண்டும்.<br>4) லக்கினத்தில் பாபக் கிரகங்கள் கூடாது.<br>5) 7 நிமிடம் சுபர் நன்று 8, 12 நிமிடம் சுத்தம். |
| மாங்கலியஞ் செய்ய | ரோ, மிரு, மக, சுவா, அனு, உத், அஸ், மூல, உத்ரா, திருஓ, சதய | து, தி, ப, சப், தச, ஏகா, துவா, திர | ரி, மி, கட, கன், து, தன, மிது | 2, 8–மிடம் இடம் சுத்தமாக இருக்க வேண்டும். |
| விவாகம் | ரோ, மி, ம, உ, அஸ், சுவா, அனு, முல, உத்ரா, திஓ, சத, உட், ரே, அசு, புனர்வசு, பூச, சித், அவி, சத் | து, தி, ப, சஷ், சப், தச, ஏகா, துவா, திர | ரி, மி, கட, கன், து, தனு, கும் | 7, 8மிடம் சுத்தம். 8ல் குரு கெடுதி, 6–8ல் புதன், சுக்கிரன் கெடுதி, மூத்த புத்திரனுக்கும், மூத்த புத்தரிக்கும், ஜன்ம வாரம், ஜன்ம நக்ஷத்திரம், ஆனி மாதம் இவைகளில் விவாகம் செய்ய கூடாது. |

| | | | | |
|---|---|---|---|---|
| நிஷேகம் | ரோ, உத், அஸ், சுவ, அனு, உத்ரா, திஓ, சதய உட், ரேவ அசு, மிரு, புன, பூச, சித், அவி | து, தி, ப, சஷ், சப், தச, ஏகா, துவா, திர | சுப சம்பந்தமுள்ள அனைத்து ராசிகளும் நன்று. | 1–7–8ம் இடம் சுத்தம், ஜன்ம நட்சத்திரம் கூடாது. |
| பும்சவனம் | அசு, ரோ, மி, புன, பூச, உத், அஸ், சி, சு, அனு, மூல, திஓ, அவி, சத, உத் | து, தி, ப, சஷ், சப், தச, ஏகா, துவா, திர | மே, ரி, து, த, ம, கு, மீ | 3ம் மாதத்தில் நெய்தல், 8ம் இடம் சுத்தம். |
| சீமந்தம் | ரோ, மி, புன, பூச, உத், அஸ், உரா, திஓ, உட், ரேவ, சித், சுவா, அனு | து, தி, பஞ்ச, சப், ஏகா, திர | மே, ரி, மி, கட, கன், து, த, ம, கு, மீ | 8–9ம் இடம் சுத்தி, பகல் 12க்குள் முடிக்க வேண்டும். |
| தொட்டிலில் குழந்தையை விட | ரோ, திருவா, பூச, உத், உரா, திஓ, அவி, சத, உட | து, தி, பஞ், சப், ஏகா, தரி | து, தி, பஞ்ச, ச, தச, ஏகா, த்வா, திர | 8–ம் இடம் சுதம் |
| காது குத்து | மிரு, திவா, புன, பூச, உத், அஸ், சித், உரா, திஓ, அவி, உட், ரேவ | து, தி, ப, சஷ், சப், தச, ஏகா, த்வா, திர | 8மிடம் சுத்தமாயுள்ள சுபர்பார்த்த லக்கினம் | 8–ம் இடம் சுத்தி. பகலில் இரண்டு திதி, நட்சத்திரங்கள் சேரும் தினம் கூடாது. |
| வித்தியாரம்பம் செய்ய | அசு, ரோகி, திருவா, புன, பூச, உத், அஸ், சித், சுவா, அனு, திஓ, அவி, சத, உட், ரேவ | து, தி, ப, சஷ், சப், தச, ஏகா, திர | மே, மிது, கட, கன், து, தனு, மக, மீ | 4 – 8 ம் இடம் சுத்தமாயிருக்க வேண்டும். |
| உபநயனம் | அசு, ரோ, மிரு, புன, பூச, உத், அஸ், சித், சுவா, அனு, உரா, திஓ, உட், ரேவ | து, தி, ப, சஷ், சப், தச, த்வா, திர | ரி, மி, கட, கன், து, த, மீன | 8–ம் இடம் சுத்தம், உத்தராயமணத்தில் செய்க. சாம வேதிகள் செவ்வாயும், ருக்வேதிகள் குருவும், யஜுர்வேதிகள் சுக்கிரனும் அஸ்தமான அ) நீசம் இருக்கும் போது செய்யலாகாது. |

| | | | | |
|---|---|---|---|---|
| புது வாகனமேற | அசு, ரோ, மிரு, புன, மக, உத், அஸ், சித், சுவா, அனு, உரா, திஓ, உட், ரேவ | சஷ்டி, ஏகா, பௌ | மி, கட, சி, கன், வி, த, மீ | சூரிய உதயத்தில் ஏறல் நன்று. |
| உழவு ஆரம்பிக்க | ரோகி, புன, பூசம், உத், அஸ்தம், மூலம், உரா, உட், ரேவ | திரு, ப, சப், ஏ, திர | ரி, மி, கட, மக, மீன | ஆகாச பாதாள யோகினி கூடாது. |
| எருவிட | திருவா, புனர், பூச, உத், சித், அனு, உரா, உட் | து, திரு, பஞ், சஷ், சப், தசமி, ஏ, துவா, திர | ரி, மி, கட, மக, மீன | செவ்வாய் கிழமை நன்று. |
| விதை விதைக்க | 1) ரோகி, பூச, மக, உத், அஸ், சுவா, அனு, மு, உரா, திஓ, சத, உட் ரேவ<br>2) அசு, மிரு, புன, அவி | 1. தி, ப, சப், ஏ, திர, பௌ<br>2. து, சஷ், தச | 1. ரி, கட, சிம், மீன<br>2. மிது, து | 8ம் இடம் சுத்தம், ஆகாச பாதாள யோகினி கூடாது (பி) ஜென்ம நட்சத்திரம் கூடாது. |
| கதிரறுக்க | பர, ரோ, மிரு, திரு, பூச, மக, உத், அஸ், விசா, அனு, உரா, திஓ, உட், ரேவ | து, தி, ப, சஷ், சப், தச, ஏ, து, திர, பௌ | ரி, கட, சி, விரு, கும் | சனிக்கிழமை நன்று. சுமங்கலியாவது, கன்னியாவதுவைத்தல். |
| தானியம் களஞ்சியத்தில் வைத்தல் | பர, ரோ, மிரு, திரு, மக, உத், அஸ், அனு, உரா, திஓ, உட் | து, தி, ப, சப், தசமி, ஏ, துவா, திர, பௌ | ரி, மி, சிம், கன், வி, தனு, கும், மீன | – – – – – |
| தானியம் செலவிட | அசு, ரோ, மிரு, புன, மூச, மக, உத், அஸ், சத், சுவா | து, தி, ப, சப், தச, ஏ, துவா, திர | ரி, மி, சிம், கன், வி, தனு, கும், மீன | சனிக்கிழமை நன்று. வெள்ளிக்கிழமை கூடாது. |

| | | | | |
|---|---|---|---|---|
| மாடு முதலானவை வாங்கல் கொடுத்தல் | விசா, அனு, மூலம், உரா, திஓ, அவி, சத, உட், ரேவ, அசு, கிரு, ரோ, மிரு, புன, பூச, மக, பூரா, திஓ, அவி, பூர, ரேவ | து, தி, ப, சஷ், சப், தச, ஏ, துவா, திர, பௌ | சிம், தனு, மகர | 8–ம் இடம் சுத்தி, மாடு கொடுத்தலுக்கு புதன்கிழமை, வெள்ளிக்கிழமை கூடாது. |
| புது ஆபரணம் அணிய | அசு, ரோகி, மிருஸ, பூச, அஸ், சித், அனு, ரேவ | ப, சஷ், தச, ஏகா, பௌ | ரி, மி, கன், தனு, மீன | சனிக்கிழமை நன்று. இது ஸ்திரீகளுக்கு விசேஷித்தது. |
| கோடி உடுத்தல் | அசு, ரோ, புன, பூச ,உத், அஸ், சித், சுவா, வி, அனு, உரா, வி, உட், ரேவ | து, தி, ப, சப், தசமி, ஏகா, துவா, திர | ரி, மி, கன், வி, த, கும், மீ | 8– ம் இடம் சுத்தம் |
| கிரக ஆரம்பம் | ரோ, மிரு, புன, பூச, உத், அஸ், அனு, உரா, திஓ, சதய, உட், ரேவ | து, தி, ப, சப், தச, ஏகா, தி | ரி, மி, சிம், கன், து, தனு, கும், மீன | 8, 12ம் இடம் சுத்தி |
| கிரகப் பிரவேசம் | ரோ, மிரு, பூன, பூச, உத், அஸ், அனு, உரா, திஓ, சதய, உட், ரேவ | து, தி, ப, சப், தச, ஏகா, திர | ரி, மி, சிம், கன், து, தனு, கும், மீன | குரு சுக்கிர அஸ்தமனமும், வெள்ளி எதிரும் கூடாத. 8–12ம் இடம் சுத்தம். |
| வியாதியஸ்தர் மருந்துண்ணல் | அசு, ரோ, மிரு, புன, பூச, உத், அஸ், சித், சுவா, அனு, உரா, திஓ, அவி, சதய, உட், ரேவ | து, தி, பஞ், சப், ஏகா, துவா, திர | மே. கடக. துலா, மக | ஞாயிறு நன்று. 8–ம் இடம் சுத்தம் |

| | | | | |
|---|---|---|---|---|
| வியாதியஸ்தர் குளித்தல் | அசு, பர, கிரு, மிரு, திரு, பூச, பூரம், அஸ், சித், விசா, சுவா, அனு, கேட், மூலம், பூரா, திஓ, அவி, சத, பூட் | து, தி, ப, சஷ், சப், தச, ஏகா, துவா, திர | மே, மி, சி, கன்னி, தனு, மக, மீன | பகற் காலம் நன்று. செவ்வாய், புதன், வியாழன் நன்று. |
| பிரயாணம் | அசு, ரோ, மிரு, புன, பூச, உத், அஸ், அனு, மூல, உரா, திஓ, அவி, சதயம், உட், ரேவ | து, தி, ப, சப், தச, ஏகா, திர | மேஷ, மி, கட, கன், து, தனு, மக, மீ | சூலம், யோகினி கூடாது. புதன், வியாழன், வெள்ளிக் கிழமை நன்று (சி) |
| கடன் தீர்க்க | அசுவினி, அனுஷம் | நவமி, சதுர்த்தி, சதுர்த்தசி | மேஷ, விருச், 8ல் பாபிகள் நன்று. | செவ், ஞாயிறு, சனி நன்று, விஷ்டி, சனி பிரதோஷ காலம் மற்றும் சர லக்கினம். |
| தொழில் தொடங்க | அசு, பூச, உத், அஸ், சுவா, மூல, திஓ, சத, உட் | பஞ், சப், தச, ஏகா, திர | மே, மி, சி, க, து, மகர, மீன | ஜென்ம வாரம் கூடாது. 4, 10ம் இடம் சுத்தம். |

**4. சுப காரிய தேர்வுக்கான விதிமுறைகள்:**

சுப காரியங்களை செய்ய நம்மிடம் கேட்க வரும் நபர்களிடம் எந்த விதமான காரியம் என நிதானமாக கேட்டறிந்து, அந்த நிகழ்வுக்கான காரியங்கள் என்னென்ன அதை வரிசைப்படி எவ்வாறு செய்தல் வேண்டும் என்பதை தீர்க்கமாக முடிவு செய்து பின் பலன் உரைக்க வேண்டும்.

வீடு கட்டுவதற்கு செவ்வாய் மற்றும் சுக்ரன் நல்ல நிலையில் வலிமை பெற்று இருக்க வேண்டும். அந்நாளே தேர்வு செய்ய வேண்டும்.

**திருமணம்:**

ஆண் ஜாதகப்படி சுக்ரனின் வலிமையும், பெண் ஜாதகப்படி செவ்வாயின் வலிமை பார்த்தல் அவசியம்.

திருமணம் என்பது ஒரே நிகழ்வு அல்ல. அது தொடர்ச்சியான சில காரியங்களை செய்ய வேண்டியிருக்கும். அதாவது, ஆண், பெண் ஜாதக தேர்வு முடிந்து இருவருக்கும் நல்ல பொருத்த கூடிய நாளில் முகூர்த்தம் அமைத்தல் மற்றும் அதற்கு முன்னர் செய்ய வேண்டிய முகூர்த்தக்கால் நடுதல், பத்திரிக்கை அடித்தல், புது உடை வாங்குதல், மாங்கல்யம் செய்தல், பந்தல் போடுதல், நிச்சயதார்த்தம், திருமண முகூர்த்தம், மறுவீடு அழைப்பு, சாந்தி முகூர்த்தம் என

பல சடங்குகள் வரிசையாக அமைதல் வேண்டும். எனவே அதையும் கருத்தில் கொண்டு முன் பின் நாட்களின் சுத்த மற்றும் யோக விபரங்களையும் பார்த்து திருமண முகூர்த்தம் அமைத்தல் வேண்டும்.

பஞ்சாங்க நூலில் உள்ள அட்டவணைப்படி திடீர் என்று அல்லது ஒரு முறையில் செய்யும் காரியங்களுக்கு பொதுவான நேரங்களை முகூர்த்தமாக அமைக்கலாம். பல சடங்குகள் கொண்ட நிகழ்வுகளுக்கு முன்பின் நாட்களையும், இரட்டைமாதம், போன்ற அமைப்புகளையும் கவனித்து முகூர்த்தம் அமைத்தல் மிகவும் அவசியமானது.

**பார்வை நூல்கள் :**

ஆனந்த போதினி பஞ்சாங்கம், ராஷ்டிரிய பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம், பாம்பு பஞ்சாங்கம், டேபுள் ஆப் பாவாஸ், பெரிய வருசாதி நூல்

| | | |
|---|---|---|
| கால பிரகாசிகை | – | கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் |
| பஞ்சபட்சி சாஸ்திரம் | – | Dr. சுந்தரவரதராச்சாரியார் |
| தமிழ் சர்வ முகூர்த்த சிந்தாமணி | – | எஸ்.பி.சுப்பிரமணியன் |
| அனுபோக ஜாதக ரகசியம் | – | N. சுந்தர்ராஜன் |
| குமாரசாமியம் | – | வீரவநல்லூர் குமாரசுவாமி தேசிகர் |

## குறிப்பு

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

## குறிப்பு